[illegible]
[illegible] 13 [illegible] 4
17 Oct 1925

JL
002211, N15 B
N27 13·4
18784.


REGD. No. M. 1190.



# ஆனந்த போதினி

# ANANDA BODHINI





Vol. 13. பொருளடக்கம் No. [illegible]

[stamp] NOV


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | ... 145 |
| 2. | இந்தியரும் சர்வதேச சங்[illegible]த்தரும | 147 |
| 3. | பாபு சுரேந்திரநாத் பனர்ஜீ | 151 |
| 4. | வேதாந்த சாரசங்கிரக வசனம் | ... 153 |
| 5. | ஆரியசித்தார்...சைவசித்தா | ... 156-159 |
| 6. | ஓர் பெண்மணியின் விண்ணப்பம் | 161 |
| 7. | பகட்டுப்பொருளின் படுகொள்ளை | 162 |
| 8. | ஆத்திசூடி உதாரணக் கதைகள் | ... 163 |
| 9. | காலை ஸ்நானம் | ... 164 |
| 10. | தமிழ்த் தாய்கட்கு விண்ணப்பம் | ... 165 |
| 11. | நம் நாட்டு மாதரும் ராட்டினமும் | 167 |
| 12. | கைத்தொழில் | ... 169 |
| 13. | வைத்தியம்-ஸ்நானம் | ... 171 |
| 14. | ஜேம்ஸ் வாட்டும் நீராவி இயந்திரமும் | 173 |
| 15. | ஸ்ரீமதி சாரதாமணிதேவியார் | ... 177 |
| 16. | விசுவியஸ் எரிமலை | ... 179 |
| 17. | அறிஞரின் அமுத மொழிகள் | ... 181 |
| 18. | இந்தியாவில் ஜனங்கள் ஆட்சி | ... 182 |
| 19. | அண்டத்தின் ஜாதகம் | ... 186 |
| 20. | நாவல்-விநோதம் | 187-189 |
| 21. | பதினெண் பாஷை | ... 190 |
| 22. | வர்த்தமானம்-பஞ்சாங்கம் | 191-192 |




# ...நந்த போதினி

## சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| | | ரூ. அ. ப. |
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட. | இந்தியா, பர்மா, ஸிலோன் ... ... | 1—0—0 |
| | பினங், ஸிங்கபூர், தென்னாப்ரிகா, பஸரா, மெசபொடோமியா முதலிய வெளி நாடுகளுக்கு | 1—4—0 |
| நடந்துகொண்டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை விலை | | 0—2—0 |
| சென்ற வருடங்களுடைய தனிச் சஞ்சிகை விலை | | 0—3—0 |

**ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.**

(1) சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் பூரணமாய்ப் பெயரை எழுதியனுப்பவேண்டும்.

(2) சந்தா தொகையை முன்னடி செலுத்தியாவது அல்லது வி. பி. யில் பணம் கட்டியாவது பெற்றுக்கொள்ளவேண்டும். எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆடிமாத முதல்தான் கணக்கு வைக்கப்பட்டு ஆடிமாத சஞ்சிகை முதல், சேர்த்தனுப்பப்படும்.

(3) சஞ்சிகை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் சார்ஜ் 2-அணா வோடு (15-4-1921 முதல் மணியார்டர் கமிஷன் 10-ரூபா வரையில் 2-அணா வாகையால்) வி. பி. கமிஷன் 2-அணா வி. பி.க்கு தபால் சார்ஜ் 0-0-6. ஆக 0-4-6 அதாவது 5-அணா சேர்த்து ரூபா 1-5-0 கட்டி வி. பி. யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினால் 1-2-0 மட்டுமேயாகும். ஆதலால் முன்னடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம். இதைக் கவனிக்கவும்.

(4) யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம்மாதம் 15-ம் தேதிவரையில் பார்த்து அதற்குமேல் அதே தமிழ்மாத முடிவிற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும். பிறகு தெரிவிப்போர் கிரையமனுப்பிப் பெறவேண்டும்.

(5) இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புது விலாசத்திற்கு வந்து சேரும்வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை யறிவிக்கவேண்டும். இன்றேல் அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாம் பொறுப்பாளியல்ல.

(6) சந்தா நம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப் படமாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாளி யல்ல. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபாற் பில்லையாவது அனுப்பினாலன்றி விடை யளிக்கப்பட மாட்டாது.

(7) வியாசங்களை எழுதுவோர் சுத்தமாக இலக்கணப் பிழையின்றித் தங்கள் உண்மைப் பெயருடன், மததூஷணை, பிறர் தூஷணை, துரைத்தன விரோதம் முதலியவையின்றியும், பொது ஜனங்கள் விரும்பக்கூடியனவாகவும் எழுதவேண்டும். வியாசங்களைத் திருத்தவும், அவற்றிலுள்ள சில விஷயங்களைக் குறைக்கவும், கூட்டவும்; அவற்றைப் பிரசுரிக்காமல் நிறுத்தவும் நமக்கு பாத்தியமுண்டு. எவ்வித காரணத்தைக்கொண்டும் வியாசங்கள் திருப்பியனுப்பப்படமாட்டா. வியாசக்காரர் அபிப்பிராயங்கட்கு நாம் பொறுப்பாளியாகோம்.

| | | | |
|---|---|---|---|
| Life Subscription ஜிவிய சந்தா | இந்தியா, பர்மா, சிலோன் | ரூபா | 15—0—0 |
| | அன்னிய நாடுகளுக்கு | ,, | 20—0—0 |

நா. முனிசாமி முதலியார், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6. வெங்கடேச மேஸ்திரி தெரு, தபால் பெட்டி நெ. 167. மதராஸ்.

**முக்கிய கவனிப்பு:**—கீழ் காணப்... ஆனந்த ஆங்கில பாஷா போதினியின் கிரயம் சந்தாதாரர்களுக்கு 15-11-27 வரையில் தான் ரூ. 1—4—0 இத்தேதிக்குப் பிறகு இதன்விலை ரூ. 2—0—0 ஆகையால் சந்தாதாரர்கள் இத்தேதிக்குள் வேண்டிய பு... கள் தருவித்துக்கொள்ளக் கோருகிறோம்.

11 NOV 1927

## மூன்றும் பதிப்பு

வெளிவந்துவிட்டது !

அற்புதமான அமைப்புக்களுடன்
வெளிவந்துவிட்டது!!

ஆசிரியரின்றி ஆங்கிலந் தெரிந்து கொள்ளும்

# ஆனந்த ஆங்கில பாஷா போதினி.

எம்.ஏ., எல்.டி. பட்டம் பெற்ற ஆங்கில போதகாசிரியராகிய
திருவாளர்-எம். ஷண்முகசுந்தர முதலியாரவர்களால்
இயற்றப்பெற்ற உயர்ந்த திருத்தங்களோடும்,
சிறந்த அமைப்புக்களோடும், நிறைந்த போதனைகளோடும்
இப்பதிப்பு வெளிவந்திருக்கிறது.

## 800-பக்கங்களுக்குமேல்

திக்கு காகிதத்தில் அச்சிடப்பட்டுச் சீமை காலிகோ
பைண்டு செய்யப்பட்டது.

பற்பல கதைகளும், பாரதக்கதைகளும், ஸ்ரீ கிருஷ்ணர் சரித்திர
சுருக்கமும் அடங்கியது. அவற்றிற்குப் பொருத்தமான
அழகிற் சிறந்த 16 ஆப்டோன் படங்களுடன் கூடியது.

**தமிழ் நாட்டுச் சகோதரர்களே !**

மேதினியில் உள்ள தமிழர் எல்லோர்க்கும் இனிமையாக எளிதில் ஆங்கிலம் போதிக்கத்தக்கது, உயர்ந்த இங்கிலீஷ் போதனா முறையில் முதன்மை பெற்றுத் தோன்றிய பெறுதற்கரிய, பெரும்பயன் வாய்ந்த எமது

## ஆனந்த ஆங்கில பாஷா போதினி ஒன்றே.

இதன் முத லிரண் ... க்காட்டிலும் இப்பதிப்பில், பாடமுறைகள் அதி... சேர்க்க... ருக்கின்றன. ஒரு ரூபாய் முதல் பத்தாயி... ரூபாய் வரையில் ... சம்பளத் திட்டங்களுக்கு ஒரு நா...க்கு இவ்வளவு சம்பள... என்று கண்டுபிடிக்கும் தினசரி சம்ப...டிக்கணக்கும், ...களுக்கும் நாள்களுக்

கும் தகுந்தபடி வட்டித்திட்டம் சுலபமாகக் கண்டுபிடிக்கும் விளக்கமான வட்டிக்கணக்கும், தேசங்களில் ஒவ்வொரு இடத்திலும் ஏற்படும் காலபேதம்-மணிவித்தியாச விவரமும், (அதாவது சென்னையில் இத்தனை மணிக்கு, பம்பாய், சிலோன், லண்டன், அமெரிக்கா முதலிய இடங்களில் இத்தனை இத்தனை மணி இருக்கும் என்னும் விவரமும்) அன்னியதேசத்து நாணயங்களும் அவற்றிற்குச் சரியான ஆங்கில நாணய மதிப்பும் நூதனமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் தினசரி சம்பளப்பட்டியை மாத்திரம் சிலர் தனிப் புத்தகமாகப் போட்டு 8 அணுவுக்கு விற்கிறார்கள். இதில் நாம் மிக்க பிரயாசை யெடுத்துப் பத்தாயிரம் ரூபாய் வரை கணக்குப்போட்டு இதனோடு சேர்த்திருக்கிறோம்.

உலகப் பிரசித்திபெற்ற எமது புத்தகத்திற்குப் போட்டியாக வெளிவரும் போலி விளம்பரங்களுள்ள பல புத்தகங்களை நம்பி மோசம்போகாதீர்கள். இக்காலத்தில் இல்லாததை உள்ளதாகக்காட்டி விளம்பரங்களில் எழுதுவதே எங்கும் பலரிடத்திலும் வழக்கமாகிவிட்டது. ஆதலின், அத்தகைய போலி விளம்பரங்களிலுள்ள பகட்டுரைகளைப் படித்து மயங்கிவிடாதீர்கள்; ஆங்கிலத்தை உண்மையாகவே எளிதில் போதிக்கும் அரிய நூல் எதுவென்று ஆராய்ந்து பாருங்கள்; அவ்வாறு பார்த்தால் எமது புத்தகமே அதற்குத் தகுதியானதென்பது விளங்கும். இதற்குமுன் பல புத்தகங்கள் வெளிவந்திருப்பினும், சரியான பாட முறைகளுடன் வெளிவந்திருக்கும் எமது போதினியே முதன்மைபெற்றதாகும். ஒரு விஷயத்தைப்பற்றியே பலர்பல நூல்களை வெளிப்படுத்துவது இயற்கை. அப்படி வெளிப்படும் நூல்களில் ஒன்றின்பின் ஒன்றாகப் பின்னர் வெளிவருவன வெல்லாம் ஒன்றிலும்,மற்றொன்று விசேஷமாக, 'பழையன கழிதலும் புதியன புகுதலும்,வழுவல கால வகையினானே' என்ற முறைப்படி பழைய முறைகளைத் தள்ளிப் புதிய முறைகளைச் சேர்த்து உயர்ந்த அமைப்புக்களுடன் வெளிவருதல் கூடும். இருபது வருடங்கட்கு முன்னும் ஆங்கிலம் போதிக்கும் நூல்கள் பல வெளிவந்திருக்கின்றன. இப்போது வெளிவந்தவை அவற்றிலிருந்து சிலமாறுதல்கள் அடைந்திருக்கின்றன; அவற்றையெல்லாம் எமது புத்தகம் திருத்தமும், தெளிவும் பொருந்தியது. அதனாலேயே இதன் முதலிரண்டு பதிப்புக்கள் வெளியான சில தினங்களுக்குள்ளாகவே செலவாகி இம் மூன்றாம்பதிப்பு வெளிவந்திருக்கிறது. ஆதலின், முன் வந்தவை உயர்ந்தவை யென்றும், பின் வந்தவை தாழ்ந்தவை [illegible] க்காலத்தில் எளிதாகவும் விரைவாகவும் ஆங்[illegible]வென்று பார்த்து, அத்தகைய முறையில் [illegible]ந்து ஆங்கிலஞானப[illegible]த்தை எங்கும் எவரிடத்தும் பரப்பிவ[illegible] "ஆனந்த ஆங்கில[illegible]ஷா போதினி"யை வாங்கிப் படியுங்கள்.

எமது இந்திய லேடி டிரேட் மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.






## இது, எத்தகைய சிறப்புக்கள் பெற்றது?

"**ஆனந்த ஆங்கில பாஷா போதினி**" கண்ணைக் கவரும் சிமைகாலிடைபைண்டும், உயர்ந்த பதிப்பும், சிறந்த அமைப்பும் பொருந்தியது.

"**ஆனந்த ஆங்கில பாஷா போதினி**" பல்லாயிரக்கணக்கான தமிழர்க்கு ஆங்கிலம் போதித்துப் புகழ்பெற்றது; தமிழ்நாடெங்கும் பிரசித்தியடைந்தது.

"**ஆனந்த ஆங்கில பாஷா போதினி**" இங்கிலீஷ் தெரியாத தமிழ் மக்களின் உள்ளத்தில் நுழைந்து ஆங்கிலஞான வொளிபரப்பி அழகுடன் விளங்கும்.

"**ஆனந்த ஆங்கில பாஷா போதினி**" மற்ற புத்தகங்களைப்போல் மயக்கத்தைக் கொடாமல் எவர்க்கும் இலகுவான முறையில் இங்கிலீஷ்ஞானத்தை உண்டாக்கும்.

"**ஆனந்த ஆங்கில பாஷா போதினி**" தமிழ் நாட்டினர்க்கு ஆங்கிலம் போதிப்பதற்கென்றே நூதன அமைப்புடன் இணையற்றெழுந்ததாகும். தமிழில் இதைப்போன்ற ஒழுங்கான போதனுமுறை அமைந்த நூல் வேறு இல்லை.

"**ஆனந்த ஆங்கில பாஷா போதினி**" பற்பல அறிஞரின் நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்று எப்போதும் நிலவுவது.

"**ஆனந்த ஆங்கில பாஷா போதினி**" எழுத்துப்பிழை, சொற்பிழை, இலக்கணப் பிழை முதலியவைகள் இல்லாதது; பயனுள்ள விஷயங்களே நிரம்பியது; பொருட் பொருத்தங்கள் நிறைந்தது; தெளிவுள்ளது; சகலருக்கும் பயன்தருவது; நூதனம் நூதனமாகிய பாட முறைகளிலும், அழகிய அமைப்புக்களிலும் இதுவே எல்லாவற்றிலும் சிறந்ததென்பதை, இதனை வாங்கிப் படிப்போர், ஒருவர் எடுத்துச் சொல்லாமலே உணர்ந்துகொள்ளலாம்.

## "ஆனந்த ஆங்கில பாஷா போதினி" வெளியானதற்குக் காரணமென்ன?

நெடுங்காலமாக நம் நாட்டில் ஆங்கில துரைத்தனம் நிலைபெற்றிருப்பதால் சகல விஷயங்களிலும் இங்கிலீஷ் பாஷையே ஏற்றமடைந்து நிற்கின்றது; எப்பேர்ப்பட்டவருக்கும் எந்நிலையிலும் எக்காரியத்திலும் எவ்விடத்திலும் அது மிக உபயோகமாகக்கூடியதா யிருக்கிறது; முடிவாகக் கூறுமிடத்துத் தற்கால இயற்கையை அனுசரித்துத் தோட்டிவேலை செய்பவனுக்குங்கூட அது அவசியம் தெரிந்துகொள்ளவேண்டிய பாஷையா யிருக்கிறது. அது தெரியாதவர்களுக்கு எவ்விடத்திலும் கௌரவமில்லை. எக்காரியத்திலும் பலவித இடையூறுகள் உண்டாகும்; நம் சுதேசிகளும்கூட ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளும்போது ஆங்கிலத்திற் பேச அதிக உற்சாகமுடையவர்களா யிருக்கிறார்கள். ஆனதால் ஆங்கிலந் தெரியாதவர்கள் நம் சுதேசிகளோடும் பேசமுடியாமல் நம்மவர்களாலேயே அவமதித்து ஒதுக்கித் தள்ளப்படுகிறார்கள். சுதேசிகளுக்குள்ளேயே இங்கிலீஷ் தெரியாதவர்கள் கதி இப்படியாகும்போது ஐரோப்பியர்முதலிய மேல்நாட்டாரோடு காரியத்தொடர்பு வைத்துக்கொள்வோர்க்கு இங்கிலீஷ் தெரியாமலிருந்தால் அவர்களுக்கு மிகுந்த சங்கட முண்டாகுமென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. இன்னும் ஆங்கிலமானது தற்காலத்தில் எல்லா நாட்டிலும்பரவிய ஒருபொதுப் பாஷையாயிருப்பதால், தமிழ் தெரியாத மற்ற எந்த நாட்டினரோடும் பேசி விஷயங்கள் தெரிந்துகொள்வதற்கும் அனுகூலமா யிருக்கின்றது. இத்தகைய பெரும் பயன்களைத்தரும் இந்த ஆங்கில பாஷையைத் தெரிந்துகொண்டவர்க்கு எண்ணற்ற நன்மைகளுண்டாகின்றபடியால், எல்லோருமே இதனைத் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாகின்றது. அங்ஙனம் தெரிந்துகொள்வதற்காகவே இந்த அரும் பெரும் "ஆனந்த ஆங்கில பாஷா போதினி"யை இப்பொழுது நாம் வெளிப்படுத்தி யிருக்கின்றோம்.

187484

## இது, எவ்வகைப் பயன்களைத் தருகின்றது ?

இதனைச் சிரத்தையுடன் கற்றுக்கொள்ளத் தொடங்குவோர் பணச்செலவில்லாமலும், உபாத்தியாயர் உதவியில்லாமலும், வேறெவ்விதக் கஷ்டமுமில்லாமலும் மிக எளிதில் இங்கிலீஷ் பேசவும் படிக்கவும் எழுதவும் கற்றுக் கொள்ளலாம். சில ஆயிரக்கணக்கான பணச்செலவு செய்து 10-வருஷம் படிப்பதனால் எவ்வளவு ஆங்கிலத்தேர்ச்சி யுண்டாகுமோ அவ்வளவு தேர்ச்சியை ஒரு மாதம் அல்லது 40 நாட்களில் இப்புத்தகத்தின் உதவியைக்கொண்டு அடைந்து, ஆங்கிலத்தை அதிவிரைவில் படித்துக்கொள்ளலாம்; இப்புத்தகமொன்று வாங்கிக்கொண்டால் இங்கிலீஷ் கற்றுக்கொள்வதற்காக உபாத்தியாயருக்கு அதிகச் சம்பளங்கொடுத்து அவரிடம் புத்தகத்தைத் தூக்கிக்கொண்டுபோய் அலையவேண்டியதில்லை. ஒவ்வொருவரும் தாங்கள் இருக்குமிடத்திலேயே அதனைச் சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். மனிதர் தாமே சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளத்தக்க மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாக அமைக்கப்பெற்றிருக்கின்றன. அவை வெகு சுலபமாக ஆங்கிலஞானத்தை உண்டாக்கிவிடும்.

## இது, முக்கியமாக எவருக்கு உபயோகமானது?

இது, தமிழ்மாத்திரம் தெரிந்து ஆங்கிலம் தெரியாமலிருக்கும் சகலருக்கும் பயன்படக் கூடியதாயினும், முக்கியமாக மணியகாரர், கர்ணம், வில்லேஜ் முன்சீப் முதலிய கிராம வேலைக்காரருக்கும், சிலோன் தோட்டங்களிலிருக்கும் கங்காணிமார்கட்கும், மலேயா, பர்மா, தென்னாப்பிரிக்கா முதலிய இடங்களிலுள்ள மேஸ்திரிமார்களுக்கும், துரைமார்களிடம் வேலைசெய்யும் பட்லர், மேட்டி, கூக், ஆயாள், பாய், தோட்டமேஸ்திரி, கோச்மென் முதலியவர்களுக்கும், பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கும், சிறுமிகட்கும், மற்ற பெண்கட்கும், இங்கிலீஷ்தெரியாத தனவந்தருக்கும் மிக்க உதவிசெய்யக்கூடியது. இன்னும் இங்கிலீஷ் தெரியாத கிராமவாசிகள் பலரும் இதனைப் படித்தால் இங்கிலீஷ் பேசவும், எழுதவும் தெரிந்துகொள்வார்கள். முடிவாகக் கூறுமிடத்துத்தமிழர்கள் எல்லோருமே இதனை வாங்கிப்படிக்கத் தொடங்குவார்களாயின் இங்கிலீஷ் தெரியாதவர் எவருமே யிராரென்று திண்ணமாகச் சொல்லலாம்.

## இது, கிராம வேலைக்காரருக்கு எவ்வாறு பயன் தருகிறது?

இங்கிலீஷ் தெரியாத மணியகாரர் முதலிய கிராம வேலைக்காரர்கள் இதன் மூலம் எளிதில் அதனைக் கற்றுக்கொள்வதால் கலெக்டர், தாசில்தார் முதலியவர்களிடத்தும் நேரில் சம்பாஷணைசெய்து கடிதங்கள் எழுதி நன் மதிப்புப் பெறுகிறார்கள்.

## கங்காணிகளுக்கும், மேஸ்திரிகளுக்கும் எவ்விதத்தில் உதவி செய்கின்றது ?

அவர்கள் இதன்மூலம் எளிதில் இங்கிலீஷ் தெரிந்துகொள்வதால் துரைமார்களிடம் சகல விஷயங்களிலும் சம்பாஷணை செய்தும், கடிதமெழுதியும் உறவாடி மிகுந்த செல்வாக்குப் பெறுகிறார்கள்.

## பட்லர் முதலியவர்கள் இதனால் எவ்வாறு நன்மை அடைகிறார்கள்?

இவர்கள் எப்பொழுதும் துரை, துரைசானிகளிடமே தொழில் செய்பவர்களாதலின், இதன்மூலம் ஆங்கிலம் தெரிந்துகொண்டால் அவர்களோடு எவ்விஷயத்திலும் ஆங்கிலமே பேசி அவர்கள் தயவை அதிகமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

## பள்ளிக்கூடச் சிறுவர்க்கு இது எவ்வாறு உதவி செய்கின்றது ?

இதில் எழுத்துக்களையும், பதங்களையும் கிரமமாக உச்சரிக்கும் விதங்களும், தமிழில் இங்கிலீஷ் பதப்பொருள்களும் தெளிவாக விளக்கப்பட்டிருப்பதால், மாணவர்கள் இதனால் சீக்கிரமாக இங்கிலீஷ் எழுத்துக்களையும், பதங்களையும் கற்றுக்கொண்டு அப்பாஷையில் மிகுந்த தேர்ச்சியடைந்துவிடலாம்.

## பெண்களுக்கு எவ்வாறு உதவுகின்றது ?

அவர்கள் இதன்மூலம் ஆங்கிலம் தெரிந்துகொள்வதால், இங்கிலீஷ் படித்து உத்தியோகத்திலிருக்கும் தம் கணவருடன் இனிமையாக ஆங்கில சம்பாஷணை செய்வார்கள்; ஆங்கிலப் பத்திரிகைகளைப் படித்துப் புறநாட்டு வர்த்தமானங்களைத் தெரிந்துகொள்வார்கள். ஆங்கிலப் புத்தகங்களைப் படித்துக் குடும்பத்திற்குப் பொருத்தமான விஷயங்களை எடுத்துக்கொள்வார்கள்.

## தனவந்தருக்கு இதனால் என்ன சிறப்பு ?

அவர்கள் இதன் துணையைக்கொண்டு இங்கிலீஷ் கற்றுக்கொள்வதால் கவர்னர் முதலிய பெரியாரோடும் சம்பாஷித்து உறவாட ஏதுவாகும்.

## மற்ற எல்லா வகுப்பாருக்கும் எப்படி இது உதவி செய்கின்றது!

ஒவ்வொரு வகுப்பினர்க்கும் சம்பாஷணைக்கு அவசியமான விஷயங்களெல்லாம் இப்போதினியில் சேர்க்கப்பட்டிருப்பதால் சகலரும் தங்கள் தங்களுக்கு வேண்டிய சொற்களை எளிதில் கற்றுச் சீக்கிரம் ஆங்கிலத்தில் தேர்ச்சியுற்றுக் கீர்த்திபெறுவார்கள்.

## இத்தகைய பெரும்பயன்தரும் புத்தகம் எப்பொழுதும் கிடைப்பதருமை.

# ஆர்டருக்கு முந்துங்கள்! பின்பு கிடைக்கவில்லையே என்று வருந்தாதீர்கள் !!

இரண்டாம்பதிப்பின் பிரதிகள் பல்லாயிரக் கணக்கில் பிரசுரித்தும் சீக்கிரம் செலவாய்விட்டதால் இம்மூன்றும்பதிப்புப் புத்தகங்களும் அதி விரைவில் செலவாகிவிடும். வேண்டுவோர் உடனே எழுதி விலைக்குப் பெற்றுக்கொள்ளவேண்டும். தாமதிப்போர் இம்மூன்றும் பதிப்புப் புத்தகம் பெறுமல் நான்காம் பதிப்பு வருமட்டும் காத்திருக்க ஏதுவாகும். இரண்டாம் பதிப்புப் புத்தகம் வாங்கப் பிந்தியதால் 600-பேர்வரை காத்திருந்து இம்மூன்றும் பதிப்பு வந்தபின் புத்தகம் வாங்கியிருக்கிறார்கள். இதனை நண்பர்கள் கவனித்து முந்திக்கொள்ளவேண்டும்.

## இதன் விலை ரூபா 2—0

## ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களுக்கு

## 15-11-27 வரை ரூபா 1—4. தபாற்செலவு அணு 8

**சந்தாதாரர்கள், தங்கள் சந்தா நம்பரைத் தெரிவித்தால் மாத்திரமே ஷை விலைக்குப் புத்தகம் கிடைக்கும்.**

| அத்தியாயம். | பக்கம். |
|---|---|
| 17. சுந்தரேசன் மறுபடி சிறையாக்கப்படல்-படுமோசக்காரன் நடக்கை விளங்கியது-சதி புருடர் பிரிவினை - மறுபடி மிக்க கோரதண்டனை-சித்தம் மாறுதல் - சதி புருடர் மறுபடி ஒரு விடத்தில்-சுந்தரேசன் சதிக்காரன் மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ள முயலல் - சின்ன தம்பி விஷயங்கள் - கெடுவான் கேடு நினைப்பான். | 203 |
| 18. சின்னசாமி தண்டனை யடைதல்-ஜெகநாதன் திருமண யோசனை-அவனும்தேவராஜுப் பிள்ளையும்-வஞ்சந் தீர்த்துக் கொள்ள முயலல்-தந்திரயோசனை மித்ருபேதம் - பத்மாவதி யம்மாளும் அமிர்தவல்லியும் ஜெகநாதன் வீட்டில் - அதிசய தந்திரச் செயல்கள். | 221 |
| 19. காதல் விஷயங்கள் - மனைவியின் துரோகச் செயல்கள்-வஞ்ச தந்திரம்-ஆச்சரிய சமாசாரம்-குழப்பங்களும் சந்தேகமும் ஜெகநாதன் மனக்கலக்கம். | 236 |
| 20. லாயர் நோடீசு — பெருங்குழப்பம்-சுந்தரேசன் - மனக்கலக்கம் துஷ்டன் தண்டனைக்குத் தப்பினன் - சதிபதிகளின் மனோவேதனை. | 253 |
| 21. அக்கிரமக்காரன் அநீதங்கள் — சதிக்காரன் - படுமோச ஆலோசனைகள்-மர்மமான ஆள். | 266 |
| 22. சுந்தரேசனுடைய தீவினை - அக்கிரமக்காரர்களின் அநீதம் - மறுபடி சிறையாக்கப்படல் - பெருஞ்சதி-நெஞ்சு திடுக்கிடும் அதிசய சம்பவங்கள். | 278 |
| 23. தேவசுந்தரியின் ஆபத்து விவரம்-பிராது-சூதும் அநீதநடக்கையும் - தேவசுந்தரியின் மனோவேதனை-சுந்தரேசன் நடக்கை-இடம் மாறுதல். | 291 |
| 24. சுந்தரேசன் பட்டாளம் மங்காபுரம் செல்லல் — தேவசுந்தரி தந்தையைச் சந்தித்தல்-வியாஜ்ஜிய முடிவு-சுந்தரேசன் தீய நெறிகள் மிக்க துக்க சம்பவங்கள். | 303 |
| 25. கற்பின் பெருந்தன்மையும் பதியன்பும்-கோபத்தின் கொடுமை-சுந்தரேசன் பிராணாபத்தில் சிக்கல். | 317 |
| 26. ஜகநாதன் தன் வீட்டில் — மாளிகையில் நடக்கும் சம்பாஷணை-மிக்க துயரமான சமாசாரம்-அதிசய சம்பவங்கள் - பெரிய இரகசியம் வெளியாதல் | 327 |
| 27. குருவின் அக்கிரம நடத்தையும் மற்ற விவரங்களும் - சுந்தரேசன் மரண தண்டனை - சிறைச்சாலையில் கோரக்காட்சிகள் - கடவுளின் அற்புதச் செயல்கள்-துஷ்டன் கதி. | 340 |
| 28. சுந்தரேசன் மன்னிப் படைதல்-கொலை-சதிக்காரன் தண்டனை யடைதல் - ஆச்சரிய இரகசியங்கள்-சந்தோஷ முடிவு | 352 |


## அர்ஜுனலிங்கும், சுந்தரும்.

(ஸ்ரீமாந் - ஆரணி - குப்புசாமி முதலியாரவர்கள் எழுதியது.)

இது, இப்போது புதிதாக வெளிவந்திருக்கும் நாவல். இதில் இரண்டு துப்பறியும் நாவல்கள் அடங்கி யிருக்கின்றன. இவற்றுள், துப்பறியும் நிபுணர்கள் சாமார்த்தியமாகக் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதோடு ஒரு குரங்கும் கிளியும் மர்மமான கொலைக்கேஸை வெளியாக்குவது விநோதமாயிருக்கும்; குற்றம் வெளியாகியும் குற்றவாளி விடுதலை யடைதல் ஆச்சரியமாயிருக்கும்.

இதன் விலை அணு 2.

**காமவல்லி** இன்பரசம் பொருந்தியது, பெண்களின் மாயஜாலத்தை விளக்குவது, நீதியைப் போதிப்பது, நன்னெறியைக் காட்டுவது. **இதன் விலை அணு 8.**



இர்வின் பிரபுவின் மனைவி.

நமது இராஜப்பிரதிநிதியும் அவர் மனைவியும்.



இர்வின் பிரபு.

உ

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESEKVED.)

தொகுதி 13 } பிரபவஸு ஐப்பசிமீ கஉ / 1927ஸு அக்டோபர்மீ 17உ { பகுதி 4

## கடவுள் வணக்கம்.

காரிட்ட வாணவக் கருவறையி லறிவற்ற
கண்ணிலாக் குழவி யைப்போல்
கட்டுண் டிருந்தவெமை வெளியில்விட் டல்லலாங்
காப்பிட் டதற்கி சைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ம் பொய்யுடல்
பெலக்கவினை யமுத மூட்டிப்
பெரியபுவ னத்தினிடை போக்குவர வுறுகின்ற
பெரியவினை யாட்ட மைத்திட்
டேரிட்ட தன்சுருதி மொழிதப்பி னமனைவிட்
டிடருற வுறுக்கி யிடர்தீர்த்
திரவுபக லில்லாத பேரின்ப வீட்டினி
லிசைந்துதுயில் கொண்மி னென்று
சீரிட்ட வுலகன்னை வடிவான வெந்தையே
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
சின்மயா னந்த குருவே. (1)

அகண்ட மென்ன வருமறை யாகமம்
புகன்ற நின்றன்மை போதத் தடங்குமோ
செகங்க ளெங்குந் திரிந்துநான் மோனத்தை
உகந்த பேருனை யொன்றுவ னையனே. (2)

ஐய னேயுனை யன்றி யொருதெய்வம்
கையி னாற்றொழு வுங்கரு தேன்கண்டாய்
பொய்ய னாகிலும் பொய்யுரை யேன்சுத்த
மெய்ய னாமுனக் கேவெளி யாகுமே. (3)

## அரும்பொருள் விளக்கம்.

1. "தாயிலும் அன்பன் பூமகள் நண்பன்" என்கிறபடி இறைவன் தாயைப் பார்க்கிலும் பேரருளுடையவனாதலின், அவ்விறைவனைத் தாயின் ஸ்தானத்திலிருத்திச் சேதனர் வழிபடுவது மரபு.

தாயானவள் தன்கருப்பையிற் கட்டுண்ட குழந்தையை வெளிப்படுத்தி அதன் பாதுகாப்பிற்கு உரித்தான பற்பல தொழிலையும் மேற்கொள்ளுவதுபோல, இறைவனும், ஆணவமலத்தா லேற்படுகின்ற கருக்குழியில் எத்தகைய உணர்ச்சியு மின்றிக் குருட்டுப் பிறவியைப்போல் கட்டுப்பட்டிருந்த உயிர்களை வெளிவரச் செய்து உரிய பெயர்தந்து பாதுகாப்பது மல்லாமல், தன் ஆணையை மீறி நடப்பின் தண்டனை யடையவுஞ் செய்கின்றனன். பின்னும் அவன் உயிர்கள்மீது கொண்டுள்ள காருண்யத்தால் அவ்வுயிர்கட்கு நேர்ந்த துன்பத்தைப் போக்கி நிரதிசயானந்த வீட்டில் நித்திரை புரியவும் வைக்கின்றனன்.

காரிட்ட ஆணவம்—இது, எல்லாப் பதார்த்தங்களையும் மறைத்துத் தன்னைக் காட்டி நிற்கும் பூத இருள் போலன்றி, தன்னையுங் காட்டாது, தனக்குள்ளே யிருக்கின்ற ஆன்மாவையுங் காட்டாது இருப்பது. கார்இட்ட=கருமையாகிய.

கருவறை=கருவாகிய சிறுவீடு.

'அறிவற்ற கண்ணிலாக் குழவியைப்போல் கட்டுண்டிருந்த வெமை' என்பது எல்லா உயிர்களையும், ஆணவமலம், பிடித்து, மாணிக்கமணியை விஷ வாய்க்கு ளடக்கிய பாம்பைப்போலவும், பச்சையாய் முளைத்து உலர்ந்து விறகாகுமட்டும் அக்கினியைத் தெரியாமல் மறைத்து வைத்திருக்கும் காட்டம் போலவும், ஞானக்கண்ணை மறைத்து அறிவுஞ்செயலும் இறக்கும்படி வைக்குமாதலின், அவ்வாறிருந்த எங்களை என்பதாம்.

அல்லலாங் காப்பிட்டு—பாலகுமார விருத்தப் பருவத்துச் சகலாவத்தைப் படுத்தி, பருவத்துக் கேதுவான கலாதி ஞானத்தினைக் கொடுத்து, செயலற்ற உயிர்கள் வாங்கிக்கொள்ள வாழ்வதற்கேற்ற கருவிகளை யளித்து, உயிருக் குயிராயிருந்து இறைவன் காப்பன் என்பதாம். இக்காப்பு கன்மத்துக்குத் தக்கபடி அமைய ஆகாமியம் ஏறுதற்குக் காரணமாய்ச் சென்மத்தை யுண்டாக்குமாதலால் 'அல்லல்' எனப்பட்டது.

இசைந்தபேர் = இறைவன் பெயரும் அவனுடைய அடியார்களின் பெயரும்.

பெலக்க=பலப்பட.
போக்கு வரவு=இறப்பு, பிறப்பு.
உறுக்கி=தண்டித்து.

2. சர்வ வியாபியாயுள்ள இறைவனை வியாபக அருட் போதத்தாலல்லது ஏகதேசப்பட்ட சீவ போதத்தா லறியக் கூடாது. மூர்த்திதலந் தீர்த்த முறையே தரிசித்தவர்க்கே மௌன நிலையுண்டு.

போதம்=தற்போதம்.
உகந்த=அடைந்த.

ஆனந்தபோதினி
பிரபவஹூ
ஐப்பசிமீ கஉ

## இந்தியர்களும் சர்வ தேச சங்கத்தாரும்.

உலகத்திலுள்ள எல்லாத்தேச அரசாங்கத்தார்களும் ஒன்றுபட்டவர்களா யிருக்கவேண்டுமென்று ஆதியில் டென்னிசன் என்னும் பிரபல ஆங்கிலக்கவி கருதியது இப்போது ஒருவாறு நிறைவேறியுளது. முன்பு அமெரிக்கா அரசாங்கத் தலைவராயிருந்த உட்ரௌ வில்சன், உலகத்திலுள்ள எல்லாத்தேச அரசாங்கத்தார்களின் சங்கம் ஒன்று ஏற்படுத்துவதற்கு அதிக பிரயத்தனஞ்செய்த தன் பயனாக அத்தகைய சங்கம் இப்போது ஏற்பட்டுள்ளது. இந்தச் சங்கத்தை ஏற்படுத்த இப்போதுதான் முயற்சி செய்யப்பட்டதாக வாசகர்கள் நினைக்கலாகாது. இதற்குமுன் பல சமயங்களில் பிரயத்தனஞ் செய்யப்பட்டிருக்கிறது. ஆதியில் கிரீஸ் தேசத்தில் 'அச்சயன் சங்கம்' என்றும், 'எட்டோலியன் சங்கம்' என்றும், ஜெர்மனியில் 'யால்வரின் சங்கம்' என்றும் சில சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன; பிரான்ஸ் தேசத்திலும் இத்தாலி நாட்டிலும் இத்தகைய சங்கங்கள் ஒருகாலத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்தன. ஆனால், இந்தச் சங்கங்களெல்லாம், தங்களுக்கருகில் அதிக ஆதிக்கம் பெற்றிருந்த அரசாங்கத்தார்களுக்குச் சரி சமானமாயிருக்க, சில நாடுகளின் அரசாங்கத்தார்கள் ஒன்றுபட்டிருப்பதற்கு ஏற்படுத்தப்பட்டனவாகும். இவ்வாறு அவர்கள் அன்பின் மேலீட்டினால் ஒன்றுபடாமல் பயத்தின் காரணமாக ஒன்றுபட்டிருக்க முற்பட்டபோதிலும், அவர்களுள் ஒவ்வொருவரும் மற்றவர்களுக்குத் தெரியாமல் இரகசியத்தில் பல ஏற்பாடுகள் செய்தபடியால், நாளடைவில் அவர்களுக்குச் சங்கத்தின் விஷயத்தில் ஊக்கம் குன்றியது. அவர்கள், தங்கள் சங்கத்தில் ஒன்றுகூடிப் பல விஷயங்களைப்பற்றி யோசித்துப்

பல தீர்மானங்கள் செய்தனர். ஆனால், சங்கத்தில் சேர்ந்திருந்த அரசாங்கத்தார்களின் பண சம்பந்தமாக அவர்களுக்கு யாதொரு அதிகார மில்லாம லிருந்தபடியாலும், அவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டபடி காரியத்தை நடத்துமாறு சங்கத்தில் சேர்ந்திருந்த அரசாங்கத்தார்களைப் பலவந்தம் செய்வதற்கு அவர்களிடத்தில் சங்கத்தைச் சேர்ந்த போர்வீரர்க ளில்லாம லிருந்தபடியாலும் அவர்கள் ஒன்றும் செய்ய முடியாமற் போய்விட்டது; அவர்கள் கூட்டத்தில் செய்யப்பட்ட தீர்மானத்தின்படி காரியத்தை நடத்தாத ஓர் அரசாங்கத்தார் விஷயமாக யாதொரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ள அச்சங்கத்தார் இயலாதவர்களா யிருந்தார்கள். இத்தகைய சங்கம் ஆதியில் பல சமயங்களில் ஏற்பட்டிருந்தும் யாதொரு நலனும் ஏற்படாமற் போய்விட்டது; சங்கத்தில் சேர்ந்திருந்த அரசாங்கத்தார்கள் சங்கத்தின் விஷயமாக, தக்க சிரத்தை காட்டாததனால் சங்கம் நாளடைவில் அழிந்து போய்விட்டது. அதன் பின்னர், ஒவ்வொரு தேச அரசாங்கத்தாரும் யுத்த ஆயுதங்களையும் போர்வீரர்களையும் பெருக்க முற்பட்டனர்; அவர்களுக்குள் அடிக்கடி யுத்தம் நிகழ்ந்தது. 1914-ம் ஆண்டிலிருந்து 1918-ம் ஆண்டுவரையில் நடைபெற்ற உலக மகாயுத்தத்தில் 32 தேசங்களின் அரசாங்கத்தார்களும் ஜனங்களும் ஈடுபட்டிருந்தனர். அந்த யுத்தம் ஏற்பட்டதன் பயனாக உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களின் ஜனங்களுக்கும் அதிக கஷ்டமும், வறுமையும், சஞ்சலமும் ஏற்பட்டபடியால், உலகில் மறுபடியும் யுத்தம் ஏற்படாத படிக்கும் உலகில் ஜனங்கள் நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் வாழும்படிக்கும் செய்வதற்கு மிஸ்டர் வில்சனின் முயற்சியினால் 'உலகத்திலுள்ள எல்லாத் தேச அரசாங்கத்தார்களின் சங்கம்' என்று பெயரிடப்பட்ட ஒரு சங்கம் சில வருடங்களுக்குமுன் ஏற்படுத்தப்பட்டு, அச்சங்கத்தின் காரியாலயம், ஐரோப்பாவிலுள்ள தேசங்களில் மிகச் சிறியதான சுவிட்ஸர்லாண்ட் தேசத்தின் தலை நகராகிய ஜினீவாவில் ஸ்தாபிக்கப்பட்டது. இந்தச் சங்கத்தில் உலகத்திலுள்ள எல்லா அரசாங்கத்தார்களும் அங்கத்தினராகச் சேரலாமென்றும், அங்கத்தினர்கள், சங்க விஷயமாக ஏற்படும் செலவுக்கு, சங்கத்தார் நிச்சயிக்கும் சந்தாவைச் செலுத்த வேண்டுமென்றும், உலகத்திலுள்ள ஜனங்களையோ அல்லது ஒரு தேசத்திலுள்ள ஜனங்களையோ பாதிக்கும் விவகாரங்களைப்பற்றி யோசித்து ஒரு முடிவு தீர்மானிப்பதற்கு சங்கத்தில் சேர்ந்திருக்கும் அரசாங்கத்தார்களின் பிரதிநிதிகள்



வருடத்திற் கொருமுறை ஒன்றுகூடி யோசிக்கவேண்டுமென்றும், சங்கத்தில் சேர்ந்திருக்கும் அரசாங்கத்தார்களில் எந்த இரண்டு அரசாங்கத்தார்களுக்காவது எந்த விஷயத்தைப்பற்றியாவது தகராறு ஏற்பட்டால் அந்த இரண்டு அரசாங்கத்தார்களும் தங்களுக்குள் ஏற்பட்ட தகராறுக்குரிய விருத்தாந்தங்களை உடனே சங்கத்தார்க்குத் தெரிவிக்க வேண்டுமென்றும் சங்கத்தார் விதிகள் ஏற்படுத்தியிருக்கின்றனர். இந்தச் சங்கம், மிஸ்டர் வில்சனின் முயற்சியினால், 1914-18-ம் வருட யுத்தத்தில் வெற்றியடைந்த அரசாங்கத்தார்களால் ஏற்படுத்தப்பட்டதாகும். சங்கத்தார், ஜெர்மனி அரசாங்கத்தாரைச் சில மாதங்களுக்கு முன் வரையில் சங்கத்தில் ஓர் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளப் பிரியப்படாமல், பிறகு சேர்த்துக்கொண்டனர். இந்தச் சங்கம் ஏற்பட்டதற்கு அமெரிக்கா அரசாங்கத்தார் ஆதிபீடமா யிருந்தபோதிலும் அவர்கள் பிறகு இந்தச் சங்கத்தின் ஓர் அங்கத்தினராகச் சேர விரும்பவில்லை. சங்கத்தில் சேர்ந்திருக்கும் அரசாங்கத்தார்களில் இங்கிலாந்து அரசாங்கத்தாரும் பிரென்சு அரசாங்கத்தாரும் முதன்மையானவர்களா யிருக்கிறார்கள். இந்திய அரசாங்கத்தாரும் இந்தச் சங்கத்தில் சேர்ந்திருக்கிறார்கள். சங்கவிஷயமாக ஏற்படும் செலவுக்குத் தேவையாயுள்ள பணத்தைப் பெறுவதற்குச் சங்கத்தார், அங்கத்தினர்களுக்குப் பலவிதமான சந்தா நிச்சயித்திருக்கிறார்கள். அவர்கள் சந்தா விஷயமாக, இந்திய ஜனங்களாகிய நம்மை இங்கிலாந்து ஜனங்களுடனும், பிரான்சு ஜனங்களுடனும் சேர்த்திருக்கிறார்கள். அவர்கள் இங்கிலாந்து அரசாங்கத்தாருக்கும் பிரான்சு அரசாங்கத்தாருக்கும் விதித்திருக்கும் சந்தாவை நம் இந்திய அரசாங்கத்தாருக்கும் விதித்திருக்கிறார்கள். இங்கிலாந்து, பிரான்ஸ், இந்தியா ஆகிய இந்த மூன்று தேசங்களின் அரசாங்கத்தார்கள், மற்ற அரசாங்கத்தார்கள் செலுத்தும் சந்தாவுக்கு அதிகப்பட்ட சந்தா செலுத்துகிறார்கள். இந்தச் சங்கத்தில், 32-கோடி இந்தியர்களாகிய நாம் அங்கத்தினராகச் சேர்ந்திருந்தபோதிலும் நமக்கு யாதொரு நற்பயனும் இதுபரியந்தம் ஏற்படவில்லை. ஏழை ஜனங்களாகிய நாம் செலுத்தும் வரிப்பணத்திலிருந்து வருடா வருடம் பல லக்ஷக் கணக்கான ரூபாய்கள் சந்தாவாகச் செலுத்தப்படுகின்றன. சங்க விஷயமாகவுள்ள காரியங்களைக் கவனிப்பதற்குப் பெருத்த சம்பளத்தில் அனேக உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நாம், சந்தாவாகப் பல லட்சக் கணக்கான

ரூபாய்கள் செலுத்தியபோதிலும், நம் நாட்டிலுள்ள 32-கோடி மக்களில் ஒருவரையாகிலும் சங்கத்தார், சங்கக் காரியாலயத்தில் சமீபகாலம் வரையில் ஓர் உத்தியோகஸ்தராக நியமிக்கவில்லை. நமக்கு விதிக்கப்பட்டிருக்கும் சந்தா அதிகமானதா யிருக்கிறபடியால் அதைக் குறைக்க வேண்டுமென்று நம் இந்திய அரசாங்கத்தார் சங்கத்தாருக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பி யிருக்கிறார்கள். ஆனால், சங்கத்தார் இதைக் குறைக்கமாட்டார்களென்று தெரியவருகிறது. அவர்கள், இந்தியர்களாகிய நமக்கு அனுகூலம் ஏற்படுவதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்யக் கிஞ்சித்தேனும் சிரத்தை எடுத்துக் கொள்வதில்லை. இங்கிலாந்து அரசாங்கத்தாரும், அந்த அரசாங்கத்தாருக்கு உட்பட்ட அரசாங்கத்தார்களும் ஒன்றுகூடிய ஒருகூட்டம் சமீபத்தில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திற்கு இந்திய அரசாங்கத்தாரின் பிரதிநிதியாகச் சென்றவர், அக்கூட்டத்தில் பேசுகையில், இந்தச் சங்கத்தில் அங்கத்தினரா யிருக்கும் இந்திய அரசாங்கத்தாரை மற்ற அரசாங்கத்தார்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இந்திய அரசாங்கத்தார், ஒரு சபையார் முன்னிலையில் பாடும் ஒரு பெண்மகளுக்கு ஒப்பாக விருப்பதாகக் கூறினார். அவர் கூறியதுபோல், இந்திய அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டு இந்தச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்திற்கு அனுப்பப்படும் நம்முடைய இரண்டு பிரதிநிதிகள், ஆங்கிலேயர் அணியும் உடை தரித்துக்கொண்டு, சங்கத்தின் வருடாந்தரக் கூட்டத்தில் அதிக கம்பீரமாக அமர்ந்து, தாங்கள் ஆங்கில மொழியில் பேசுவதில் வல்லவர்களென்பதை மற்ற அரசாங்கத்தார்களின் பிரதிநிதிகள் தெரிந்துகொள்ளும்படிக்கு அம்மொழியில் கொஞ்ச நேரம் பேசுகிறார்கள். அவர்கள் அக்கூட்டத்தில் பேசும் விஷயங்களைப்பற்றி மற்ற அரசாங்கத்தார்கள் தக்கபடி கவனிப்பதில்லை. இந்திய ஜனங்களாகிய நாம், இந்தச் சங்கத்தில் அங்கத்தினரா யிருந்து வருடத்தில் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் சந்தா செலுத்திக் காணும் பலன் இதுதான்.

ஓம் தத் ஸத்.




## பாபு சுரேந்திர நாத் பனர்ஜி.

(105-ம் பக்கத் தொடர்ச்சி)

**'ஸிவில் சர்விஸ்'** உத்தியோகம் இல்லாது போனதைக் குறித்து அவர் முதலில் சிறிது வருந்தினாரெனினும், கல்வி இலாகாவில் பிரவேசித்தபிறகு அவர் அதிக ஊக்கத்துடன் உழைத்து வந்தார். அவருடைய போதனாசக்தி வங்காளமெங்கும் புகழ் மணத்தைப் பரப்பிற்று. 1876-ல் இவரை ஆங்கில உபந்நியாசகராக 'மெட்ராபாலிடன்' கலாசாலையில் நியமித்தார்கள். இதோடுகூட 1881-ல் அவர் பிரீ சர்ச்சு கலாசாலையிலும் சொற்பொழிவாளராக இருந்து வந்தார். சுதேச பாஷாபிமானங்கள் தோன்ற 1882-ல் பாபு ஓர் சிறு தேசீயக் கலாசாலையை ஸ்தாபித்து அதற்கு 'லார்டு ரிப்பன்' கலாசாலையென்று பெயரிட்டார். வங்காளத்தின் பெரிய அறிவாளிகளை இக்கலாசாலை வளர்த்துவந்தது. இந்தியர்களே இக்கலாசாலையில் உபந்நியாசர்களாக நியமிக்கப் பட்டார்கள். இக்கழகம் வங்காளத்தில் பொன்னே போல் போற்றப்பட்டு வந்ததால் பல சீமான்கள் அதற்கு உதவிபுரிந்து வந்தார்கள். பனர்ஜியின் கழகத்தொண்டு இவ்வாறாக, அவர்,

### பக்தியுள்ள பத்திராதிபர்

பதவியிலிருந்து செய்துவந்த வேலையைப்பற்றி சிறிது வரைவோம். லார்டு லிட்டன் இராஜப்பிரதிநிதியாக விளங்கியகாலத்தில், பாபு, ஸ்ரீஜத் W. C. பனர்ஜியால் ஆரம்பிக்கப்பட்ட வங்காளி என்ற பத்திரிகையின் ஆசிரியர் பதவியை ஏற்றார். அத்துறையில் சித்த சுத்தியுடன் தீவிரமாய் உழைத்துவந்தார். இவர் வங்காளிப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தபோது வேறு எந்த வெளியீடும் வங்காளத்தில் தலையெடுக்க முடியவில்லை. அக்காலத்தில் 'வங்காளி' ஒன்றுதான் வெளி நாடுகளில் சொந்த நிருபர்களை வைத்து நடத்திவந்தது. பத்திரிகாசிரியத் தொழிலில் கண்டதைக் கண்டவாறே எழுதி, சத்தியத்தை ஸ்தாபித்து, அதர்மத்தைக் கண்டித்து வருபவருக்கு ஆபத்து வந்தணுகுவது சகஜம். பனர்ஜி அன்னியரின் சில அடாத செயல்களைக் கண்டித்து வந்தார். இதைக்கண்ட அவர்கள் இவரை அடக்க, தக்கசமயம் பார்த்திருந்தனர். தருணமும் வந்தது. 1883-ல் கல்கத்தா நியாயாதிபதிகள் ஒருவழக்கில் நீதிஸ்தலத்திற்கு ஆலயத்திலுள்ள விக்ரகத்தைக் கொண்டு வரும்படி உத்திரவிட்டதைக் குறித்து வங்காளி தீவிரமாகக் கண்டித்து எழுதியது.

அதனால் இவர் இரண்டுமாதக் கடுங்காவல் அனுபவிக்க நேர்ந்தது. பனர்ஜி மன்னிப்புக்கேட்டு மன்றாடியும் நீதிபதிகள் மறுத்தனர். பாபு சிறை

வாசஞ்செய்து திரும்பியதும் வங்காளத்தில் சுற்றுப்பிரயாணம் செய்து மக்களுக்குத் தேசாபிமானத்தை யூட்ட ஆரம்பித்தார். இவர் சென்ற இடமெல்லாம் மக்கள் இவருக்குச் சிறப்புச் செய்து இவரைக் கொண்டாடினர். வங்காளத்தால் ஏனைய மாகாணங்களிலும் சுதேசாபிமானம் சுடர்விட்டெரிய வாரம்பித்தது. லார்டு லிட்டன் காலக்கிளர்ச்சியின்போதும், லார்டு ரிப்பனின் ஒப்பான உதவியின்போதும், லார்டு கர்சனின் காருண்ய பரிபாலனத்தின் போதும், லார்டு மிண்டோவின் சட்ட சீர்திருத்தங்கள் நிகழ்ந்தபோதும், வங்காளிப் பத்திரிகையின் வாயிலாக இவர் புரிந்துவந்த தொண்டைச் சிலாகித்து எழுத எவராலியலும்? இராஜீய ஞானத்தை மக்களுக்கு யூட்ட முதல் முதலாகத் துணிந்த வெளியீடு இந்தியாவில் இதுவே யெனலாம். இராஜீகப் பதிப்பக விசேடக் கூட்டத்தில் (Imperial Social Conference) இவர் பதிப்பாசிரியத் தொழிலின் பாங்கைப்பற்றிப் பெரிதும் விளக்கி, வெளிநாட்டுப் பத்திரிகைகளின் வேலைகளை ஆராய்ந்து இந்தியநாடு தன்னாட்சி பெற்று வாழவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொண்டார். 1876-ம் ஆண்டு ஜூலைமீ 26உ "இந்தியர் சங்கம்" ஒன்று கல்கத்தாவில் ஆனந்த மோகன போஸ் போன்ற பல பெரியாரின் ஆதாவில் ஸ்தாபிக்கப்பட்டது. அச்சங்கத்தின் ஆரம்ப விழாவன்று, பாபுவின்

## ஏக புத்திரரின் மரணம்

நேர்ந்தது. ஆயினும் பாபுவின் தேசாபிமானம், அவரை அச்சங்கக் கட்டிடத்தில் கொண்டுவந்து விட்டுவிட்டது. புத்திரனுடைய மரணத்தை அவர் பெரிதாக நினைக்கவில்லை; தமது தேசத்தொண்டின் கடமையே பெரிதென்றுணர்ந்தனர்; அதன் காரியதரிசி பதவியைக் கருத்துடன் வகித்தார். தேச சஞ்சாரம்—சுற்றுப்பிரயாணம் செய்து அரசாங்க விஷயங்களில் நமக்குப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று விளக்கிவந்தார். அந்த இந்திய சங்கம் காங்கிரசுக்கு நிகரான வேலைகளைச் செய்து வந்தது. முதல் முதல் பம்பாயில் காங்கிரஸ் மகாசபையின் திறப்புவிழா நிகழ்ந்தபொழுது அவர் சில அசௌகரியங்களை முன்னிட்டு அதற்குச் செல்லாவிடினும் இரண்டாவது காங்கிரஸ் முதல் அவர் விடாது சென்றுவந்தார். காங்கிரசின் ஐந்தாம் ஆண்டு விழாவில் இவர் செய்த ஓர் தேன்மாரியெனத்தகும் சொன்மாரியால் 60,000 ரூபாய் காங்கிரசுக்கு மூலதனமாகச் சேர்ந்தது. இனி இவருடைய

## காங்கிரஸ் தொண்டு

வருமாறு: ஐந்தாவது காங்கிரஸின் தீர்மானப்படிச் சீமைக்கு இந்தியர் குறைகளை எடுத்தோதி, மாகாண சட்டசபையில் இந்தியர்களுக்குப் பிரதிநிதித்துவத்தின் அவசியத்தைக் கூறச்சென்ற நியுக்தர்களில் இவர் ஒருவராவர். இவர் சீமையில் சுற்றுப் பிரயாணஞ்செய்து பல உபந்நியாசங்களைச் செய்தார். இவருடைய சொற்பொழிவைக் கேட்ட ஓர் மேனாட்டுப் பெரியார் "முதன் மந்திரியான வில்லியம் பிட் என்பவர் காலத்திற்குப் பிறகு அதிக சாதுர்யமாகப்பேசும் திறமையுடைய ஒருவரை நாம் இன்றுதான் கண்டோம்; விஷயத்தை விரித்துரைப்பதில் பாக்ஸ் போலவும், உபமான உபமேயத்துடன் விஷயத்தை விளக்குவதில் புருக்கைப் போலவும், நவீனமாகப் பேசுவதில் ஷெரிதனைப் போலவும் இவர் விளங்குகின்றார்" என்று ஓர் ஆங்கிலப் பத்திரிகையில் எழுதினர்.

(தொடரும்.) ஸ்ரீ. லக்ஷ்மி காந்தன்.

---




## வேதாந்த சார சங்கிரக வசனம்.

(109-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஒரு காரியத்தைச் செய்து முடித்தற்கு இரண்டு கைகளின் உதவியும் அவசியமாயிருத்தல் போல மோக்ஷத்தையடைதற்கும் கர்மம் ஞானம் என்னும் இவ்விரண்டும் தேவையாம் என முன்னர் சங்கிக்கப் பட்டது. அச்சங்கை சரியன்று. ஏனெனில் இரண்டு கைகளும் ஒரே கர்த்தாவை ஆசிரயித்திருக்கின்றன. தவிர, இரண்டு கைகளும் கர்மத்திற்கே அதிகார முள்ளவை. ஆகலின் அவைகளிரண்டிற்கும் சேர்க்கைபொருந்தும். அதுபோல கர்மத்திற்கும் ஞானத்திற்கும் சேர்க்கை பொருந்தாது. ஏனெனில், ஞானத்திற்குக் கர்த்தா வேறு; கர்மத்திற்குக் கர்த்தா வேறு. ஞானத்தின் காரியம் வேறு; கர்மத்தின் காரியம் வேறு. இப்படி கர்த்தாவிலும் காரியத்திலும் பேதமுண்டாயிருத்தலின் ஒன்றற்கொன்று சேர்க்கையிற் பொருந்தாது. ஆகலின் இரண்டு கைகளின் திருஷ்டாந்தம் சரியன்று.

கர்மமானது கர்த்தாவால் செய்யப்படுவதற்கும் செய்யப்படாமலிருத்தற்கும் வேறொருவிதமாய்ச் செய்யப்படுவதற்கும் சாத்தியமானதாயிருக்கின்றது. (அதாவது ஒருவன் கர்மத்தைச் செய்தாலும் செய்யலாம்; செய்யாமலுமிருக்கலாம்; வேறொரு விதமாகவும் செய்யலாம். ஆகையால் கர்மமானது கர்த்தாவி னதீனப்பட்டதாகும்.) அப்படி வஸ்துவினுடைய ஞானமோ ஒருபோதும் கர்த்தாவிற் கதீனப்பட்டதாகாது. ஞானமானது வஸ்துவின் அதீனமானதே யாகும். ஒரு வஸ்துவை, உள்ளது உள்ளபடி அறியும் ஞானம் *பிரமாணத்தா லுண்டாகுமேயன்றி, கர்மத்தாலாயினும் யுக்திவன்மையாலாயினும் உண்டாதலில்லை.

சங்கை:— கர்மமானது கர்த்தாவி னதீனமானது. ஞானமோ அப்படி கர்த்தாவி னதீனமாகாது வஸ்துவி னதீனமேயாகும் என்று கூறப்பட்டது. அது சரியென்று தோன்றவில்லை. ஏனெனில் ஞானமானது வஸ்துவி னதீனமாகுமானால் † சம்சய ஞானம் ‡ விபர்யயஞானம் முதலானவை

---

* அந்தக் கரணத்தின் விருத்தியால் (தொழிலால்) அறியத்தக்க வஸ்துவிற்கு பிரமா என்று பெயர். அந்தப் பிரமாவை யறியக் காரணமாயிருப்பது எதுவோ அதற்குப் பிரமாணம் என்று பெயர்.

† சம்சயம்=சந்தேகம். தூரத்தில் நாட்டியிருக்கும் கட்டையைப் பார்த்து கட்டையோ புருஷனோ? எனச் சந்தேகித்தல் சம்சயஞானம்.

‡ விபர்யயம்=மாறுபாடாக அறிதல். கட்டையைப் பார்த்தும் புருஷன்தா னென்று கொள்ளுதல் விபர்யயஞானம்.

எப்படி யுண்டாகும்? உண்டாகலாகாதன்றோ? அப்படி உண்டவாதால் ஞானம் வஸ்துவி னதீனமன்று.

சமாதானம்:—சம்சயஞானம் முதலானவை பிரமாணத்தினுடைய லோபத்தால் (குறைவால், தோஷத்தால்) உண்டாவனவேயன்றி வஸ்துவி னதீனமானவையல்ல. (கட்டையா? புருஷனா? என்னும் சம்சயஞானம் முதலானவை கண்பார்வை முதலிய பிரமாணத்தினிடத்துள்ள தோஷத்தாலுண்டாவனவன்றி வஸ்துவி னதீனமானவையன்று. வஸ்துவோ நித்தியமும் முக்காலத்து முன்னதும், ஸ்திரமும் வியாபகமுமானதுமாகிய பரப்பிரம்மமாகும். சுருதிரூபமாகிய பிரமாணமிருப்பின் கர்மாபேக்ஷையில்லாத அப் பரப்பிரம்மத்தின் ஞானம் தவறாமல் கிடைக்கும். எப்படி நல்ல பார்வையிருந்தால் ரூபஞானம் உண்டாகுமோ அப்படியே சுருதிவடிவப் பிரமாண மிருந்தால் வஸ்துவி னதீனமான ஞானம் உண்டாகின்றது.

உருவத்தை யறியும் விஷயத்தில் புருஷனுடைய கண்கள் யாதொரு கர்மத்தையும் அபேக்ஷிக்கிறதில்லை. அதுபோல, சிரவணாதிகளால் உண்டான ஞானம் பிரம்ம வஸ்துவைப் பிரகாசிப்பிக்கச் செய்யும் விஷயமாய்க் கர்மத்தை யபேக்ஷியாது, கர்மம் கர்த்தாவி னதீனமானதாகும். நன்மை தீமைகள் கர்த்தாவி னதீனமானவை. ஞானம் பிரமாணாதீனமானதாகும். இப் பிரபஞ்சம் மாயையின் வசப்பட்டதாகும்.

(கர்மத்தால் மோக்ஷ முண்டாவதில்லை யெனில், சகலரும் மோக்ஷத்தையே விரும்புவார்களாதலின், கர்மத்திற்குக் கதி யாது? எனின், கூறுகிறார்.)

நித்தியா நித்திய வஸ்து விவேகமில்லாதவனும், இகலோக பரலோக போகங்களினிடத்து ஆசையுள்ளவனும், விரக்தியடையாத மனத்தையுடையவனும் எவனோ அவனுக்கே கர்மம் விதிக்கப்பட்டது.

எல்லாவற்றிலும் விரக்தியடைந்து மோக்ஷத்தை விரும்புபவனும் பிரம்மானந்தத்தை அபேக்ஷிக்கின்றவனுமாகிய விவேகிக்கோ கர்மம் விதிக்கப்படவில்லை.

( *ருணத்திரய விமுக்தனாகாமல் சந்யாசம் கொள்ளலாகாதாகலின் அதுவரையில் முமுக்ஷுவாயினும் கர்மம் செய்யவேண்டுமன்றோ? எனின்)

வேண்டுவதின்று. ஏனெனில் மோக்ஷத்தைக் கோரும் ஞானிக்கு எந்த தினத்தில் விரக்தியுண்டாகின்றதோ அந்த தினத்திலேதானே அவன் சந்யாசத்தைக் கைக்கொள்வது உத்தமமாகும் என்று சுருதி விதிக்கின்றது. ஆகையால் இந்தக் கர்ம சந்யாசம் (கர்மங்களை விடுதல்) பிரமாண சித்தமானது.

(உலகத்தில் பிறந்த ஒவ்வொருவரும் இயல்பாகவே மூன்று திறத்தார்க்குக் கடன்பட்டவர்களா யிருக்கின்றனர். அம்மூன்று திறத்தார் யாவர் எனின்: முனிவர், தேவர், தென்புலத்தார் அல்லது பிதிரர். இவர்களுள் முனிவர் கடன் கேள்வியாலும், தேவர்கடன் வேள்வியாலும், தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலாலும் தீர்க்கப்பட வேண்டும். இம்மூன்று

*ருணத்திரயம்=மூன்றுவகைக் கடன். (ருணம்=கடன்; திரயம்=மூன்று.)



கடன்களையும் தீர்க்காமலிருப்போர்க்குப் புண்ணிய லோகம் கிடைக்காமல் போவதோடு நரகத்துன்பமும் பிராப்தியாகும் என்று நூல்கள் கூறும். இந்த விதி கர்மத்தை யனுஷ்டிப்போர்க்கே யன்றி ஞானிகளுக்கன்று என்பது இங்கு அறியத்தக்கது.)

(வேதோக்தமான கர்மானுஷ்டானத்தை விடுவோனுக்கு பிரம்ம ஞானம் எங்ஙனம் சித்திக்கும்? எனின்: கூறுகிறார்.)

ஆத்மதத்துவமானது நித்தியாபரோக்ஷமாகலின் (எப்பொழுதும் பிரத்தியக்ஷமாகவே விளங்குவதாகலின்) அதைத் தெரிந்து கொள்வதற்கு வேதம் முதலானவை காரணமாகா. ஆகலின் பிரம்ம ஞானத்திற்கு கர்மம் சாதனமாகாது. பகவான் ஸ்ரீகிருஷ்ணரும் கீதையில் "தான் எனப்படுகின்ற அபரோக்ஷ (பிரத்தியக்ஷ) மான ஆத்மதத்துவமாகிய நான் வேதங்களாலும் தவத்தாலும் போத்யனாக (அறியப்பட) மாட்டேன் என்று வேதம் முதலானவற்றில் ஆத்மஞான சாதனத்தன்மையை நிஷேதித்துள்ளார்.

(ஞானம் என்பது தன்னையறிதலாம். அதாவது ஆன்மா தனது எதார்த்த வடிவைக் காணுதலாம். அந்த ஆன்மாவோ ஒரு ரூபமுடையதல்ல ஆகலின் இதுதான் ஆன்மா என்று சுட்டிக் காட்டமுடியாது. ஆனால் வேதமானது ஆன்மாவல்லாத மற்றைப் பொருள்களைச் சுட்டி இதுவல்ல இதுவல்ல என்று கூறிக்கொண்டே போய் முடிவாக எது மிச்சமாய் நீக்க முடியாததாய் இருக்கிறதோ அதுதான் ஆன்மா; அதுதான் நீ என்று கூறுமேயன்றி, இதுதான் ஆன்மா என்று காட்டுவதில்லை. காண்பதாகிய வஸ்து ஒன்றும் காணப்படுவதாகிய வஸ்து ஒன்றும் என இரண்டு வஸ்துக்கள் அவ்விடத்தில் இல்லை; தானே தன்னைக் காணுதலாகிய நிலை, அதாவது ஆன்மா வானது வேறொன்றை எதிரிட்டு நோக்குதலின்றித் தன்மயமாகவே நிலைத்திருத்தலாம். இங்கு ஒரு சங்கை உண்டாகலாம். அதாவது பரப்பிரம்மத்தை யறிதலன்றோ ஞானம். அந்த ஞானமன்றோ முத்தியை யளிப்பது. அதைவிட்டுத் தன்னையறிதலால் அதாவது ஆன்மாவை யறிதலால் பயன் யாது என்று சங்கிக்கலாம். ஆன்மாவும் பரமான்மாவும் சொரூபத்தில் ஒன்றே. அதாவது ஆன்மா எத்தகைய சொரூபத்தையுடையதோ அத்தகைய சொரூபத்தையே பரமான்மாவும் உடையது. சிறிது பெரிது என்பதைத் தவிர அவ்விரண்டிற்கும் வேறு வித்தியாசமில்லை. ஆகையால் தானாகிய ஜீவ ஆன்மாவை யறிந்தால் தலைவனாகிய பரமான்மாவை யறிந்ததாகும். ஆன்மா குடநீருக்கும் பரமான்மா கடல்நீருக்கும் ஒப்பாம். குடசலமானது கடல் நீரிற் கலந்து கடலாகவே தோன்றுதல்போல, நான் என்னும் ஆன்மாவும் பரமான்மாவுடன் கலந்தால் பரமான்மாவாகும். அதுவே முத்திநிலை. இதையே வேதாந்த நூல்களெல்லாம் 'நீ பிரம்மமாகிறாய்' எனக் கூறுகின்றன.

"தன்னையும் தனக்கா தாரத் தலைவனை யுங்கண் டானேல்—பின்னையத் தலைவன் தானாய் பிரமமாய்ப் பிறப்புத் தீர்வன்—உன்னைநீ யறிந்தா யாகில் உனக்கொரு கேடு மில்லை," என்று கைவல்லியம் கூறுவதும் ஈண்டறியத்தக்கதாம். இதன்படி ஒருவன் தனது எதார்த்த வடிவத்தை யறிவானானால், தான் ஜீவனல்ல வென்றும், ஜீவசாக்ஷியாகிய கூடஸ்தன் அல்லது ஆன்மாவே தானென்றும் அறிந்து, தன் ஆதாரத்தலைவனான பரமான்ம சொரூபத்தையுமுணர்ந்து, அச்சொரூபமே தானாகும் பிரம்மான்ம ஐக்கியமடைவான் என்பது நூல்களின் கொள்கையாம். இதுபற்றியே ஆன்மதத்துவமானது நித்தியாபரோக்ஷமென்றும் அதைத் தெரிந்து கொள்வதற்கு வேதம் முதலானவை காரணமாகா வென்றும் கூறப்பட்டது.)

(தொடரும்) பூ. ஸ்ரீநிவாசன், தமிழ்ப்பண்டிதர், சித்தூர்.




## யோகம்.

(112-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வாறு வஜ்ரோலியாப் பிரயாசத்தால் விந்து தாரணம் செய்யும் யோகியின் சரீரத்தில் திவ்யமணம் உண்டாகும். எத்தனைகாலம்மட்டும் சரீரத்தில் விந்து நிலைத்திருக்கிறதோ அத்தனைகாலம் வரையில் எமபயம் அவனுக்குக் கிடையாது. ஸ்திரீயின் ரேதஸையும் கூடச்சேர்த்து மேல் இழுக்க வேண்டியிருப்பதால் அந்தப்பெண் ருது ஸ்நானம் செய்து பரிசுத்தமுள்ளவளாயிருத்தல் வேண்டும். நோயற்றவளாகவு மிருக்கவேண்டும்.

வஜ்ரோலிகாணம் முடிந்தபின், சுத்தமான விபூதியை நீரிட்டுக் குழைத்து நெற்றி, சிரசு, கண், இதயஸ்தானம் (மார்பு), புஜம், கை முதலிய உறுப்புக்களில் பூசிக்கொள்ளவேண்டும். இந்தக் கிரியைக்குச் சகஜோலி என்று பேர். இது யோகாங்கமேயாயினும் மோட்சத்துக்கு ஏதுவாம். ஆதலால் யோகிகள் இந்தச் சகஜோலி முத்திரையைச் சர்வசிலாக்கியமாகக் கொள்வார்கள். பொருமை யற்றவர்களும், உண்மையுணர்ந்த தத்துவஞானிகளும், தைரியமுள்ளவர்களும், புண்ணியசீலர்களுமான மஹான்களே யிந்த யோகத்தில் சித்தி பெறுவார்கள்.

இனி யிந்த யோகம் ஆடவர்மட்டுமே அனுஷ்டிக்க வேண்டுமென்கிற நியதியில்லை. ஸ்திரீகளும் யோகாப்பியாசம் செய்யலாம். அவர்கள் சரீரத்திலும் மூலாதாரமுதல் துவாதசாதாரங்களும், சந்திரசூரியாக்கினிகளும், அப்பு மண்டலமும், அவ்வாதாரங்கள் தோறும் அதற்குரிய மந்திரயந்திர மூர்த்திகளும் இருத்தலால் யோகம் இருபாலார்க்கும் பொதுவேயாம்.

யோகத்துக் காதாரமாகிய ஆசனம் பிராணாயாம முதலியவற்றை அப்பியசித்து முறையே எல்லா முத்திரைகளுடனும் யோகம் செய்து சித்திபெறலாம். அவஜ்ரோலியால் புருஷர்களது விந்துவை ஆக்ரஹித்துக்கொண்டு யோகி யாகலாம். அதனால் அந்தப்பெண் ஆகாயத்தில் பறக்கவும், நினைத்த இடங்களுக்குச் செல்லவும், நினைத்த காரியங்களை முடிக்கவும் சக்தியுள்ளவளாவாள்.

அமரோலி என்பதும் சிறப்பினை யுடையது. இதனை அமரி, சிவாம்பு (சிவநீர்) என்று தமிழ்ச்சித்தர்கள் பதினெண்மரும் வழங்குகிறார்கள். சிவநீரைத் திருமூலர் திருமந்திரம் கூறுகின்றது. முதல்தாரையையும் கடைசித்தாரையையும் ஒழித்து நடுத்தாரையைக் கொள்ளவேண்டும். முதல்தாரை பித்தத்தை யதிகமாகவுடையது. கடைசிதாரை இரசமற்றது. ஆதலால் நடுத்தாரையே சிலாக்கியமாம். அமிர்தமயமாகும். இந்த அமரியை (சிறுநீரை) அருந்துவதும்



பஸ்மத்துடன் கலந்து மூக்கில் நசியம் போல இழுப்பதும் வஜ்ரோலிக்கு விசேஷமென்பது மதாந்தரம். இதனால் நசியமிட்டு வஜ்ரோலியை அனுஷ்டிப்பதும் அமரோலி என்று கொள்க. இத்தன்மைத்தான வஜ்ரோலியை ஆண் பெண் இருதிறத்தாரும் அனுசரித்து யோகசித்தி பெறலா மென்பதும் மதாந்தரம்.

இந்த அமரோலி அப்பியாசத்தால் வெளியிட்ட அமிர்தத்தைத் திருநீற்றோடு சேர்த்துக் கலந்து தலை, கபாலம், கண், தோள், கழுத்து, இருதயம், கை முதலிய அவயவங்களில் தரிக்கவேண்டும். இப்படிச் செய்வதனால் அந்த யோகிக்கு ஞானதிருஷ்டி யுண்டாகும். இந்த முறைப்படி ஒரு ஸ்திரீயானவள் புருஷனது விந்துவை யிழுத்துச் சரீரத்தில் நிறுத்தினால் அவளும் யோகியாவாள். அவளது தேஜஸ் கெடாது. அவளுடைய சரீர ரஜஸூம் விந்துவாய்விடும். அது இதயஸ்தானத்துக்குமேற் சென்று நாதத்தன்மையொழிந்து விந்துவாகுமென்று நூல்கள் கூறுகின்றன. பிந்துநாதங்கள் ஒன்று சேர்வதால் பரமபதம் உண்டாகும். சகல சித்திகளையும் தரும். இதனால் அழகும் பலமும் விருத்தியாகும்.

சக்திசாலனம்—அதாவது குண்டலிசக்தியின் அனுக்கிரகத்தினால் சுழுமுனையாகிய மோட்சவாயிலைத் திறத்தல். மோட்சத் துவாரமாகிய சுழுமுனை வாயிலைக் குண்டலிசக்தி முகத்தால் மூடிக்கொண்டு தூங்குகின்றது முன்னமே கூறப்பட்டது. அதை மீண்டுச் சிறிது விஸ்தரிக்கவேண்டுவ தவசியமாதலால் சிறிது கூறுகின்றோம். பரமேசுவரியாகிய குண்டலிசக்தி ஞானயோகிகளுக்கு மோட்சத்தையும் அஞ்ஞானிகளுக்குப் பந்தத்தையும் கொடுத்தருளும். ஆதலால் குண்டலிசக்தியை அறிவதே ஞானமாம். அறிந்தவன் பந்தத்தைக் கடந்தவனாவான். அந்தச் சக்தி பாம்பின் வடிவாய் இருப்பது, இந்தச்சக்தியை மூலாதாரத்தினின்றும் எழுப்பி மேலேஏறிச் செல்லும்படி செய்யவேண்டும். இடகலை கங்கை என்னப்படும். பிங்கலை யமுனை யென்னப்படும். இவற்றின் நடுவில் சுழுமுனை யிருக்கின்றது. இதன் வாயிலைத்தான் குண்டலி மூடிக்கொண்டிருக்கின்றது. அந்தச் சுழுமுனையே பிரமரந்திர நாடியாம். குண்டலிசக்தியை யோகபலத்தால் அவ்விடத்தை விட்டு விலக்கவேண்டும். யோகபலத்தால் மூலாக்கினியை மூட்டிச் சுடர்விட்டெரியும்படிசெய்தால் அந்தவெப்பம் தாங்காமல் குண்டலி அவ்விடம்விட்டு விலகி மேல்நோக்கிச் செல்லும்.

மூலாதாரத்துக்குமேல் ஒருசாண் பன்னிரண்டு அங்குல அளவில் கந்தஸ்தானமிருக்கின்றது. நாபிக்கும் இலிங்கஸ்தானத்துக்கும் மத்தியில் நாலு அங்குல விஸ்தீர்ண முள்ளதா யிருக்கும். பறவைகளின் முட்டையைப் போன்ற வடிவுள்ளது. அதில்தான் எழுபத்தீராயிரம் நாடிகள் தோன்றிப் பரவுகின்றன. இது பசுபட்சிகளுக்கு நடுவயிற்றிலிருக்கும். இதினின்றே இடைகலை பிங்கலை சுழுமுனை நாடிகள் உண்டாகின்றன. இதிலுள்ள சுழுமுனாநாடித் துவாரத்தில்தான் குண்டலிசக்தி படத்தினால் துவாரத்தை மறைத்துக்கொண்டு நித்திரைசெய்கின்றது. இதை மேலெழுப்புவதற்குச்

சக்திசாலன முத்திரையை அனுஷ்டிக்கவேண்டும். வஜ்ராசனத்தி லிருந்து கொண்டு இரண்டு கால்களையும் பாட்டிற்குமேல் கைகளால் பிடித்துக் கொண்டு மேற்படி கந்தஸ்தானத்தை நெருக்கவேண்டும். அதன்மேல் முற் கூறிய பஸ்திரையென்னும் கும்பகத்தைச் செய்யவேண்டும். இப்படிச் சக்தி சாலனம் செய்தலால் சக்தி விழித்துக்கொள்ளும். நாபிஸ்தானத்திலுள்ள சூரியனை மேலே யிழுக்கவேண்டும். இவையெல்லாம் பிராணாயாமம் சித்தித்த வனுக்கே கைகூடும். இப்படி நாலுநாழிகை செய்யவேண்டும். அதனால் சக்தி மேல்நோக்கிச் செல்லும். குண்டலி சுழுமுனைத் துவாரத்தைவிட்டு விலகுவ தால் வாயில் திறக்கப்படவே பிராணவாயு தடையின்றிச் சுழுமுனையில் பிர வேசிக்கும். இந்த யோகியை ரோகமும் மரணமும் அணுகா. அணிமா முதலிய அஷ்டசித்திகளையும் அடைவான். காலனை விளையாட்டாகவே வெல்வான். இந்த யோகி எப்போதும் இந்திரியங்களை அடக்கியிருக்க வேண்டும். மிதபோஜன முள்ளவனாயிருக்கவேண்டும். மிதபோஜன மின்ன தென்பது முன்னமே கூறப்பட்டது. ஆயினும் ஈண்டும் ஒரு தடவை கூறு கின்றோம். காய் கறி சோறு முதலியன அரைவயிறும், தண்ணீர் கால்வயி றும் ஆக முக்கால்வயிறு நிரம்ப உண்பதேயாம். பிராணவாயு சஞ்சரிப்பதற் குக் கால்வயிறு விடவேண்டும். இந்தச் சக்தி சாலனத்தை ஒரு மண்டலம் அனுஷ்டிக்கவேண்டும். பஸ்திரையென்னும் கும்பகத்தையும் செய்யவேண் டும். இதனால் யோகி தன் சரீரத்தை வசப்படுத்திக்கொள்கிறான். சரீரத்தை வசப்படுத்திக் கொண்டவனுக்கு மரணாதிபயங்கள் ஒருபோது மில்லையாம்.

இந்தச் சக்தி சாலனத்தினால் எழுபத்தீராயிரம் நாடி சுத்தமாகும். உறுதி யோடு அப்பியாசிப்பதாலும், ஆசனங்களினாலும், பிராணாயாமத்தாலும், முத் திரைகளினாலும் சுழுமுனை வசமாக்கப்படும். அந்தக்கரண அடக்கத்தாலும் சாம்பவி உன்மனி முத்திரைகளும் யோகிகளுக்குச் சித்தியைத் தருவனவாம். இதுவே இராஜயோகம் என்னப்படும். நிர்விகற்ப விருத்தியாலேயே இராஜ யோகம் சித்தியாகவேண்டும். வேறு விஷயங்களில் சித்தத்தைச் செலுத்தா மல் கும்பகத்தைச் செய்யவேண்டும்.


அநாதி சுயம்புவாகிய ஸ்ரீ பரமேசுவரனால் முத்திரைகளும் மற்று முள்ளவைகளும் கூறப்பட்டன. இவற்றைக் குரு பரம்பரையாக உபதேசம் பெற்றுச் சிறப்படைந்திருக்கும் குருமுகத்தால் தெரிந்துகொள்ளவேண்டும். முறைப்படி உபதேசிக்கும் குருவை யீசுவரனாகவேகருதி வழிபடவேண்டும். குரு சேவை செய்து ஆசனபிராணாயாமங்களையும், முத்திரைகளையுந் தெரிந்து கொண்டு முறைதவறாமல் அப்பியாசிக்கிறவன் யோகத்தில் சித்தி பெறுவான்.

குருவே பிரம விஷ்ணு ருத்திராதி தேவர்களும் ஈசுவரனுமாவார் என் கிற வேதவாக்கியத்தில் நம்பிக்கைவைத்து அவரை அலட்சியம் பண்ணாமல் பூஜிக்கவேண்டும்; குருவும் பரமேசுவரனும் ஒருவரேயாவார். வேறாகமாட் டார். எந்தக் காரணத்தினாலும் குருவோடு வாதம் செய்வது கூடாது. அவர் கூறும் வாக்கியத்தை வேதவசனமாகவே மதிக்கவேண்டும். அத்துவைத பாவனையால் குரு ஈசுவரனே யாகிறார் என்பதை நிச்சயமாகக்கொண்டு குரு பக்தி செய்கிறவனுக்குச் சித்தியாகாதது ஒன்றுமில்லை. ஆதலால் யோக சித்திபெற்று முக்தியை அடையவிரும்பும் புருஷன் மறவாமல் குருவைப் பூஜிக்கவேண்டும்.

(தொடரும்) சிவானந்தசாகரயோகீஸ்வரர்.

---

சிவமயம்




## எறிபத்தநாயனார் புராணத்தின் சில விசேடக் குறிப்புகள்.

(114-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதுகாறுங் கூறியவாற்றால் அன்பே இம்மைப் பயனையும் மறுமைப் பயனையுந் தருவதான சிறந்த சாதனமாயிருப்பதால் காரைக்காலம்மையார் "இறவாத வின்ப வன்பு வேண்டி" விண்ணப்பித்துக் கொண்டதுபோல் நாமும் அதைப் பெறுவதற்கு எல்லாம் வல்ல முழுமுதலை இரந்து இறைஞ்சுவோமாக.

சிவபிரானருளாலேயே அன்பு அடையப்பெறும் என்பதனை "அந்த அன்பானது சிவபிரானுடைய அருளினாலெய்தும். அந்த அருளினாலே அன்பு உளதாம். அருளுண்டாயபோதே முத்தியானது கரதலத்தில் எய்தியது போலாம்" என்ற வாயுசங்கிதை—உத்தரபாகம். அத்-22-26-கூறுவதனாலுந் துணியப்பெறும்.

இங்ஙனம் கூறிப்போந்த அன்புவகையில் எறிபத்த நாயனார் தலையன் புடையவரென்றும், அஃதும் சிவபிரான்மாட்டே யுடையவரென்றும், அவ் வன்பு அவருக்கு அளவுகடந்து மிகுந்துள்ளதென்றும், பின்வரும் செய்யுட் களால் அறியக்கிடக்கின்றது.

"பாய்தலும் விசைகொண் டுய்க்கும் பாகரைக் கொண்டு சீறிக்
காய்தழ லுமிழ்கண் வேழந் திரிந்துமேற் கதுவ வச்சந்
தாய்தலை யன்பின் முன்பு நிற்குமே தகைந்து பாய்ந்து
தோய்தனித் தடக்கை வீழ மழுவினாற் றுணித்தார் தொண்டர்."
(எறிபத்தநாயனார் புரா-24.)

"குழையணி காதி னானுக் கன்பராங் குணத்தின் மிக்கார்
பிழைபடி னன்றிக் கொல்லார் பிழைத்ததுண் டென்றுட் கொண்டு
மழைமத யானை சேனை வாவினை மாற்றி மற்ற
வுழையவப் புரவி மேனின் றிழிந்தன னுலக மன்னன்." (ஷை-37.)

"மைத்தடங் குன்று போலு மதக்களிற் றெதிரே யிந்த
மெய்த்தவர் சென்றபோது வேறொன்றும் புகுதா விட்ட
வத்தவ முடையே னானே னம்பல வாண ரன்ப
ரித்தனை முனியக் கெட்டே னென்கொலோ பிழையென் றஞ்சி."(ஷை-38.)

“செறிந்தவர் தம்மை நீக்கி யன்பர்முன் றொழுது சென்றீ
தறிந்திலே னடியே னங்குக் கேட்டதொன் றதுதா னிற்க
மறிந்தவிக் களிற்றின் குற்றம் பாகரோ டிதனை மாள
வெறிந்ததே போது மோதா னருள்செயு மென்று நின்றார்.”
(எறிபத்தநாயனார் புரா-39.)

“தொழுந்தகை யன்பின் மிக்கார் தொண்டினை மண்மேற் காட்டச்
செழுந்திரு மலரை யின்று சினக்களி சிந்தத் திங்கட்
கொழுந்தணி வேணிக் கூத்த ரருளினாற் கூடிற் றென்றங்
கெழுந்தது பாகரோடு மியானையு மெழுந்த தன்றே. (ஷை-48.)

“தேனாரும் தண்பூங் கொன்றைச் செஞ்சடை யவர்பொற் றாளி
லானாத காத லன்ப ரெறிபத்த ரடிகள் சூடி”
வானாளுந் தேவர் போற்று மன்றுளார் நீறு போற்று
மேனாதி நாதர் செய்த திருத்தொழி லியம்ப லுற்றேன். (ஷை-57.)

### 7. கொலையானது இன்னவிடத்துப் பாவமாகாது புண்ணியமாது மெனல்.

கொலையானது பாதகத்துளெல்லாம் தலையானதா யிருந்தாலும், அந்தணர், அறவோர், ஆசாரியர், ஆலயப்பணி முதலியவர்களுக் கிடையூறு செய்பவர்களைக் கொலைசெய்யலா மென்றும், தனதுயிர்க் கிறுதி வருவதா யிருந்தாலும் அதைப் பொருட்படுத்தாது அவ்விடையூறுகளைப் போக்கவேண்டு மென்றும், அப்படிச் செய்வதானது சிறந்த புண்ணியம் என்றும் அறிய வேண்டும்.

“தீய வினைத் தலை கொலை” (கொலைமறுத்தல்-4.)

“அந்தணரை மாதவரைக் கொல்லாதே வெல்லல்லார்
சிந்தவுஞ்செய் நீசெறியாய் தீங்கு.” (சங்கற்ப நிராகரணம்)

“தேசிகர்க்குந் தீங்குசெயுந் தீம்பரைவெல் லல்லதுநீ
காசமுறு சேர்வாய் நலம்.” (ஷை)

“குரு விலிங்கசங் கமத்தினைக் குறித்தவற் றிடையூ
றொருவு தற்பொருட் டாற்றம துயிர்விடு முரவோர்
மருவி டும்பல மெமக்குமே வளம்பட வகுப்பா
னருமை யென்றன னனைத்தையு முணர்த்துபே ரறிவோன்.”
(சிவபுண்ணியத் தெளிவு)

(தொடரும்) பஞ்சாட்சரபுரம், வாலையாநந்தம்.

---

**சந்தாதாரர்களுக்கு:—**சந்தா நம்பர் தெரியாதவர்கள் மாதமாதம் வரும் சஞ்சிகையின் மேலுள்ள விலாசத்தில் குறிக்கப்பட்டிருக்கும் நம்பரைப் பார்த்துக் குறித்து வைத்துக்கொள்ளக் கோருகிறோம்.

ஸ்ரீ




## ஓர் பெண்மணியின் விண்ணப்பம்.

ஸ்ரீ விசிட்டாத்வைத சித்தாந்தத்தை நிலை நிறுத்திய இராமாநுஜர், திருக்கோளூரென்னும் திருப்பதியில் எழுந்தருளி யிருந்தபோது, அவ்வூரினின்றும் வெளியேற எத்தனித்த ஓர் பெண்மணி, அப்பெரியா ரெதிரேவந்து, அவரைப் பணிந்து நின்றாள். இம்மாதரசியோ ஆத்ம ஞானம் கைவரப் பெற்றவள்; பகவானிடத்தும் அவனுடைய அடியார்களிடத்தும் பேரன்பு பூண்டவள். இப்படி ஞான பக்தி வைராக்கியங்களிற் சிறந்த அவ்வுத்தமியை எம்பெருமானார் கடாக்ஷித்து, “பிள்ளாய்! ‘நாவகாரியஞ் செய்கிலாதவர், நாடொறும் விருந்தோம்புவார், தேவகாரியஞ் செய்து வேதம் பயின்று வாழ்பவர் பொருந்தப்பெற்ற இத்திருத்தலத்தைவிட்டு எங்குப் புறப்பட வுத்தேசிக்கின்றாய். எல்லா வளங்களும் நிறைந்துள்ள இப்பதியில் உனக்கு நேர்ந்த குறை யாது? ‘திண்ணமென்னிளமான் புகுமூர் திருக்கோளூரே’ என்கிறபடி யாவர்க்கும் புகுமூர், உனக்குப் புறப்படு மூரா யிற்றோ?” என்று வினவினர். அதைக்கேட்ட அப் பெண்பிள்ளை, கை கூப்பி நின்று, “சுவாமி! அடியாள் அபலை; சத் கிருத்தியந்தி லீடுபடாதவள்” என்றுரைத்துப் பின்வருமாறு *விண்ணப்பிக்கலானாள்.

1. அழைத்து வருகிறேனென்றேனோ அக்ரூரரைப்போலே.
2. அகமொழித்து விட்டேனோ விதுரரைப்போலே.
3. தாய்க்கோலஞ் செய்தேனோ அநஸூயையைப்போலே.
4. தந்தையெங்கே யென்றேனோ துருவனைப்போலே.
5. மூன்றெழுத் துரைத்தேனோ க்ஷத்ரபந்துவைப்போலே.
6. முதலடியைப் பெற்றேனோ அகலிகையைப்போலே.
7. அடையாளஞ் சொன்னேனோ கபந்தனைப்போலே.
8. அந்தரங்கஞ் சொன்னேனோ திரிசடையைப்போலே.
9. அவன்தெய்வ மென்றேனோ மண்டோதரியைப்போலே.
10. † அகம் வேத்மி யென்றேனோ விசுவாமித்திரரைப்போலே.
11. ‡ அநுயாத்ரஞ் செய்தேனோ அணிலங்களைப்போலே.
12. அவல் பொரியை யீந்தேனோ குசேலரைப்போலே.
13. ஆயுதங்க ளீந்தேனோ அகத்தியரைப்போலே.
14. கொண்டு திரிந்தேனோ திருவடியைப்போலே.
15. அனுப்பிவையு மென்றேனோ வசிட்டரைப்போலே.
16. மண்மலரை யிட்டேனோ குருவநம்பியைப்போலே.
17. மூலமென் றழைத்தேனோ கஜராஜனைப்போலே.
18. வைத்தவிடத் திருந்தேனோ பரதனைப்போலே.

---

* 81-வாக்கியங்களுள் சிலவே இங்கு வரையப்பட்டன, இடமின்மையின்.
† அகம் வேத்மி=நானறிவேன்.
‡ அநுயாத்ரம்=பிரயாணத்திற் கூடப் போதல்.

19. வழியடிமை செய்தேனோ இலக்குவனைப்போலே.
20. அக்கரைக்கே விட்டேனோ குகப்பெருமான்போலே.
21. இக்கரைக்கே சென்றேனோ விபீடணரைப்போலே.
22. இனியதொன்று வைத்தேனோ சபரியைப்போலே.
23. இங்குமுண் டென்றேனோ பிரகலாதனைப்போலே.
24. இங்கில்லை யென்றேனோ ததிபாண்டனைப்போலே.
25. காட்டுக்குப் போனேனோ பெருமாளைப்போலே.
26. கண்டுவந்தே னென்றேனோ திருவடியைப்போலே.
27. இருகையும் விட்டேனோ துரோபதையைப்போலே.
28. அனுகூலஞ் சொன்னேனோ மாலியவானைப்போலே.
29. தசமுகனைச் செற்றேனோ பிராட்டியைப்போலே.
30. தெய்வத்தைப் பெற்றேனோ தேவகியைப்போலே.

இத்யாதியின்படியே மேற் கூறப்பட்டாருள் ஒருவருடைய ஞானமாயினும் அடியேனுக்குண்டாயிருந்தாலன்றோ இத் திருக்கோளூரில் தங்கியிருக்கலாம். அஃதில்லையே. முசல் புழுக்கை வயலிலே கிடந்தென்? வரப்பிலே கிடந்தென்?" என்றனள்.

இராமாநுஜர் இப்புனிதவதியை ஆசீர்வதித்து இவ்விடத்திலேயே இருக்குமாறு ஆக்யாபித்தருளினர்.

ஓரன்பன்.

## பகட்டுப் பொருள்களின் படுகொள்ளை.

அருள் நிறைந்த பாரதமாதாவின் மைந்தர்களே!

பாரதநாடு பண்டைக்காலந்தொட்டு அன்னியநாட்டு அழிமதிகளாலடையும் நஷ்டம் அளவற்றனவாம். அவற்றுள் புறதேசத்து, கண்ணைக் கவரும் கண்ணாடிப் பொருள்கள், காலங்காட்டும் கருவிகள், பாலர்க்குரிய பலவகைப் பொருள்கள், ஞாலம் போற்றும் வாகனப் பொருள்கள் முதலிய பகட்டுப் பொருள்களின் படுகொள்ளையும் ஒன்றாம்.

அந்தோ! இவை நம்மவர்க்கு ஆசைகாட்டி அவர்களுடைய காசைப் பறித்து அவர்கள் கடும்பிணிவாய்ப்பட்டுக் கலங்கச்செய்யும் வேசைபோன்று எல்லோருடைய மதியையும் மயக்கி நிதியைப் போக்கிப் பலரும் நல்குரவுற்று நலியச் செய்வது என்னே! என்னே!

கேவலம்! அற்ப வருவாயுடையோரும், அவ்வாடம்பரப் பொருள்கள் அனுகூலமும் ஆவசியமும் உடையவையெனக் கருதுகின்றனர். அதனால் அவர்கள் கைப்பொருளைப் போக்கிக் காலத்தை வீணாக்கிச் செய்தொழிலும் விட்டுத் தீப்பிணிவாய்ப்பட்டு வருந்துவதுடன் அயல்நாடுகளை அளகாபுரியாக்கவும் தலைப்பட்டனர்.

இம்மயக்கத்தால் விளக்கொளியை நாடிய விட்டிலைப் போன்று மாயும் நம்மவர்க்கு இது யாரிட்ட சாபத்தால் நேர்ந்ததோ நான் அறியேன்! ஆதலின், நம்மவர் இப்பகட்டுப் பொருள்களின் பாசத்தினின்றும் நீங்கி, நலம் பெற்றோங்கப் பரம்பொருளைப் பிரார்த்திக்கின்றேன்.

* S. அருணாசலம் பிள்ளை, நாங்குனேரி.



# மாணவர்பகுதி

## ஆத்திசூடி உதாரணக்கதைகள்.

(119-ம் பக்கத் தொடர்ச்சி)

### "கேள்வி முயல்"

"கேள்வி—(நூற்களைக் கற்றறிந்த பெரியோர் சொல்லும் நற்பொருள்களைக்) கேட்பதற்கு, முயல்—நீ முயற்சிசெய்" என்பது இதன் பொருள்.

பொருள்களின் தன்மைகளை உள்ளவாறு உணர விரும்புவோர், நூற்களை முறைப்படி கற்ற அறிஞரிடம் எதனையும் கேட்டுக்கொள்வதற்கே முயல வேண்டும். அம்முயற்சியால் அவர்க்கு எப்பொருளிலும் சந்தேகமின்றி உண்மைக் கருத்துக்கள் உள்ளவாறு விளங்கும்; அத்தகைய பொருளுணர்ச்சியால் அவர்கள் உலகத்திற் பல நலங்களையு மடைவர்; பலராலும் புகழப்படுவர். இவ்வாறு கேள்வி ஞானத்தை விரும்பாது எப்பொருளையும் தம் மனம் போனவாறே தீர்மானித்துத் தாமே அறிவிற் சிறந்தாரெனத் தருக்கித் திரிவோர் உலக இயற்கையிற் சிறிதும் உணராதவராய், எதற்கும் தவறான பொருள் கண்டு, நலமடைவதைவிட்டுத் தீமையையே அடைவர்; பலராலும் இகழவும் படுவர். இத்தகையினருள் ஒருவர் கதையை இதனடியில் விளக்குவாம்:—

ஒரு கிராமத்தில் மிகுந்த அகங்காரமுடைய ஒருவர் இருந்தார். அவர் தமிழை எழுதவும் படிக்கவுமாத்திரம் தெரிந்துகொண்டார். அவருக்குச் சிறந்த கல்வி ஞானம் இல்லை. அவர், தாமே எல்லாம் தெரிந்த சகல கலாவல்லவர் என்று தற்பெருமைகொண்டிருந்தபடியால், சிறந்த நூற்கருத்துக்களை உயர்ந்த கல்விமான்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புவதில்லை. எதற்கும் தம் மனம் போனபடி தப்பர்த்தமே சொல்வார்; பெரியார் உண்மைக் கருத்துக்களை உரைத்தாலும், அவற்றை ஏற்றுக் கொள்ளாமல் மறுத்துக் கூறிவிடுவார். இவருக்குக் கேள்வி ஞானம் சிறிது மில்லாவிட்டாலும் எல்லாத்தொழிலிலும் பழக்க முடையவர்போல் புகுந்து வேலைசெய்யும் அவசர புத்தி மிகுதியும் உண்டு. இத்தகைய புத்திமான் ஒருசமயம் ஒருவனுக்கு வைத்தியம் செய்யப் புகுந்துவிட்டார். அவனுக்கு உண்டாகியிருந்தது வெப்பு நோய். அதற்கு, இவர், வைத்திய புத்தகங்களில் மருந்து தேடினார். ஒரு புத்தகத்தில் அவ்வியாதிக்குத் திரிபலை லேகியம் தகுந்ததென எழுதப்பட்டிருந்தது. அதன் செய்பாகத்தில், "கடு, தான்றி, நெல்லி மூன்றையும் சமனெடையாகப் பொடித்து, நெய் சர்க்கரை முதலியன சேர்த்து லேகியம் செய்துகொள்ள வேண்டும்" என்ற விவரம் காணப்பட்டது. இதிற் சொல்லிய மூன்று சரக்குகளில், கடு வென்பது கடுக்காய்; தான்றி யென்பது தான்றிக்காய்; நெல்லி யென்பது நெல்லிக்காய். இந்தச் சரக்குகள் கிரமமாகச் சொல்லப்பட்டிருந்தும், இவர், இந்த முறையைப் பார்த்ததும், எதையும் பிறரிடம் சந்தேகமறக் கேட்டுத் தெளியாமல் தம் மனம் போனபடி அர்த்தம் பண்ணித் துணிந்து செய்யக்கூடியவராதலின், கடு என்பதற்குக் கடுக்காய் என்று அர்த்தம் பண்ணாமல் விஷம் என்று அனர்த்தம் செய்தார். கடு என்பது இரண்டு பொருளை

யும் தரும். எனினும் சமயத்துக்குத் தக்கபடி இதற்குப் பொருள் கொள்ள வேண்டும். இவருக்கு இத்தகைய அறிவும், கேள்விஞானமும், உலக அனுபவமும் இல்லாததால் இவ்வாறு அந்த முறைக்குப் பொருத்தமில்லாத அர்த்தத்தைச் செய்துகொண்டார்.

அவ்வாறு பொருள் கொண்டவுடனே இவர், "தான்றிக்காயும், நெல்லிக்காயும் துவர் வஸ்துக்கள்; குளிர்ச்சி தரக்கூடியவைகள்; விஷம் வெப்பமானது; இந்தச் சத்துரு மித்துருச் சரக்குகள் சேர்ந்தால்தான் சீக்கிரம் வியாதி நீங்கும்" என்று பயுத்தி செய்து பாஷாணத்தைத் தான்றிக்காயுடனும் நெல்லிக்காயுடனும் சேர்த்துப் பொடித்து லேகியம் செய்து வியாதிக்காரன் வாயில் உருட்டிப் போட்டுவிட்டார். அவன் சிறிது நேரத்துக்குள் பிணமாய் விறைத்துப் போனான். நூதன விவேகி திகிற்பட்டு விழித்துக் கொண்டிருந்தார். அவர் செய்த காரியம் வெளியாய்விட்டது; போலீஸ்காரர் செவிக்கும் எட்டிவிட்டது. அவர்கள் உடனே வந்து அவிவேக வைத்தியரைப் பிடித்துக் கொண்டார்கள். நட்பயோசனைக்காரர் கெட்ட சங்கடத்தில் மாட்டிக் கொண்டார். அவர் அதினின்றுந் தப்புவது பெரும் பிரயாசையாய் முடிந்தது. (தொடரும்) **செம்பூர். வீ. ஆறுமுகஞ்-சேர்வை.**

## காலை ஸ்நானம்.

ஒவ்வொருவரும் அதிகாலையிலேயே ஸ்நானம் செய்யவேண்டிய தொழிலை முதற் கடமையாகக் கொள்ளவேண்டும். காலையில் ஸ்நானம் செய்வதினால் எத்தனையோ நன்மைகள் ஏற்படுமெனினும், முக்கியமாய் தேகாரோக்கியமும், சுறுசுறுப்பும், பகலில் செய்யும் தொழில்களுக்கு உற்சாகமுமுண்டாகும்.

நான் 5-வருடங்களாக இம்முறையைக் கையாண்டு வருகிறேன். 7-வருடகாலம் என்னைவிட் டகலாது தொந்தரவுசெய்த சிரங்கானது சிலநாட்களில் அறவே யொழிந்துவிட்டது.

கிராமங்களிலுள்ள சிலர் வருடம் ஒருமுறை, அல்லது இருமுறை ஸ்நானம் செய்வதுகூட அரிதா யிருக்கிறது. இது சுத்த மூடத்தனமான கொள்கையேயாகும். சிலர் 4, 6 நாட்களுக் கொருமுறை ஸ்நானம் செய்யினும், தாம் கட்டியிருந்த அதே வேஷ்டியைத் தோய்க்காமல் கட்டிக்கொள்கிறார்கள். அது பிசகு. தினம் ஸ்நானகாலத்தில் சுத்தமான வேஷ்டிகளா யிருப்பினும், அவற்றைத் தோய்த்துவைத்து நன்ரு யுலர்த்தியே உடுத்தவேண்டும். வெந்நீரில் ஸ்நானம் செய்தலும் கூடாது. ஸ்நானத்திற்குச் சுத்தமான குளிர்ந்த தண்ணீராகவே யிருக்கவேண்டும். கிணறுகளிலும், குளங்களிலும் நீரை மொண்டுவைத்து ஸ்நானம் செய்வதைப் பார்க்கிலும், குளங்களில் இறங்கி ஸ்நானம் செய்வதே மிகமேன்மை.

காலையில் மனிதருக்கு எத்தனையோ அலுவல்களிருப்பினும், ஸ்நானம் செய்யும் தொழிலை முக்கிய முதற்கடமையாகச் செய்துகொள்ளவேண்டும். பனிக்காலங்களில் எவ்வித குளிராயிருப்பினும், அதைப் பொருட்படுத்தாமல் குளிர்ந்தஜல ஸ்நானம் செய்யவேண்டும். பொதுவாக இதினால் சிலாக்கியமேயன்றி யாதொரு சிரமமுமில்லை. சிலர் பகற்போஜனச் சமயத்தில் அதிலும் வெந்நீரில் ஸ்நானம் செய்கிறார்கள். அது சுகாதாரத்துக் கேற்றமுறையன்று.

ஆதலின், ஒவ்வொருவரும் அதிகாலையில் ஸ்நானம் செய்து, பகவானை ஸ்தோத்திரித்து அப்பகவான் அருள்பெற் றுய்வார்களாக!

**எஸ். சிவகுருநாதன், கீழக்கரை.**




## தமிழ் நாட்டுத் தாய்மார்கட்கு ஒரு விண்ணப்பம்.

அருட்சக்தியின் வடிவங்களான அன்னைமார்கட்கு ஒரு விண்ணப்பம்: உங்களிடத்திலுள்ள ஓர் அன்பும் மரியாதையுமே இச் சிறு கட்டுரையை வரையுமாறு என்னைத் தூண்டின. அன்பின் மிக்க அடியான் ஒருவன் ஆண்டவன் சந்நிதானத்தில் நின்று இறைவனைச் சில வேளைகளில் போற்றியும், சில சமயங்களில் தூற்றியும் தன் பக்தியை எங்ஙனம் வெளிப்படுத்திக்கொள்வானோ அங்ஙனமே எனது அன்னைமாரின் சந்நிதானத்தில் நின்று எனது நெஞ்சில் தோன்றியுள்ள நிறைகளையும் குறைகளையும் விண்ணப்பிக்கத் துணிந்தேன். நீங்கள் உங்களுடைய பிள்ளைகளின் மழலைச் சொற்களை எத்தகைய மகிழ்வோடு கேட்டு இன்புறுகின்றீர்களோ, அவ்வாறே சிறியேனது விண்ணப்பத்திற்கும் அன்போடு செவி சாய்ப்பீர்களென்று நம்புகின்றேன். வந்தேமாதரம்.

பெண்மக்களின் துணையின்றி ஆடவர்மட்டும் நமது நாட்டுநலனை நாடியுழைப்பதிற் பெரும்பயன் விளையாது. நமது நாடு முன்னேற்றமடையவேண்டுமானால், ஆண்மக்கள் மட்டுமன்றி வாழ்க்கைத் துணைவிகளான பெண்மக்களும்சேர்ந்து தேசசேவை செய்ய முன்வருதல் வேண்டும். சீதாபிராட்டியா ரின்றேல், இராமபிரானது வீரமும் வெளிப்பட்டிராது; தாயோர் துன்பங்களும் தொலைந்திரா. ஒவ்வொரு பணியிலும் பெண்ணுக்கும் பங்கு உண்டு என்பதை விளக்கவே, ஐந்தொழில் நடாத்தும் சிவபெருமான் தமது திருமேனியி லொரு பாதியை மலைமகளுக்கு ஈந்தருளினார். கல்வியில் உயர்வடைய அவாவுவோர் கலைமகளையும், செல்வத்திற் சிறப்பெய்தவேண்டுவோர் திருமகளையும், செருக்களத்தில் வெற்றிபெற விழைவோர் பராசக்தியையும்வழிபடுவதொன்றே பெண்ணினத்தின் பெருமையைவிளக்கும். நிற்க,

இவ்வுலகனைத்தையும் ஓர் பசுவாக உருவகித்துப் பார்ப்போமாயின், நமது பாரதமணித் திருநாடு அப்பசுவின் சிறந்த அவயவமான மடியின் ஸ்தானத்தில் அமைந்திருக்கக் காணலாம். ஒருகாலத்தில், தனது மக்களுக்குத் தேவையான பொருள்களனைத்தையும் அளித்து, மிகுந்தவற்றால் மற்ற தேசங்கள் பற்பலவற்றையும் ஆதரித்த செல்வத்திருநாடு நமது நாடு. தனது கபடமற்ற விசால நோக்கத்தினால், வியாபார நோக்கத்தோடுவந்த அயல்நாட்டு விருந்தினரையும் மிக்க அன்போடு வரவேற்று உபசரித்து, தன்னலத்தைப் பெரிதாகப் பாராட்டாது, பிறர்க் குதவிபுரிய முன்வந்த தன்பயனாகத் தனது உரிமைகளையே பறி கொடுத்துத் தவிப்பதும் இப்புண்ணிய பூமியே. இப்புனித நாட்டில் தேசசேவையை உயிரினும் சிறந்ததாக

மதித்து, அதன்பொருட்டு உயிரினையும் துறக்க ஒருப்பட்ட வீரமாதர்கள் பற்பலர் இருந்தனர். பண்டைப் பெருமையைப் பேசிப்பேசிப் பெருமை பாராட்டிக் கொள்வதிற் பயனொன்றுமில்லை. ஆகலின், செந்தமிழ்நாட்டுச் சீரிய நங்கைகளாய் நீங்கள், உங்களது அன்னையின் விடுதலைக்காகச் செய்ய வேண்டியனவற்றைப்பற்றி, இங்குச் சிறிது எடுத்துரைப்பேன்.

ஆடவர், பலரோடு கலந்து கூட்டங் கூட்டிப் பிரசங்கம் செய்தும், வெளியில் பலவிடங்களிலும் சென்று பிரசாரம் செய்தும் தொண்டுபுரிந்து வருவது போல பெண்மக்களாய உங்களையும் செய்யச்சொல்ல வரவில்லை. நீங்கள் இருந்தவிடத்திலேயே-உங்களுக்குச் சொந்தமான உங்கள் வீடுகளில் இருந்தபடியே நாடு நலம் பெறுவதற்கேற்ற சிறந்த பணிகளைச் செய்துவரலாம். நீங்கள் மனம் வைத்தால் ஆகாததொன்றில்லை. தேசசேவையில் ஊன்றிய உண்மை விருப்பம் மட்டுமே வேண்டற்பாலது.

நமது புராதன பழக்க வழக்கங்களையும் கொள்கைகளையும் 'கர்நாடக'மென்று வெறுத்து ஒதுக்கித் தள்ளிவிட்டு, நன்மை தீமைகளைப் பகுத்துணராது நவீன நாகரீகத்திற்கேற்ற புதிய அநுஷ்டானங்களையே பெரிதும் விரும்பிக் கைக்கொண்டதனால் விளைந்த கேடுகள் பற்பல மேனாட்டாரிடத்திலிருந்து எவ்வெவை நமது நாட்டிற்குப் பொருத்தமில்லாதனவோ அவற்றை மட்டும் நாம் கற்றுக்கொண்டு, எவ்வெவை நம்மால் ஆதரிக்கத் தக்கனவோ அவ்வவற்றைக் கைவிட்டுவிட்டோம். சாரத்தை எறிந்துவிட்டுச் சக்கையைக் கைக்கொள்ளும் பேதைமை நம்மவரிடத்திலே உண்டு.

காபி சாப்பிடுவதை நாகரீக வழக்கங்களுட் சிறந்ததொன்றாகக் கருதி வருவது பெரும் பேதைமையாகும். குளிர்ச்சி மிக்க அயல் நாடுகளில் வசிப்பவர்கட் கேற்றனவெல்லாம், உஷ்ணப் பிரதேசங்களிலுள்ள நமக்கும் ஏற்புடையனவாகக் கொள்வது பெருந் தீங்காகும். காபியை ஒரு கௌரவமான பானமாகக்கருதி உபயோகித்து வந்ததன்பயனாக வறுமைநிலையை அடைந்துவிட்ட குடும்பங்கள் பற்பல. செல்வச் சீமான்களின் வீடுகளில், அதனாலேற்படும் அநாவசியச்செலவு பெரிதாகத் தோன்றுவதில்லை. காபி அருந்துவதனால் நன்மை இருக்கிறதென்று சொன்னால், பணச்செலவு அநியாயம் என்று கூறமாட்டேன். ஆனால், காபியினால் என்ன நன்மைகள் விளைகின்றன என்பது எனக்கு விளங்கவில்லை. காபி, தேயிலை முதலிய பானங்களை அருந்தியவுடனே ஒருவித உற்சாகம் பிறக்கிறது என்பது உண்மையேயானாலும், நாளடைவில் உடல்வளத்தை அவை குறைத்துவிடக்கூடியனவாயிருப்பதோடு பலவித நோய்களையும் தோற்றுவிக்கின்றன. அம்மட்டோ! காபி குடிக்கும் பழக்கமுள்ள தாய்மார்கட்குப் பிறக்கும் குழந்தைகளும் அடிக்கடி நோய்வாய்ப் படுவனவாகவும், உடல் வளமற்றவைகளாகவுமே இருக்கின்றன. சுமார் முப்பது வருடங்கட்கு முன்வரை இருந்துவந்த தாய்மார்கள் காபியருந்தினார்களில்லை. அவர்களுக்கிருந்த உடல் வளமும், சுறு சுறுப்பும் காபியருந்தும இக்காலத்தவர்கட்கு உளவோ? நாகரீகம் முதிர முதிர-நவீன அநுஷ்டானங்கள் வளரவளர நோய்களும் பற்பலவாகப் பெருகி வருகின்றன. காபி சாப்பிடுவதைப்பற்றிக் காந்தியடிகள் ஓர் நூலில் எழுதியுள்ள அருள் மொழிகளைக் கவனியுங்கள்:—

"காபியில் என்ன குண மிருந்தபோதிலும், துர்க்குணம் அதிகமாக இருப்பதால், அற்ப சுகுணம், நிரம்பிய துர்க்குணத்திற்கு ஈடாகமாட்டாது. காபியானது கபத்திலும் வாதத்திலும் சிறிது குண முண்டுபண்ணுகிறது; ஆனால், இரத்தம் முறிந்து தண்ணீர்போல் இலேசாகிவிடும்படி அது செய்து



விடுகிறது. தேயிலைப் பானத்தினால் தேகாரோக்கியம் நிர்மூலமாகிவிட்ட பலரை நான் பார்த்திருக்கிறேன்."

காபி, தேயிலைப் பானங்களின் தீமைகளை ஒரு கட்டுரையில் அடக்க முடியாதாகலின், அவ்விஷயத்தை இத்துடன் நிறுத்திவிட்டுப் பிறவற்றை ஆராய்வோம்:

"மங்கலமென்ப மனைமாட்சி; மற்றதன்-நன்கலன் நன்மக்கட்பேறு" என நாயனார் நவின்றவாறு, இல்லறவாழ்வின் சிறந்தபயனான புத்திரப் பேறுபெற்ற அன்னைமார், அக்குழந்தைகளை வளர்க்கும் முறையிலும் நவீன நாகரீகம் புகுந்துகொண்டது. இளஞ்சிசுக்களுக்குத் தாய்ப்பாலினும் சிறந்ததொரு பானம் இல்லவேயில்லை. போதியவளவு அது கிடையாதவிடத்து வியாதியற்ற நல்ல பசுவிலிருந்து, சுத்தமான இடத்தில் சுத்தமாகக் கறக்கப்படும் பால், தாய்ப்பாலிற்கு அடுத்தபடியாக நின்று சிசுக்களைப் போஷிப்பதாகுமாதலின், அதனைப் புகட்ட வேண்டும். பசும்பாலைப் புறக்கணித்து அன்னிய நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் (Horlicks; Glasco முதலிய) புட்டிப் பால்களை குழந்தைகட்குப் புகட்டுவதும், ரப்பர் முதலியவற்றைக்கொண்டு பாலை ஊட்டுவதும் குழந்தைகளது உடல்வளத்திற்கே கேடு சூழ்வனவாம். அந்தோ! பச்சிளங் குழவிப் பருவந்தொட்டே அன்னியநாட்டுப் பொருள்களைக்கொண்டு நமது குழந்தைகளை வளர்த்து வருவோமாயின், பிற்கால பாரத வீரர்களாக வரத்தக்க அவர்களது மனத்தில் தேசாபிமானம் எவ்வாறு பதியும்? அம்மட்டோ! சூரிய ஒளியும், நல்ல காற்றும் உடலிற் சிறிதும் படாதவாறு சிலர் குழந்தையின் கைகளையும் முகத்தையும் தவிர்த்து ஏனைய அங்கங்களெல்லாவற்றையும் பலவித சட்டைகளால் மூடிவிடுவதோடு, இடுப்பை 'பில்ட்டா'லும், பாதங்களை 'பூட்'ஸாலும், இறுக்கியும் விடுகின்றனர். உடலினின்றும் வெளிப்படும் வியர்வை வெளியிற்செல்ல வழியின்றித், தேகமெங்கும் பரவிப் பலவித நோய்களுக்கும் காரணமாகிறது. ஒருசிறிய ஆடையே குழந்தையை அழகு செய்யப் போதுமானதாயிருக்க, சிலர் பலவித உடுப்புகளைக் குழந்தைகட்கு அணிந்து அதன் அழகை விருத்திசெய்து விடுவதாக எண்ணிக்கொள்வது பெரும் பேதைமையாவதோடு, குழந்தைகளின் தேகாரோக்கியமும் குன்றுகின்றது. "பேதைமை யென்பது மாதர்க்கணிகலம்"—என்பது, இவ்விஷயத்தில் உண்மையே ஆய்விட்டது.

(தொடரும்.) ஆ. வ. பதுமநாப பிள்ளை, ஆரியூர்.

---

## நம் நாட்டுப் பெண்களும் கை ராட்டினமும்.

நம் நாட்டுப் பெண்களுக்கு மேல்நாட்டார் போன்று சர்வ சுதந்தரமும் கொடுக்கப்படவில்லை. குழந்தைப் பருவத்திலிருந்து புத்தியறிகிற வரையிலும் தாய் தந்தையருக்கு அடங்கியும், அதற்குமேல் கணவனுக் கடங்கியும், கணவனிறந்துவிடின், பிள்ளைகள் சொற்படி கேட்டும், ஒருவருமில்லாவிடில் இனபந்துக்களி லொருவரின் வார்த்தைப்படியுமே நடக்கவேண்டுமென நம் பெரியோர்கள் திட்டம்வகுத்துப் போந்தனர். அதனால் நம் தேசத்து ஸ்திரீகள் எவருமே உத்தியோகம் செய்யவில்லையென்பது பெறப்படுகிறது. இவ்வளவு சட்டதிட்டம் மேற்கொண்ட நம் நாட்டுப்பெண்கள் தங்கள் கணவன்மார்களின் சுகபோஷணையிலும், குழந்தைகளை வளர்த்து அவர்களை வீர திலகங்களாக்குவதிலுமே கண்ணுங் கருத்துமாக உழைப்பாராயினர். இவர்களுக்குத் தங்கள் கணவன்மார்களின் போஷணைக்குரிய பதார்த்தங்கள் தயார்

செய்வதிலும், குழந்தைகளைப் பெற்று வளர்க்கும் அரும்பாடு பெரும்பாடுகளிலுமே தங்கள் காலம் போய்விடுகின்றமையால், இவர்கள் வேறு உத்தியோகம் வகிக்க இடமில்லாமல் போய்விடுகிறது. இதுவும் நம் தேயப்பெண்கள் உத்தியோகம் வகிக்காததற்குத் தக்க காரணமாகும்.

இவ்வண்ணமே இன்றைக்கும் நம் தேயப்பெண்கள் நடந்து வருகின்றனர். தற்கால நவீன நாகரீகத்தில் சிக்குண்ட இரண்டொருவரே காலவிபரீதத்தால் கணவனை மதியாது பெரும் பதவிகொண்டு செருக்கிலாழ்ந்து மகிழ்கின்றனர். நிற்க,

நம் தேயப் பெண்களுள் அநேகர் அக்காலத்தில் தங்கள் ஒழிவுநேரங்களில் கொஞ்சங் கொஞ்சமாகக் கல்வியைச் சேர்த்துப் பெரும்பண்டிதைகளாக விளங்கி யிருக்கின்றனர். இக்காலத்தில் அவ்விஷயம் அபூர்வமேயாகும். இந்துப் பெண்களுக்குக் காலையிலிருந்து நடுப்பகல் வரையிலும் வேலையிருக்கும். அதாவது ஒருமணி அல்லது ஒன்றரை மணியிலிருந்து மாலை ஐந்து மணி வரையிலும் ஒழிவு நேரமேயாம். இந்த நாலுமணிநேர அவகாசத்தை நம் நாட்டுப் பெண்களில் பெரும்பாலோர் வீண் சம்பாஷணைகளிலும், விருதா கோஷ்டிகளிலும், பயனிலா விஷயங்களிலுமே போக்குகின்றனர்.

கணவனோ உத்தியோக நிமித்தம் வெளிச்சென்று விடுகிறான். குழந்தை நித்திரைபுரிகின்றது. இச்சமயம் பக்கத்துவீட்டுப் பாலாம்பாளும், எதிர் வீட்டு வலாம்பாளும் வந்து கூடுகின்றனர். உடனே அவள் தலைமயிரை அவிழ்த்து இவள் பேன் பார்ப்பதும், இவள் தலைமயிரைஅவிழ்த்து அவள் பேன் பார்ப்பதுமாக சபை ஆரம்பமாகிறது! அடுத்தாற்போல "அந்த வீட்டில் அது நடக்கப்போகிறது; இந்த வீட்டில் இது நடந்தது; அவள் செய்தது சரி; இவள் சொன்னது தப்பு" என்பதாக அந்த ஊரிலுள்ள அத்தனைக் குடும்பங்களின் செய்திகளும் இந்த 'வம்பர் சபை'யில் பேசித் தீர்மானம் ஆகின்றன. அதன்பின்பு ஒருத்தி ஒன்றை அவள் சொன்னாளென்று மற்றொருத்தியிடம் சொல்ல, இவள் சொன்னாளென்று இன்னொருத்தியிடங் கூற, அவள் இவளை ஏச, இவள் அவளைப்பேச இப்படியாக ஒன்றுமில்லாத விஷயம் ஒன்பது நூறுபேரறிய ஊர்சிரித்து நாடுசிரித்து முடிவில் கணவன் தலைகுனியத் தலையெழுத்தாய்விடுகிறது. இவ்வளவிற்கும் அறிவற்ற ஸ்திரீகளின் சேர்க்கையும், பயனிலாச் சம்பாஷணைகளுமேயன்றோ காரணம்?

இவ்வண்ணம் நேராதிருக்க, தேசமுன்னேற்றத்திற்கு இன்றியமையாததாகிய கைராட்டினத்தைச் சுழற்றி நூல் நூற்பின் அது தேசத் தொண்டுமாகும்; சிரமத்திற்குக் கூலி கொடுப்பதுமாகும்; பயனுள்ள பொழுதாகவும் போகும். உலகமே போற்றும் சாந்தமூர்த்தியாம் காந்தியவர்கள் நம் நாட்டுப்பெண்களை ஒழிவுநேரங்களில் கைராட்டினத்தில் நூல் நூற்கச் சொல்லுவதில் எத்துணை அர்த்தம் நிரம்பியுள்ளன பாருங்கள்!

சகோதரிகளே!

உங்கள் ஒழிவுநேரங்களை அறிவற்ற ஸ்திரீகளின் பொருளற்ற சம்பாஷணையில் அவமே கழிக்காது, நல்ல புஸ்தகங்களைப் படித்துத் திருந்துவதிலும், கைராட்டினத்தில் நூல் நூற்பதிலுமே முழுப்பொழுதையும் செலவழியுங்கள். அது உங்களுக்கு நற்பயனையும், கீர்த்தியையு மளிப்பதோடு "நாற்குணமும் நாற்படையாக" உங்களைவந்தடையும். அவைகளைக் கைக்கொண்டால் நீங்கள் எவரையும் எக்காரியத்தையும் வெல்லலாம். பாரததேவி உங்களுக்கு அருள்புரிவாளாக!

தி. சி. து. ஜம்புகேஸ்வரம்.




## காகித உற்பத்தி.

(125-ம் பக்கத் தொடர்ச்சி.)

புத்தக வேலைக்கு அத்யாவசியமான காகிதங்கள், இக்காகித இயந்திரத்தாலேயே முடிவடைகின்றன. மேலே குறிப்பிட்ட 'டிரையர்ஸி' (Dryers) லிருந்து காகிதங்கள் பட்டடை (Stacks) என்னும் காய்ச்சிய உருளைகொண் டழுத்தப்படும் இயந்திரத்திற்குக் கொண்டுபோகப்படுகின்றன. 'டிரையரில்' உபயோகப்படும் உருளைகளைவிட வேகமாகச் சுற்றும் பல உருளைகளின் சேர்க்கைக்கே பட்டடை எனப் பெயர். இப்பட்டடையின் வேகத்தாலும், கனத்தாலும் காகிதங்கள் மேலுங் கீழுமாகச் செல்லுங்கால் தேவையான மிருது அடைகின்றன. இவ் வியந்திரத்தின் உதவிவேண்டப் பெறாத காகிதங்கள் தனியே சேகரிக்கப்படுகின்றன. அவற்றைக் குறிப்பான வேறொரு இயந்திரத்தைக்கொண்டு வேலை செய்துகொள்ளுகிறார்கள்.

காகிதங்களுக்கு மேல்பூச்சுக் கொடுப்பதற்கு, அதற்கான துணைப் பொருள்கள் ஓர் பெரிய பெட்டியில் கலந்துவைக்கப்படுகின்றன. அவை அநேகமாகச் சுத்த சீனதேச வெண் களிமண்ணேயாம். (Casein) 'காசீயின்' என்ற ஒருவிதப் பொருள் அந்தக் களி மண்ணுடன் சேர்க்கப்பட்டு நன்றாகக் கலந்தபிறகு வடிகட்டப்படுகிறது. இதற்காக ஓர் கலக்குங் கருவியும் அங்குண்டு. இந்தக் கலந்த கஞ்சிபோன்ற சாரத்தைத் தொட்டியிலிருந்து எடுத்துக்கொண்டுபோய் இயந்திரத்தில்விட அது சமமாகப் பரவிக் காகிதத்தின் சேர்க்கையிற்றங்குகிறது. இதற்கு, மிருதுவானதும், நீளமானதுமான மயிரடர்ந்த தூரிகை (Brush) யொன்று மிக்க உதவிபுரியும். காகித இயந்திரத்தினின்று காகிதங்கள் வெளிவந்தவுடன் இவ்வேலை முடிவடைகின்றது.

காகிதம் இவ்விதமாகத் துணைப் பொருள்களைக்கொண்டு, பள பளப்புள்ளதாகச் செய்யப்பட்டவுடனே அதன் ஈரத்தைப்போக்கத் திரும்பவும் அது காய்ச்சும் இயந்திரத்தை யடையும். இங்கு காகிதங்களுக்கிடையே உஷ்ணக்காற்று பரவத் தாள்கள் காய்ந்து பளபளப்புடன் பளிங்கெனப் பிரகாசிக்கின்றன. இஃதானவுடன் காகிதம் சுருள் உருளை யொன்றை யடைய ஆங்குச் சுருள் சுருளாகச் சுற்றப்படுகின்றன.

இவ்வாறு காகிதச் சுருள்கள் பூச்சு இயந்திரத்தினின்றும் வெளிப்பட்டவுடனே அவை மையொத்துங் காகிதத்தைப்போல் (Blotting Papers) இருக்கும். 'சூபர்காலண்டர்' என்ற இயந்திரத்தால் காகிதமானது அழகும் பளப்பளப்பும் வழ வழப்பு முள்ளதாகச் செய்யப்படுகின்றது. 'சூபர்-காலண்

டர்' என்பது இருப்புச் சுருளடங்கிய ஓர் அழகிய பட்டடை. இவ்வியந்திரம் மின்சார சக்தியால் ஓடுகின்றது. 'கூபர்காலண்டரின்' உருக்கு உருளைகள் மாறி மாறிச் சுற்றிக் காகிதச் சுருளைப் பின்பற்றிச் சுழலும். காகிதம் மேல் 'ரீலி' (Reel) லிருந்து கீழு மேலுமாக வந்து கீழ் 'ரீலி'ல் சுருட்டப்படுகின்றது. உராய்ஞ்சுவதால் உருளைகளின் சுற்றும் வேகம் சிறிது சிறிதாகக் குறைய, அவ்வுருளைகளின் பளுவானது அழுத்தக் காகிதத்தின் சுரசுரப்புள்ள நிலை ஒருவிதமாகப் பூர்த்தியாகும். பளபளப்பில்லாத அட்டைக் காகிதங்களும் வெள்ளைக் கடிதத்தைப்போலவே பளபளப்புக் கொடுத்துப் பூர்த்தி செய்யப்படுகின்றன. காகிதம் செய்யும் முறையில் வழவழப்புத் தரும் கூழ் செய்யும் வகையிற்றான் பலவகைக் காகிதங்களின் வேற்றுமை யேற்படுகின்றன. காகிதங்களுக்குப் பிரகாசத்தைத்தந்து, காண்போர் கண்களைக் கவரச் செய்யு மவற்றின் வனப்பிற்கு அவ்வியந்திரத்திலுள்ள 'பில்லர்' என்னும் கருவியே காரணமாகும். சில காகிதங்கள் அளவுபடுத்த வேண்டியவைகளாயிருக்கின்றன. பெரும்பாலும் குங்கிலியம் கலந்த ரசாயன சக்தியால் காகிதம் அளவுபடுத்தப்படுகின்றது.

காகிதச் சுருள்களைத் தாள்களாக வெட்டும் வேலை காகிதஞ் செய்வதிலுள்ள பல பிரிவான வேலைகள் முடிந்த பின்னரே நிகழ்கின்றது. முக்காலி போன்ற பல சிறு கருவிகளில் காகிதச் சுருள்கள் நிரப்பப்படுகின்றன. இவை மற்றொரு இயந்திரத்தின் சுற்றுந் தன்மையால் அளவாகவும் அடுக்குகளாகவும் வெட்டப்படுகின்றன. காகிதங்களைத் தாள்களாக (Sheet) எண்ணி வியாபார ஸ்தலங்களுக்கு அனுப்புவர் வியபாரிகள்; பிசிரான காகிதங்களை மட்டும் நீக்கிவிட்டு வினையவற்றைச் சாதாரணமாகத் திரட்டுகின்றனர். மூலைச்சட்டத்தின் உதவியால் தாள்களின் மூலைகள் சரியாக வெட்டப்பட்டபின் காகித உற்பத்தியின் வேலை பூர்த்தியாகின்றது (இண்டஸ்டிரி)

## பட்டு உற்பத்தி செய்யும் விதம்.

'பட்டு உற்பத்தி செய்யும் விதம்' என்பது (Sericulture) 'சிரீஸ்' (Seres) என்ற சீனர் மொழியையே ஆதாரமாகக் கொண்டதென்பார். தென் சீன மக்களாலேயே முதல் முதலாகப் பட்டுச்செய்யும் விதம் கண்டு பிடிக்கப் பட்டதாம். சீனதேசத்திற்குப் பட்டுபூச்சியின் தொட்டில் என்ற பழம் பெயரும் உண்டென்பர். 'கடந்த ஐயாயிர மாண்டுகளாகத் தென் சீனர்கள் பட்டுத் தொழிலைக் கண்டுபிடித்து ஆடை யுற்பத்திசெய்து வருகின்றார்கள். அதன் உற்பத்தியில் பழங்காலத்திலேயே உயர்ந்த நிலையை யெய்தியவர்களும் அவரே' யென்பார் பட்டுத்தொழி லாராய்ச்சியார்.

ரோம ராஜ்யம் ராம ராஜ்யமெனப் பெருமிதம் நிறைந்து விளங்கிய போது பட்டுத்தொழில் இந்தியாவில் பரப்பப்பட்டது. பின்பு, கிழக்கு இந்திய வர்த்தகக் கூட்டுறவு சங்கத்தார் அபரிமிதமாகப் பட்டை ஏற்றுமதி செய்து கொண்டுபோயினர். வெகு புராதன காலத்திலிருந்து இந்தியர்கள் விவாகம், உத்ஸவம், மதாசார காரியங்கள், சிரார்த்தாதி ஹோம எக்யங்கள் முதலியன நடக்குங் காலங்களில் பட்டாடைகளையே தரித்தார்களென்பதற்கு இருக்கு வேதத்தில் ஆதாரங்கள் பல உள்ளன. ஹிமாலயப் பிராந்தீங்களில் சில வகைப் பட்டுப் பூச்சிகள் இயற்கையாகவே இருந்தனவென்றும், ஆதலின் பட்டின் உற்பத்திக்குச் சீனதேசம் ஆரம்பஸ்தான மென்பது அசம்பாவிதமென்றும் சிலர் சாதிப்பர்.

(தொடரும்)




(139-ம் பக்கத் தொடர்ச்சி.)

### ஸ்நானம்.

ஸ்நாநம் என்பது நீராடுதல், அல்லது நீரில் குளித்தல் ஆகும். சாதாரணமாய் ஜலம் ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றில் ஜலம் வரும் மார்க்கத்தில் திரும்பி நின்று, அரையில் அதாவது இடுப்பில் வேஷ்டியைக் கட்டிக் கொண்டு குளித்தல் முதல்தரம் எனக்கொள்ளல் வேண்டும். அப்படிக் குளிக்கும்போது ஜலத்தில் இறங்கி வலதுகையில் ஒரு உத்தரணி ஜலத்தை எடுத்துக்கொண்டு, "இப்போது நான் உட்கொள்ளும் ஜலரூபமான தேவனே! எக்காரணத்தினாலும் என் சரீரத்தில் வியாதி யணுகவொட்டாது, நீர் அதைக் காக்கவேண்டும்; எந்த ஜலத்தை நான் என் சரீரத்தில் விட்டுச் சுமார் 2-கோடி மயிர்த் துவாரங்களுள்ள வழிகளின் மூலமாக என் சரீரத்திலுள்ள வியர்வை முதலானவைகளால் உண்டாயிருக்கும் அழுக்குகளைப் போக்கப் போகின்றேனோ அந்த ஜலரூப கடவுளாகிய நீர் என் சரீரத்தினுள்ளும் சென்று, என்னைச் சுத்திசெய்து, உள்ளும் புறம்பும் உன்னை ஸ்பரிசிப்பதால் ஜலுப்பு முதலிய வியாதிகள் என்னை அணுகாதபடி காப்பீர்" என்னும் மந்திரத்தை உச்சரித்து ஸ்நாநம் செய்ய ஆரம்பித்தல் வேண்டும்.

ஸ்நாநம் செய்யும்போது கௌபீனம் மாத்திரம் இருந்தால் போதாது; இடுப்பில் சலவைசெய்த அல்லது தோய்த்துள்ள சுத்த வேஷ்டியைத் தரித்திருத்தல் வேண்டும். அப்படித் தரித்தபிறகு சிரசு உள்பட ஜலத்தில் தோயும்படி மூழ்கவேண்டும்; அல்லது கையால் ஜலத்தை வாரிச் சிரசில் கொட்டிக் கொள்ளுதல் மூலம் சரீரம் பூராவும் ஜலத்தில் நனையும்படி செய்தல் வேண்டும். சுமார் 20-நிமிஷத்திற்குக் குறையாமலும் ½-மணிநேரத்திற்கு மேற்படாமலும் இடுப்பில் கட்டியுள்ள வேஷ்டியைக்கொண்டு சரீரம் பூராவும் நன்றாகத் தேய்த்து அலம்பினால் மயிர்க்கால் துவாரங்களிலுள்ள விஷ அழுக்குகள் வெளிப்பட்டுவிடும். அதுசமயம் காலத்தை வீணே போக்காமல், இஷ்ட தேவதையை நினைத்தல் ஸ்தோத்திரித்தல் முதலான மனம் புந்தியினாலாக வேண்டிய காரியங்களையும் செய்தல் வேண்டும். இப்படிச் செய்தபின் ஜலத்தைவிட்டுக் கரையிலேறியதும் சரீரம் இலேசாயும், பசி அதிகமாயும், புத்தி சூட்சுமமாயும் விளங்கும்.

மேல்நாட்டில் கண்டுபிடித்துள்ள சாஸ்திரங்களில் ஒன்றாகிய (ஸைன்ஸ் ஆப் ஹீலிங்) என்னும் ஔடதம் இல்லாமலே வியாதிகளை நீக்கும் முறையாகிய ஜல சிகிச்சை புஸ்தகத்தில் இதைப்பற்றிச் சொல்லியிருப்பதாவது:—

"ஒரு கோழிமுட்டை வடிவமான தொட்டியில் குளிர்ந்த ஜலத்தை விட்டு அதில் உட்கார்ந்து, தலையும் இரண்டு கால்களும் ஜலத்தில் படாதபடி இருந்துகொண்டு, டிரில் அல்லது, பினானல் துண்டைக் கையில் வைத்துக் கொண்டு, ஜலத்தில் மூழ்கியிருக்கும் பாகமாகிய வயிற்றின் பாகத்தில் நாபிக்

குக்கீழ் அடிவயிற்றை', மேற்சொல்லியவைகளில் யாதாவதொரு துணியால் சுமார் ½-மணிநேரம் தேய்த்தால் வயிற்றின் கண்ணுள்ள சகல விஷங்களும், வயிற்றின் மயிர்க்கால்களின் மூலமாக வெளிப்பட்டு வயிற்றிலுள்ள சகல உஷ்ணங்களும் மாறிச் சரீரத்திலுள்ள சகலவியாதிகளும் நீங்கும் என்பதே.'' இது, (ஹிப் பாத்) இடுப்பின் ஸ்நான விதி என்று சொல்லப்படுகின்றது. இவ்விஷயம் விஸ்தாரமாக ''லூவிஸ் கூனிஸ்டிரீட்மெண்ட்'' என்னும் புஸ்தகத்தில் கூறியிருப்பதால் வேண்டியவர்கள் அப்புஸ்தகததில் இதைப் படித்துணர்ந்து கொள்ளலாம்.

இவ்வாறு, நம்நாட்டு ஸ்நானவிதிகளையும் குணங்களையும் அனுசரித்தே மேல்நாட்டுத் தத்துவசாஸ்திரிகளும் சரீரத்தில் குளிர்ந்த ஜலம்விட்டுத் தேய்ப்பதினாலேயே சகல வியாதிகளும் நீங்கிவிடுகின்றது என்பதைக் கண்டு பிடித்திருக்கின்றார்கள். எனினும், நம்நாட்டில் சர்வ சாதாரணமாய்த் தினப்படி செய்யும் ஸ்நாநத்தின் விதி மேல்நாட்டு சாஸ்திரத்தைவிடப் பதின்மடங்கு உயர்ந்ததென்றே கூறலாம். ஏனெனில் மேல்நாட்டு ஜல சிகிச்சையில் வயிற்றின் அடிப்பாகத்திலுள்ள அழுக்குகளே வெளிப்படுகின்றன. நமது ஸ்நாந விதிப்படி சரீரம் பூராவும் தேய்த்தலால் சகல பாகத்திலுள்ள அழுக்குகளும் வெளிப்பட்டுவிடும். அன்றியும் தொட்டி ஸ்நாநத்தில் ஒருசமயம் வயிற்றின் பாகத்தில் படும் ஜலத்தால் சிரசிற்கு உஷ்ணம் ஏறி சலுப்பு முதலிய வியாதிகள் உண்டாக இடமுண்டு. நமது ஸ்நாந விதிப்படி சரீரத்தின் உள்ளும் புறம்பும் ஏககாலத்தில் குளிர்ந்த ஜலத்தால் நனைதலால், ஜலத்தால் உண்டாகும் எக்கெடுதிகளும் சரீரத்திற்கு ஏற்படமாட்டா. இக்கருத்துக்களனைத்தையும் உள்ளடக்கியே நமது மூதாட்டியாகிய ஔவையார் ''சனிநீராடு'' என்று கூறியிருக்கின்றார்கள். இதற்கு அநேகர் ''சனிக்கிழமைதோறும் எண்ணெய் தேய்த்துக்குளி'' என்று அர்த்தம் செய்து வருகின்றார்கள்.

''சனிநீராடு'' என்பதற்கு எப்பொழுதும் ''குளிர்ந்த ஜலத்திலேயே நீ குளி'' என்பதே கருத்தாம்.

வெந்நீரில் குளித்தல் உசிதமாகாது. சரீரத்தில் வியாதியோடு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் சண்டாளனுக்கே அதாவது—பஞ்சகிர்த்திய மாகிய சௌசம், ஆசமன்னியம், ஸ்நாநம், பிராணாயாமம், சந்தியாவந்தனம் ஆகிய இவைகளைச் செய்யாது விடுத்தவனுக்கே வெந்நீரில் குளித்தல் தகுதியுடையது என்று உணருதல்வேண்டும்.

ஆற்றில் ஸ்நானம் செய்தலே உத்தமம். அப்படி ஆறுகள் இல்லாவிடங்களில் கால்வாய், ஏரி, குளங்கள் ஆகியவற்றில் செய்வது மத்திமம். குளங்களில்லாத விடத்தில் கிணறுகளில் ஸ்நாநம் செய்வது அதமம். குடங்கள், அல்லது வேறு பாத்திரங்களில் ஜலத்தை மொண்டுவைத்துக்கொண்டு, செம்பு, சோடுதபலை இவைகளால் மொண்டு சரீரத்தில் ஊற்றிக் கொள்வது அதமா அதமம்.

இங்குக் குளிர்ந்த ஜல ஸ்நானம் மாத்திரம் சொன்னதால் தைலமீ தேய்த்துக்கொண்டு குளிக்கும் விதி சொல்லவில்லையே என்று அநேகர் சந்தேகிக்கலாம். வைதீக விதியில் தைலஸ்நாநம் செய்யவேண்டிய ஆவசியகமே கிடையாது. ஆனால், பலரும் தைலஸ்நாநம் செய்துகொண்டு வருகின்றார்களே என்றால் அவர்கள் மேல் சொல்லிய விதிகளை அநுசரிப்பவர்களல்லர் என்றும், அவற்றிற்கு மாறான வழியில் நடப்பவர்களென்றும், வியாதியின் வசப்பட்டவர்களென்றும் அறிந்துகொள்ள வேண்டும்.

டாக்டர். மே. மாசிலாமணி முதலியார்.

# ஜேம்ஸ் வாட்டும் நீராவி இயந்திரமும்.

அநேக நூற்றாண்டுகளுக்குமுன் இயந்திரங்கள் அதிகமாய் இல்லாதபோது இங்கிலாந்து, ஸ்காட்லாண்டு ஆகிய இந்நாடுகளைச் சேர்ந்த மக்கள் தங்களுக்கு அத்தியாவசியமான நிலக்கரியைச் சுரங்கங்களினின்று வேண்டிய அளவுக்குப் பெற அதிகமான கஷ்டத்தை அடைந்தார்கள். முதலில் பூமியின் மேற்பரப்புக்குச் சமீபத்தில் இருந்த சிறு சிறு சுரங்கங்களினின்று நிலக்கரியை எடுத்து உபயோகித்து வந்தார்கள். அந்த நிலக்கரியும் ஆய்விடவே பூமியில் ஆழமாகச் சுரங்கங்கள் தோண்டி அவைகளிலிருந்து நிலக்கரி எடுக்கவேண்டியிருந்தது. அந்தச் சுரங்கங்களுக்குள் ஆண்களும் பெண்களும் நுழைந்து நிலக்கரியை வெளியே எடுத்துக்கொட்டுவது வழக்கம். இன்னும் பாரத்தை மேலே எழுப்பும் இயந்திரத்தைக்கொண்டும் அந்த நிலக்கரியை மேலே எடுத்துக் கொட்டுவதுமுண்டு. அந்த இயந்திரமானது குதிரைகளால் இழுக்கப்பட்டுவந்தது. ஆகவே சுரங்கத்திலுள்ள நிலக்கரியைச் சீக்கிரமாகவும் பணச் செலவு அதிகமின்றியும் வெளியே எடுத்துக்கொட்ட ஓர் இயந்திரம் அத்தியாவசியமாயிருந்தது. அத்தகைய இயந்திரத்தைச் செய்யக்கூடியவர் யார் என்பதைப்பற்றி அங்குள்ளார் ஆலோசித்துக்கொண்டிருந்தனர்.

அந்தச் சந்தர்ப்பத்தில் பாபின் என்னும் பெயரைக்கொண்ட பிராஞ்சுக்காரனொருவன் சிறியதும் ஒழுங்கற்றதுமான ஒரு நீராவி யந்திரத்தைச் செய்து முடித்தான். அவ்வியந்திரமானது ஒரு சிலிண்டரைத் தன்னகத்துக் கொண்டிருந்தது. அந்தச் சிலிண்டரில் பிஸ்டன் என்னும் ஒருவகைக் கருவி மாட்டப்பட்டிருந்தது. அந்த இயந்திரத்துக்குப் 'பாய்லர்' நீர் கொதிக்கும் பாகம்—இல்லை. பிஸ்டனுக்குக் கீழே இருந்த சிலிண்டரில் தண்ணீர் ஊற்றப்படும். சிலிண்டருக்குக் கீழே நெருப்புப்போட்டு எரிக்கப்படும். தண்ணீர் கொதித்து நீராவியாக மாறும்போது அது பிஸ்டனை அசைக்கும். நெருப்பை எடுத்துவிட்ட கொஞ்சநேரத்திற்கெல்லாம் சிலிண்டர் குளிர்ந்துவிடும். சிலிண்டர் குளிர்ந்தவுடன் நீராவியும் தண்ணீராகத் திரும்பவும் மாறிவிடும். அப்படி மாறிவிட்டால் பிஸ்டனுடைய அசையும் தூக்தி நின்றுவிடும். இந்த இயந்திரம் ஓர் அசைவை உண்டாக்க அநேக நிமிடநேரத்தை எடுத்துக் கொண்டிருந்தது. அத்துடன் அதிகச் செலவும் ஆகிவந்தது. நீராவியைக் கொண்டு முதல் முதலில் ஓட்டப்பட்ட இயந்திரம் இது ஒன்றுதான். இதைக் கொண்டு சில வேலைகள் நடந்துவந்தன.

அதன்பின் தாமஸ் நியுகோமன் என்ற கருமான் ஒருவன் பாபின் கண்டுபிடித்த வழியைக்கொண்டு சில திருத்தங்களுடன் இன்னொரு வகையான இயந்திரத்தைக் கண்டு பிடித்தான். அவ்வியந்திரமானது சுரங்கத்திலிருந்த தண்ணீரை இறைத்ததுடன் நிலக்கரியையும் வெளியே எடுத்துப் போட்டது. அந்த இயந்திரமானது ஒவ்வொரு தடவைக்கும் ஐம்பது கஜ ஆழத்தி

விருந்த சுரங்கங்களிலிருந்து ஐம்பது காலன் வீதம் தண்ணீரை வாரி இறைத்து வந்தது. ஒரு நிமிஷத்திற்குப் பன்னிரண்டுமுறை தண்ணீர் வாரி இறைக்கும் சக்தியை அந்த இயந்திரம் கொண்டிருந்தது.

முதலில், நியுகோமன் என்பவன் சிலிண்டருக்கு வெளியில் தண்ணீரைக்கொட்டி நீராவியைக் குளிரவைத்துக் கொண்டிருந்தான். அப்படி அவன் ஒருநாள் செய்துகொண்டிருக்கையில் இயந்திரமானது அதிக வேகத்துடன் வேலை செய்தது. அதன்மேல் அவன் அதைக் கவனிக்கலானான். கவனிக்கையில், சிலிண்டரில் துவாரம் ஒன்று இருந்தது. அது அவனுடைய கண்ணுக்குத் தென்பட்டது. பிஸ்டனுடைய மேல்பாகத்தின் வழியாய்க் காற்றுச் செல்லாமல் இருப்பதற்காகத் தண்ணீரானது அதன்மேல் ஊற்றப்பட்டிருந்தது. அந்தத் தண்ணீர் மேலேசொன்ன துவாரத்தின் வழியாய் உள்ளே சென்றுகொண்டிருந்தது. அதையும் அவன் கவனித்தான். அங்ஙனம் சென்ற தண்ணீரானது நீராவியை விரைவாகக் குளிரச் செய்துகொண்டிருந்தது. அதைக்கண்ட நியுகோமன் மற்றொரு தடவையில் இயந்திரம் செய்யும்போது சில அத்தியாவசியமான மாறுதல்களைச் செய்தான்.

தண்ணீரையும் நீராவியையும் சிலிண்டருக்குள் விடும் மரையைக் கவனிக்க, ஹம்ப்ரி பாட்டர் என்ற ஒரு சிறுவன் நியமிக்கப்பட்டிருந்தான். அவனால் இன்னொரு திருத்தம் அந்த நீராவி இயந்திரத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. அந்த வேலையைக் கையால் ஓயாது செய்து பாட்டர் சோர்வடைந்து விட்டான். அதன்மேல் அவன் அந்த மரைகளுக்குக் கயிறுகள் கட்டி அக்கயிறுகளை இயந்திரம் அசைக்கும்படியாய்ச் செய்துவிட்டான். அவன்தான் 'வால்வ்கியர்' என்ற அடைப்புக் கதவுகளைக் கண்டு பிடித்தான்.

இங்கிலாந்து ஸ்காட்லண்டு ஆகிய இந்த நாடுகளிலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களுக்கு நியுகோமனுடைய இயந்திரத்தால் அதிகமான நன்மையே ஏற்பட்டிருந்தது. எனினும் அதை ஓட்ட அதிகமான நிலக்கரிவேண்டியிருந்தமையால் நிலக்கரிச் சுரங்கச் சொந்தக்காரர்கள் அதன்மீது அதிகமான சிரத்தையைச் செலுத்தவில்லை. அந்த மாதிரியான நீராவி இயந்திரம் ஒன்றுக்குப் பல்லாயிரக் கணக்கான டன்நிறையுள்ள நிலக்கரி வேண்டியதாயிருந்தது. அப்படி இருந்துகொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் ஒருநாள் (1764-ம் வருஷம்) நியுகோமனுடைய நீராவி இயந்திரம் ஒன்று பழுதாய்விட்டது. அதைப் பழுதுபார்க்க ஜேம்ஸ்வாட் என்ற ஒருவரிடம் அது ஒப்படைக்கப்பட்டது.

இந்த ஜேம்ஸ்வாட் என்பவனுடைய இளமைப்பருவத்தைப்பற்றி அநேக கதைகள் சொல்லப்படுகின்றன. ஆனால் அவையெல்லாம் உண்மையென்று நம்புவதற்கு இடமில்லை. அவன் சாந்தமாய் இருந்து வந்தான்; அவனுக்கு தேகபலமும் அதிகமாய் இல்லை. பொம்மைகள் எழுதுவதில் அவனுக்குப் பிரியம் அதிகம். அவனுடைய படிப்பைப்பற்றி ஒன்றுஞ் சொல்வதற்கில்லை.

ஒரு சந்தர்ப்பத்தில் அவன் டீகெட்டில் அடுப்பிலிருந்தபோது அதைக் கவனித்துக்கொண்டிருந்ததாகவும்; அப்போது அவனுடைய அத்தையான



வள் அவனைப்பார்த்து 'அடே ஜேம்ஸ்! உன்னைப்போல் சோம்பேறியான பையனை நான் பார்த்ததேயில்லை. நீ புத்தகம் எடுத்துப் படித்தால் படி. இல்லாவிட்டால் பிழைப்பதற்கு அநுகூலமான தொழில் ஒன்றைக் கற்றுக்கொள். கடந்த ஒருமணிநேரமாய் நீ வாயைத் திறக்காமல் அடுப்பண்டை உட்கார்ந்துகொண்டு அந்தச் சாமானின் மேல்மூடியைத் திறப்பதும் மூடுவதுமாக இருந்துகொண்டிருக்கிறாய்; இன்னும் நீராவியின்மீது கோப்பை ஒன்றைவைத்து அதைப் பிடித்துக்கொண்டிருக்கிறாய்; அதைத் தவிர நீ என்னவேலை செய்தாய்? ஒரு வேலையும் செய்யவில்லை. இப்படிக் காலங்கழிப்பது உனக்கே வெட்கமாயில்லையா' என்று கேட்டதாகவும் ஒரு கதை சொல்லப்படுகிறது. ஆனால் ஜேம்ஸ் அவளுடைய வார்த்தையைப் பொருட்படுத்தாமல் அந்த நீராவியானது அடிக்கடி மேல் மூடியைத் தள்ளிக்கொண்டிருப்பதை இடைவிடாது கவனித்துக்கொண்டிருந்தான். அந்த அநுபவத்தைக் கொண்டே பிற்காலத்தில் அவன் நீராவி இயந்திரத்தைக் கண்டு பிடித்தான்.

ஜேம்ஸுக்கு வயது வந்தவுடன் கிளாஸ்கோ சர்வகலாசாலையார் அவனைத் தங்களுடைய சர்வகலாசாலையில் சாமான்கள் செய்யும் தொழிலில் நியமித்துக்கொண்டார்கள். அப்போதுதான் நியுகோமனுடைய இயந்திரம் பழுது பார்க்கப்படுவதற்காக அவனிடம் ஒப்படைக்கப்பட்டது. அவன் அச்சந்தர்ப்பத்தை வீணாக்காமல் அதனுடைய பல பாகங்களையும் அதனால் ஏற்படக்கூடிய நன்மைகளையுஞ் செவ்வையாய் அறிந்துகொண்டான். "நீராவியைக் குளிரவைக்கக் குளிர்ந்த தண்ணீரைச் சிலிண்டருக்குள் விட்டால் அது உஷ்ணத்தை அதிகமாய்க் குறைத்துச் சக்தியையும் போக்கிவிடுகிறது; அதனால்தான் பணச்செலவு அதிகமாகிறது" என்பன போன்றவைகளை ஜேம்ஸ் தெரிந்துகொண்டான். அதன்மேல் அவன் சிலிண்டரைக் குளிரவைக்காமல் நீராவியைப்போல் எப்போதும் உஷ்ணமாகவே வைத்துக் கொண்டிருக்கவேண்டும் என்ற ஒரு முடிவுக்குவந்தான். அதை எப்படிச் செய்வதென்று அவன் ஆலோசிக்கத் தொடங்கினான். 1765-ம் ஆண்டில் ஒருநாள் அவன் வெளியே உலாவி வரச்சென்றபோது "நீராவியானது மிகவும் இலேசாய் இருப்பதால் காலியான இடத்தில் ஒருவிதக் கஷ்டமுமின்றிப் போய்ச் சேரும்; ஆகையால் அதற்கும் சிலிண்டருக்கும் நடுவில் ஒரு குழாயை வைத்தால் அது, நீராவியைக் காலியான பாத்திரத்துக்குள் கொண்டுபோய்ச் சேர்த்து விடுமென்று எண்ணினான். அதன்பின் சிலிண்டரைக் குளிரவைக்காமலே நீராவியை மாத்திரம் குளிர வைத்துவிட்டுக் குளிர்ந்த ஜலத்தை வாயு வாங்கி என்னும் கருவியால் வெளியே அகற்றிவிடவேண்டுமென்றும் தீர்மானித்துக்கொண்டான். இத் தீர்மானங்களைக்கொண்டே அவன் நீராவி எந்திரங்களை நல்ல விதத்தில் அமைத்தான்.

இவனுடைய ஷை தீர்மானங்களை அடிப்படையாகக்கொண்டே இப்போது இருக்கும் நீராவி இயந்திரங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. நீராவி இயந்திரங்களால் ஆயிரக்கணக்கான நன்மைகள் ஏற்பட்டுள்ளன. அவற்றிற்கு மூலகாரணன் ஜேம்ஸ்வாட் என்பவனே. சிலிண்டரிலிருந்து நீராவியைத் தனியான பாத்திரத்திற்குக் கொண்டுவந்து விட்டபடியால்தான் ஜேம்ஸ்வாட் சிலிண்டரைச் சூடாகவே வைத்துக் கொண்டிருக்க முடிந்தது. சிலிண்டரின் மேல்பாகத்தை மூடிவிட்டதனால் நீராவி வெளியே போகக்கூடாமலும் போய்விட்டது. அத்தகைய சீர்திருத்தங்களுடன் ஜேம்ஸ் நீராவி இயந்திரம் செய்யமுயன்று அதன் பயனைக் கடனில் மூழ்கிவிட்டான். அச்சந்தர்ப்பத்தில் பணக்காரனான ஒருவன் ஜேம்[illegible]இருந்தான். ஜேம்ஸ் அதிகக் கஷ்டப்பட்டுத் தன்[illegible]லொத்த இயந்

187484

திரத்தை வேறு யாருஞ் செய்யக்கூடாதென்று அதைப் பதிவு செய்துவிட்டான்.

பின்னர் 1774-ம் ஆண்டில் ஜேம்ஸ்வாட் அநேக கஷ்டப்பட்டு ஓர் இயந்திரத்தைச் செய்து அதைப் பர்மிங்ஹாமுக்கு அனுப்பினான். அந்த இயந்திரம் நன்றாகவே வேலைசெய்தது. அதன்மேல் அநேகர் அவனுடைய இயந்திரங்களை வாங்க ஆரம்பித்தனர். காரன்வாலைச்சேர்ந்த சுரங்கக்காரர்களும் அந்த இயந்திரத்தைக் கண்டு களிகூர்ந்து வாங்க ஆரம்பித்தார்கள். அதன்மேல் மற்றச் சுரங்கக்காரர்களும் நியுகோமனுடைய இயந்திரத்தைவிட்டு ஜேம்ஸ் வாட்டினுடைய இயந்திரத்தை வாங்க ஆரம்பித்தார்கள். அதனால் வாட் பணக்காரனாகிவிட்டனன்.

அதன்மேல் ஜேம்ஸ்வாட் தன்னால் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரத்தை விருத்தியாக்குவதிலேயே காலத்தைக் கழித்துவந்தான். பின்னர் கண்டன்சர், கிராங் அண்டு பிலைவீல், டபில் ஆக்டிங் என்ஜின் என்பவைகளையும் கண்டுபிடித்தான். இயந்திரங்களின் ஓட்டத்தை அளவிட்டு உரைக்கக்கூடிய 'பிலை பால் கவர்னர்' என்ற ஒரு கருவியையுங் கண்டுபிடித்தான். அவனால் கண்டுபிடிக்கப்பட்டவைகள் முக்கியமானவைகளா யிருந்தபடியால் அந்த இயந்திரங்களையே அனைவரும் விரும்பி வாங்கிவந்தனர்.

பின் அவன், ஒரே நீராவியால் இரண்டு இயந்திரங்கள் ஓடுவது என்ற முறையையுங் கண்டுபிடித்தான். அந்த இயந்திரமானது இக்காலத்திலும் உபயோகத்தில் இருந்து வருகிறது. 'பிஸ்டன் ரிங்ஸ்' என்பவைகளும் அவனால் உண்டாக்கப்பட்டன.

மனிதவர்க்கத்தின் முன்னேற்றத்திற்கு நீராவி இயந்திரமானது இன்றியமையாததா யிருக்கிறது. ஆண்களும் பெண்களும் இதுவரை கையால் செய்து கொண்டிருந்த வேலைகளை நீராவி இயந்திரமானது செய்து வருகிறது. ஜேம்ஸ்வாட் அடுப்பில் கொதித்துக்கொண்டிருந்த பாத்திரத்தின் மேல் மூடி அசைவதைக் கண்டு அதன் மூலமாய் எண்ணிய எண்ணமானது நாளடைவில் அரிய தொழிலாய் முளைத்துக் கிளைத்து விருத்தியடைந்து பலனளித்து வருகின்றது.

புராதனி.

---

## ஆனந்தபோதினியி னருமை.

### வெண்பா.

ஆனந்த போதினியை யாரும் படித்துணர
வானந்த மாரியுண் டாவதுபோல்—ஆனந்த
மானபிர சங்கமழை யாற்புவியோர் மேலான
ஞானமடை வார்கள் நயந்து. (1)

ஓர்முழுரூ பாவுக்கு வோராயி ரம்புதினம்
பார்முழுதும் பார்க்கும் பான்மையினில்—நேர்முகத்தே
ஆனந்த போதினிதா னாதரவி னோடுரைக்கும்
ஆனந்த மாயமழையுங் கள். (2)

ஒற்றைரூ பாபெரிதோ வுண்மையறி வேபெரிதென்
றுற்றறிவிக் கும்வற் புறுத்தியே—தெற்றெனவிம்
மேதினியி னேறின்றி மேம்படுமிவ் வானந்த
போதினி[illegible]வீர்! (3)

[illegible] ஆச்சாரி, வருத்தலவிளான்.

## ஸ்ரீமதி சாரதாமணி தேவியார்.

(127-ம் பக்கத் தொடர்ச்சி.)

தம்முடைய பெற்றோர்களின் வீட்டிற்குச் செல்ல நேரிட்டதற்காக ஸ்ரீமதி தேவியார், வருத்தப்படவில்லை. அவ்விடத்தில் அமைதியாகவும், சுயநலத்தை விரும்பாமலும் காரியங்களைச்செய்து கொண்டிருந்தார். தம்சொந்த சௌகரியங்களை யெல்லாம் அவர் அறவே மறந்துவிட்டார். பிறருடைய துயரைக்கண்டு அநுதாபப்பட்டு அவர்களை அத்துயரங்களினின்று நீக்கத் தமாலான முயற்சிகளையெல்லாம் செய்துவந்தார். இதனால் அவர் அன்பே ஓர் உருவெடுத்து வந்ததைப் போன்றிருந்தார். இவ்வாறு பிறருக்கு உதவி செய்வதில் ஈடுபட்டிருந்ததினால் அவர் தம் கஷ்டங்களையெல்லாம் அறவே மறந்திருந்தார். இவ்வண்ணம் அவர் தம் பெற்றோர்கள் இல்லத்தில் வசித்துக் கொண்டிருந்தாலும், அவருடைய மனமானது தக்ஷிணேஸ்வரத்திலிருந்த அவருடைய கணவரிடமே செலுத்தப்பட்டிருந்தது. அவரை அவ்விடத்திற்குச்சென்று பார்க்க வேண்டுமென்று ஸ்ரீமதி தேவியார் அடிக்கடி எண்ணுவதுண்டு. ஆனாலும் அவ்வாசையை அடக்கிக்கொண்டிருந்தாரே யன்றி நிறைவேற்றிக் கொள்ளவில்லை. சமயம் நேர்ந்தபோது ஸ்ரீராமகிருஷ்ணர் தம்மை அவரிடம் அழைத்துக் கொள்வார் என்று மனதைத் திருப்தி செய்துகொண்டிருந்தார். தம் கணவனார் தம்மை அழைத்துக் கொள்ளும் நாள் வருமென்று பொறுமையுடனிருந்து தம் காலத்தைக் கழிக்கலானார்.

இப்படி இருந்துகொண்டிருக்கையில் வங்காளி 1278-ம் ஆண்டு பாஷ்ய மாதத்தில் அவர் தம்முடைய பதினெட்டாவது வயதில் புஷ்பவதியாயினார். தம்முடைய கணவனாருடைய தெய்வீக சக்தியைக் கண்டு ஸ்ரீமதி தேவியார் வருத்தமேனும் ஆனந்தமேனும் கொள்ளாமல் வாழ்க்கையை நடத்திவந்தார். எனினும் அவருடைய உறவினர், அவர் அந்நிலையிலேயே யிருந்துவர இடங்கொடுக்கவில்லை, அவ்வம்மையார் வசித்துவந்த கிராமத்திலிருந்த ஸ்திரீகள் அடிக்கடி அவ்வம்மையாரைப்பார்த்து 'உன்னுடைய புருஷன் ஒரு பைத்தியக்காரன்; அவன் தெய்வங்களின் பெயரைச் சொல்லிக் கூச்சலிடுகிறான்; அத்தகைய பைத்தியக்காரனுக்கு நீ மனைவியானதற்காக நாங்கள் வருத்தப்படுகிறோம்' என்று அடிக்கடி சொல்லி வந்தார்கள். அவர்கள் அங்ஙனம் சொல்வதை அம்மையார் விசேஷமாகக் கவனிப்பதில்லை. எனினும் சிற்சில சமயங்களில் அவர்களுடைய சொற்கள் அம்மையாரின் இருதயத்தில் பதியவாரம்பித்தன. அதனால் அவர், 'நம்முடைய கணவர் இவர்கள் சொல்லுகிறபடி பைத்தியம் பிடித்தவராய்த்தான் இருப்பாரோ? என்று சந்தேகித்துத் தமக்குத் தம் பெற்றோர் வீட்டில் வேலையில்லை யென்றும், தம் கணவரிடஞ்சென்று அவருக்குவேண்டிய உபசாரங்களையும் சௌகரியங்களையும் செய்து வருவதே தம்முடைய கடமை என்றும் எண்ணலானார். கடைசியில், தாமாகவே தக்ஷிணேஸ்வரம் சென்று தம் கண்ணாலே ஸ்ரீராமகிருஷ்ணரின் நிலையை யுணரவேண்டுமென்றும், அதற்குமேல் எங்ஙனம் நடந்துகொள்ளவேண்டுமோ அவ்வாறே நடந்து கொள்ளலாமென்றும் அவர் தீர்மானித்தார்.

அம்மையார் இத்தகைய தீர்மானத்தோ டிருக்கையில், அவருடைய சுற்றத்தார்களிற் சிலர், அவ்வருடத்திய பங்குனிமாத பௌர்ணமியன்று நடைபெற்ற ஸ்ரீசைதன்னிய மகரிஷியின் ஆண்டுவிழாவி னிமித்தம் கல்கத்தாவிற்குப் போய்க் கங்கையில் தீர்த்தமாடத் தீர்மானித்திருந்தனர். தேவி

யார், அவர்களுடன் தாமும் செல்லவிரும்பி, அவ்விருப்பத்தை அவர்களிடம் தெரிவித்தார். அவர்கள் அவ்விஷயத்தை அம்மையாரின் தகப்பனாரிடம் தெரிவித்தார்கள். அவர் தாமே தேவியாரைக் கல்கத்தாவிற்கு அழைத்துச் செல்வதாகக் கூறினார். அக்காலத்தில் ஜெயராம் பதியிலிருந்து கல்கத்தாவுக்குச் செல்ல ரெயில்வே சௌகரியம் இல்லாதிருந்தது. பிரயாணிகள் கால் நடையாகவேனும் பல்லக்கு மூலமாகவேனுந்தான் அங்கே செல்லவேண்டும். பல்லக்கை அமர்த்திக் கொள்வது பணக்காரர்களுக்குத்தான் முடியும்; மற்றவர்க்கு இயலாது; ஆதலால், அதிகப்பணம் படைக்காத இராமச்சந்திர முக்கர்ஜி என்பார் தம் குமாரத்தியாகிய ஸ்ரீமதி தேவியாருடன் கால் நடையாகக் கல்கத்தாவுக்குப் புறப்பட்டார். அவர்களுடன் இன்னும் சிலரும் சென்றார்கள். அவர்கள் நடந்து சென்றவழி நெடுக, கண்ணைக் கவரத்தக்க நெல் விளையும் நிலங்கள், பச்சைப்பசேலென்று காணப்பட்ட படியால், அவர்களுக்கு முதல் இரண்டு தினங்கள்வரை நடப்பதன் கஷ்டம் தெரியாமலே இருந்தது. இன்னும் அவ்வழியின் இடை யிடையில் தாமரைத் தடாகங்களும் இருந்தன. ஆதலின் அவர்கள் அத்தடாகங்களில் நீரை அருந்தியும், மரங்களின் நிழலில் தங்கி இளைப்பாறியும் சென்றுகொண் டிருந்தார்கள். இதே மாதிரி, அவர்கள் பிரயாணம் முடியும்வரையிலும் இருக்கவில்லை. ஸ்ரீமதி தேவியார் நடந்து பழக்கமில்லாதவராகையால் சில தினங்களுக்குப்பின் சுரநோய்கொண்டு வருந்தினர். தம்முடைய குமாரத்திக்குச் சுரம் ஏற்பட்டதைக்கண்ட ஸ்ரீராமச்சந்திர முக்கர்ஜியானவர் பெரிதும் கவலையுறலானார். அத்தகைய நிலையிலுள்ள அம்மையாரைக் கால் நடையாகப் பின்னரும் அழைத்துச்செல்வது தகுதியல்லவென்று கருதி, அவருடன் வழியிலிருந்த ஒரு சாவடியில் ஓர் இரவு தங்கினார்.

அவ்வாறு தங்கி மறுநாட்காலையில் எழுந்து தம் குமாரத்தியைப் பார்த்தார். அப்போது ஸ்ரீமதி தேவியாருக்குச் சுரம் முழுமையும் நீங்கியிருந்தது. அதன்மேல் அவர், சத்திரத்தில் இருப்பதைக் காட்டிலும் மெதுவாக நடந்து செல்லுதல் உசிதமென்று கருதித் தம் எண்ணத்தை அம்மையாரிடம் தெரிவித்தார். அதற்கு அம்மையாரும் சம்மதித்தார். இருவரும் அச்சத்திரத்தைவிட்டுப் புறப்பட்டார்கள். அவ்வாறு புறப்பட்டுச் சற்றுதூரம்போகவே அவர்களுக்கெதிரில் ஒரு பல்லக்குவந்தது. அதை அவர்கள் குடிக்கூலிக்குப் பேசி அதில் ஏறிச்சென்றார்கள். அத்தினத்திலும் ஸ்ரீமதி தேவியாருக்குச் சுரம் வந்தது. ஆனால் அந்தச் சுரமானது முந்தியநாள் வந்த சுரத்தைப் போல் அவ்வளவு கடுமையாயில்லை. அம்மையார், அதை மற்றவர்களுக்குக் காட்டிக் கொள்ளாமலிருந்தார். அன்றிரவு ஒன்பதுமணிக்கு அனைவரும் தக்ஷிணேஸ்வரம் போய்ச் சேர்ந்தார்கள். அம்மையார் மிகவும் நோய்கொண்டு வந்ததைக்கண்ட ஸ்ரீராம கிருஷ்ணர் மிகவும் கவலையுற்றார். தேவியாரை வெளியில் படுக்கவைத்தால், அம்மையாருக்கு ஜலதோஷம் காணுமென்று கருதியவராய், தம்அறையிலேயே அவருக்கும் படுக்கையை அமைத்து அதில் அவரைப் படுக்கவைத்தார். அங்ஙனம் படுக்கவைத்து அம்மையார் அருகில், இருந்து வருத்தத்துடன் ‘நீ நோயுடன் வந்திருக்கிறாய்; இச்சமயத்தில் செஜோபாபு இவ்விடத்தில் இல்லை; அவர் இருந்தால் உனக்கு எல்லாவித சௌகரியங்களும் செய்துவைப்பார்’ என்று கூறினார். பின்னர் அவரால் ஸ்ரீதேவியாருக்கு வேண்டிய வைத்திய சிகிச்சைகளும், மற்றுமுள்ள சௌகரியங்களும் செய்யப்பட்டு வந்தன. அவற்றால், தேவியார் நான்கு தினங்களுக்குள் சௌக்கியமடைந்து விட்டார்.

* (தொடரும்) A. துரை.

# விசூவியஸ் எரிமலையின் சரித்திரம்

(135-ம் பக்கத் தொடர்ச்சி.)

இக்கொடிய கொதிப்பினால் உண்டாகிய பிராணச் சேதமும், அழிந்து நாசமுற்ற பட்டணங்களும், கிராமங்களும் அனந்தம். இக்காரிருளால் உண்டாகிய குழப்பத்தினால் ஜனங்கள் நிலைதடுமாறி இருந்தார்கள். இருட்டென்றால் இது சாமானிய இருட்டாகுமா? ஒரு அறை அல்லது குகையின் வாயிலை மூடிக் கொஞ்சமேனும் சூரிய ஒளி எவ்விதத்திலும் வாராதபடி தடுத்திருந்தால் அது எவ்வளவு இருளாயிருக்குமோ அதை ஒத்ததாயிருந்தது. சாதாரணமாய் நக்ஷத்திரங்களால் அலங்கரிக்கப்பட்டு, தண்ணொளி பரப்பி வெண்மதி யுலாவப்பெற்ற இரவையும், அனலொளிகாட்டி அதிக காந்தி வீசும் பகலவன் பொழுதையும் ஒழித்து, ஊழிக்காலத்தை ஒப்ப மூன்றுநாள் வரையில் கன்னங்கரிய காரிருள் ஊர்களடங்கலும் சூழ்ந்திருந்தது. அதனால் ஜனங்கள் நிலைமயங்கி நடுத்தடுமாறி திண்டாட்டம் கொள்வதற்கும் ஐயமுண்டோ? அவர்கள்பட்ட துயரத்திற்கும்! பெருங் கஷ்ட நஷ்டங்களுக்கும் நிகருமுண்டோ? மற்றும் அவ்விருள்,

“ ஆல மூலகிற் பரந்ததோ வாழி கிளர்ந்த தோவவர்தம்
நீல நிறத்தை எல்லோரு நினைக்க வதுவாய்நிரம்பியதோ
கால னிறத்தை யஞ்சனத்திற் கலந்து குழைத்தா காயத்தின்
மேலு நிலத்து மெழுகியதோ விளக்கு மிருளாய் விளைந்ததுவே”

என்று கம்பர் பாடியதற்கு இசைந்ததா யிருந்தது.

இச்சமயத்தில் உண்டான கொடுந்தீயினால் மாண்டவர்கள் அநேகர். வீடுகள் தீப்பற்றி அதிலுள்ளவர்களுடன் எரிந்து நீறாயின. பூகம்பங்களின் கேட்டினால் வீடுகள் இடிந்து விழுந்தன. அவற்றுள் வாசமாயிருந்த மனிதர்கள் நசுங்கினர். வெளியே ஓடிப் பிழைப்போமென்று ஓடியவர்களிற் சிலர் உருகிய கற்குழம்பு வெள்ளத்தில் அகப்பட்டு மாண்டனர். சிலர் பெருங் கற்றுண்டுகளால் புடைப்புண்டு விழுந்து இறந்தனர். சிலர் அக்கினி வஸ்துக்களால் எரியுண்டு வீழ்ந்தும், சிலர் விஷ ஆவிக் காற்றுக்களாலும் புகையாலும் மூச்சுத்திணறுண்டு மாண்டும் போயினர். இவ்வாறு ஜனங்களுக்கு அநேக கஷ்ட நஷ்டங்கள் நேர்ந்தன. இவ்விதமாகவே அநேக ஊர்வன, பறப்பன, நடப்பனவாகிய பக்ஷி மிருக முதலான ஜீவராசிகள் உயிர் துறந்தன. புல் பூண்டு செடி கொடி மரம் முதலிய யாவும் எரிக்கப்பட்டு அந்தப் பிரதேச முழுதும் சாம்பல் காடுபோல் விளங்கியது. இச்சமயத்தில் அவ்விடமெல்லாம் ஆண்மக்கள் உரத்துக் கூவும் ஓசையும், பெண்மக்களின் அழுகுரலும் குழந்தைகள் வீரிட்ட ஓசையுமே பரவி, ஜனங்களின் காதுகளை அடைத்து விட்டன. எங்கும் ஒரு பெருங்குழப்பமாக்கிவிட்டன. குழந்தைகளின் அழுகுரலைக்கேட்டு ஜனங்கள் அவைகளுக்கு ஆதரணைபுரிய வகையற்றவர்களாய் தவித்து நின்றார்கள். சில தாய் தந்தையர் வயோதிகான பெற்றோர் உற்றார்கள் திண்டுமுண்டாடித் தவித்துக் கூவி யழுவதைப் பொறுக்க முடியாதவராய் பிரலாபித்து உள்ள முருகி அழுதனர். சிலர் சிறுவர் சிறுமியர் இவ்வுலக இன்பத்தையும் பெண்டுபிள்ளைகளையும் ஆஸ்திபாஸ்திகளையும் ஒருங்கே துறந்து உயிர் மாய்வ தெப்படியென்று நினைந்து நினைந்து கரைந்தழுதனர். சிலர் தங்கள் குடும்பம் எல்லாம் ஒருங்கேபடும் அவஸ்தையைச் சகிக்கமாட்டாதவர்களாய் வயிற்றிலேயும் வாயிலேயும் புடைத்துக்கொண்டார்கள். சிலர் ஊழிக்கால அந்தகாரமோ வந்துவிட்டது. ஆண்டவன் முன் நின்று அவர் ஆக்கினைக்கு உத்தரமளிக்க ஏற்பட்ட நாளும் கிட்டியதென்று பயந்தார்கள். பாபி

யர் சிலர் ஆ! தேவனே எங்களுக்கு இக்கொடுமையை விளைவிப்பதேன் என்றும், ஆ! சர்வஜீவகாருண்யனாகிய கடவுளே எங்களை இப்பெருந் துயரத்திலிருந்து காத்து ரக்ஷித்து இவ்விருளை நீக்க உம்மால் முடியாதாவென்றும், யாம் செய்த பிழைகளைப் பொறுத்து எங்களை ஆதரியும் என்றும் பலவாறாகச் சொல்லிக் கடவுளைத் துதித்து வேண்டினர். மற்றுமுள்ளவர்களோ இதேது பிரளயகாலந்தான் வந்துவிட்டதென்றும் இனி இவ்விருளினின்று தப்பிப் பிழைப்பது அரிதென்றும் பூலோகமுழுதும் ஒரே அடியாய்த் தொலைந்து போய்விடுமென்றும் எண்ணினார்கள்.

வரைகலங்க வனங்கலங்கக் கலங்குறாத மண்கலங்க விண்கலங்க மகாமுந்நீர்த்
திரைகலங்கத் திசைகலங்க வீறிலாத செகங்கலங்க உகங்கலங்கச்
[சிந்தை தாயோ
ருரைகலங்க வுளங்கலங்கத் துளங்கிமெய்யி லூன்கலங்க விலங்கொடு
[புள் ளினங்கள்யாவு
நிரைகலங்க உலகினுயிர் படைத்ததம்பி னிலைகலங்கா தனவுண்டோ
[நிகழ்த்தி னம்மா.

இவ்வாறாக, ஒரு பெருங் குழப்பமிருந்து கொஞ்சங் கொஞ்சமாய் இருள் நீங்கி ஜனங்களுக்குள் ஓர் தைரியமும் அமைதியும் உண்டாக, கதிரவனும் பிரகாசிக்கலுற்றான். ஆயினும் ஆகாயமண்டலத்தைக் கவிழ்ந்துகொண்டிருந்த நுண்ணிய அணுக்களின் குணங்களாலும் கந்தகமுதலான ஆவிகளின் தன்மையாலும் சூரியன் பிரகாசமற்று, கிரகணமுண்டாகியகாலத்து விளங்குவதுபோல் ஒளிமழுங்கிக் கிடந்தான். இதைப்பார்க்க எரிமலைக் கொதிப்பினால் நாடு நகரங்களுக்கும் ஜீவகோடிகளுக்கும் உண்டான இப்பெருந்துயரம் சூரியனையும் பற்றியதுபோலத் தோற்றியது. அந்தகாரம் ஒழிந்து மலையின் கொதிப்பும் அடங்கவே மலையைச் சுற்றிலும் அதிகதூரம் வரையில் நிலமானது பனியையொப்ப வெண்ணிறமான போர்வை மூடப்பட்டதுபோல் எங்கும் சாம்பலால் மூடப்பட்டிருந்தது.

(புதையுண்ட நகரங்கள்)

இவ்வளவு விபத்துகளும் கஷ்டங்களும் உண்டானதற்குக் காரணம் எரிமலையின் கொதிப்பே. இம்மலையில் உண்டான வெடிப்பின் அதிர்ச்சியாலும் பூகம்பங்களாலும் கொதிப்பினாலும் முன்னமே சொல்லப்பட்டாருக்கு நேர்ந்த ஆபத்துடன் எர்குலானியம் (Herculaneum) பாம்பியை (Pompii) என்னும் நகரங்களும் மலைக்குத் தென்புறத்தில் தற்காலத்திய காஸ்டல்லாமேர் (Castellamare) என்னும் பட்டணமிருக்கும் ஸ்தானத்தில் அப்போது இருந்த ஸ்டாபே (Stabiae) என்னும் பட்டணமும் இருந்த இடமே தெரியாமல் முற்றிலும் மூடப்பட்டுப் பாழாக்கப்பட்டன. இப்பட்டணங்களிலுள்ள ஜனங்களில் அநேகர் கொதிப்பெடுக்குமுன் ஓடி உயிர் தப்பினார்கள்; இப்பட்டணங்கள் வெறுங் கற்குழம்பு வெள்ளத்தில் முழுகி நாசமானவைகளாகக் காணப்படவில்லை. கற்குழம்பு வெள்ளத்தாலும் சாம்பல் மாரியாலும் வீடுவாசல்களிலுள்ள சந்துபொந்துகளெல்லாம் நிறைந்து தூர்ந்துபோவதும் சாத்தியமாய் இருந்திராது. ஆனால் இம்மலையிலிருந்து நெருப்புமழை வருஷித்தபோது வெளியேவந்த நுண்ணிய தூசுமண் முதலிய வஸ்துக்கள் மலையிலிருந்து ஏராளமாய் வெளியே கக்கப்பட்ட நீராவியுடன் கலந்து மண்ணீராய் மாறி, பெருவெள்ளமாய் மலைச்சரிவுகளில் பிரவகித்து வந்து வீடுகளையும் கிராமங்களையும் முழுக அடித்ததாகத் தற்காலத்திய சோதனைகளால் தெரியவருகிறது.

(தொடரும்) A. R. M. உடையப்ப செட்டியார், சொக்கநாதபுரம்.

# அறிஞரின் அமுதமொழிகள்.

(136-ம் பக்கத் தொடர்ச்சி)

107. No imprisonment can crush a truth; it may hinder it for a moment; it may delay it for an hour; but it gets an electric elasticity inside the dungeon walls, and it grows and moves the whole world when it comes out.
*Charles Bradlaugh.*

சிறைவாசம் உண்மையை ஒழிக்காது; அந்நேரத்துக்கு அல்லது ஒருமணிநேரத்திற்கு அதை அது மறைத்துவைக்கக்கூடும். உண்மையானது சிறைக்குள் மின்சாரத்தைப்போல் அதிவேகமாய் தினே தினே வளர்ந்துகொண்டு போகிறது. சிறையிலிருந்து வெளியேறி வந்தவுடன் உலகம் முழுவதிலும் அது கிளர்ச்சியை உண்டுபண்ணிவிடுகின்றது.
(சார்லஸ் பிராட்லா.)

108. Injustice will bring the mightiest on earth to ruin. *Lord Salisbury.*

அநீதியானது, உலகத்திலுள்ள மிகுந்த பராக்கிரமசாலிகளையும் அடியோடு கெடுத்துவிடும். (லார்டு சாலிஸ்பரி.)

109. Be united, persevere, and achieve Self-government. *Dada Bhai Naoroji.*

ஐக்கியமாயிருங்கள்; ஊக்கங்கொள்ளுங்கள்; சுயாட்சியை அடையுங்கள். (தாதாபாய் நௌரோஜி.)

110. The fundamentals of Liberty are freedom of speech and freedom of writing.

சுதந்திரத்திற்கு அடிப்படையானவை பேச்சுச் சுதந்திரமும் எழுத்துச் சுதந்திரமுமாகும்.

111. What is wanted in our government of India is sympathy. *George, Prince of Wales.*

நம்முடைய இந்தியா அரசாங்கத்தில் வேண்டியது அநுதாபமேயாகும். (ஜார்ஜ், வேல்ஸ் இளவரசர்.)

112. Every noble work is at first impossible.
*Carlyle.*

ஒவ்வோர் உயர்ந்தவேலையும் முதலில் கஷ்டமாகவே தோன்றும்.
(கார்லைல்)

113. Remain always strong and steadfast in thy own faith, but eschew all bigotry and intolerance. *Sri Ramakrishna.*

உன்னுடைய சொந்தமதத்தில் உறுதியுடனும் திடமான சித்தத்துடனுமிரு; ஆனால் மதவெறியையும் அந்நியமத துவேஷத்தையும் மேற்கொள்ளாதே. (ஸ்ரீ ராம கிருஷ்ண)

(தொடரும்.) A. P. இராமன், B. A.

# இந்தியாவில் ஜனங்கள் ஆட்சி செய்த விதம்.

இவ்வுலகம் (1) ஆசியா, (2) ஐரோப்பா, (3) அமெரிக்கா, (4) ஆப்ரிக்கா, (5) ஆஸ்திரேலியா என ஐந்து கண்டங்களாகப் (பாகங்களாகப்) பிரிக்கப்பட்டிருக்கின்றன. இந்தியா, சீனா, ஜப்பான், பெர்ஷியா, பிலிப்பைன்தீவு ஆகிய இத்தேசங்கள் ஆசியாகண்டத்தி லிருக்கின்றன; இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி முதலிய சிலதேசங்கள் ஐரோப்பா கண்டத்தி லிருக்கின்றன.

கிறிஸ்தவப் பாதிரியார் ஜெ. டி. சண்டர்லண்ட் அவர்கள் ‘ இந்தியன் ரிவியூ ’ பத்திரிகையில் பின்வருமாறு எழுதியுள்ளார்:—

ஆசியாவில் மன்னர்கள் கொடுங்கோல் ஆட்சி புரிந்தனரென்றும், அவர்கள் தங்கள் இஷ்டப்படி அதிக வீம்பு செலுத்தினரென்றும், அரசாங்க விஷயமாக ஜனங்களுக்கு யாதொரு அதிகாரமு மில்லையென்றும், ஜனங்கள் இஷ்டப்படி ஆட்சி நடைபெறவில்லையென்றும், தங்கள் இஷ்டப்படி ஆட்சி நடைபெறவேண்டுமென்னும் எண்ணம் அந்த ஜனங்களுக்கில்லையென்றும், தங்கள் நாட்டைத் தாங்களே ஆட்சிசெய்துகொள்வதற்கு அந்த ஜனங்களுக்குத் திறமையில்லையென்றும் ஐரோப்பா அமெரிக்கா ஜனங்கள் சாதாரணமாகப் பேசிக்கொள்ளுகிறார்கள். விவகாரம் இவ்விதம் இருக்கிறபடியால் தான் இங்கிலாந்து அரசாங்கத்தார் இந்தியாவை ஆட்சி புரிகிறார்களென்று கூறப்படுகிறது. இங்கிலாந்து அரசாங்கத்தார் இந்தியாவில் ஆட்சிபுரிவதை விட்டுவிட்டால் இந்தியர்கள் பூர்வம்போல் கொடுங்கோல் ஆட்சியை அங்கு ஏற்படுத்தி வருவார்களென்றும், ஐரோப்பியர்கள் நாகரீக மடைந்ததன் பயனாக அவர்கள் தேசங்களில்தான் ஜன ஆட்சி ஏற்பட்டதென்றும், இன்னும் வருஷம் நூறானாலும் ஆசியா ஜனங்கள் தங்கள் தேசங்களில் ஜன ஆட்சியை ஏற்படுத்தக்கூடுமென்றாவது, அத்தகைய ஆட்சிபுரிய அவர்கள் திறமைவாய்ந்தவர்களா யிருப்பார்களென்றாவது அல்லது அத்தகைய ஆட்சிபுரிவதற்கு அவர்கள் பிரியப்படுவார்களென்றாவது நினைப்பதற் கிடமில்லையென்றும் பிற நாட்டார் கூறுகிறார்கள். இந்தியர்களைப்பற்றியும் ஆசியாவிலுள்ள ஜனங்களைப்பற்றியும் இவ்வாறு கூறப்பட்ட விஷயங்கள் உண்மையானவைகளா? ஆசியாவில் நடைபெற்ற விவகாரங்களை ஒப்பிட்டுப் பார்க்கையில், மேற்கூறப்பட்ட விஷயங்கள் உண்மையானவைகளல்லவென்பது இனிது புலனாகும்.

பிலிப்பைன் தேசத்தார், தங்கள் நாட்டில் ஸ்பெயின் தேசத்து அரசாங்கத்தார் செய்த கொடுமையான ஆட்சியை விலக்கித் தங்களுக்குரிய சுதந்திரத்தை யடைந்தபோது என்ன செய்தனர்? மன்னர் ஆட்சியையா ஏற்படுத்தினர்? அல்ல. அவர்கள், ஜன ஆட்சி ஏற்படுத்தி, அத்தகைய ஆட்சி நிகழும் அமெரிக்காதேசத்தில் அரசாட்சி விஷயமாகவும் சட்டசபை அங்கத்தினர்களை நியமிக்கும் விஷயமாகவும் ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டத்தைப் போன்ற சட்டம் ஏற்படுத்தினர்.

சீனாக்காரர்கள் தங்கள் தேசத்தில் மான்சூகாரர்களின் ஆட்சியை விலக்கியபோது என்ன செய்தனர்?. அவர்கள் உடனே மன்னர் ஆட்சியை ஏற்படுத்தாமல் ஜன ஆட்சியை ஏற்படுத்தினர். அவர்கள் நாட்டில் சில அயல் நாட்டு அரசாங்கத்தார்கள் அவர்களுக்குப் பல இடையூறுகள் விளைவிப்பதால், அவர்கள் நாட்டிலுள்ள ஜனங்களை ஒன்றுபட்டவர்களா யிருக்கும்படிக்கும் அவர்கள் நாட்டில் அரசாட்சி செவ்வையாக நடைபெறும்படிக்கும் செய்ய அவர்களுக்குச் சாத்தியப்படாவிட்டாலும், அவர்கள் நாட்டில் ஜன



ஆட்சி செவ்வையாக நடைபெறவேண்டுமென்று அவர்கள் கொண்டுள்ள எண்ணத்தை அவர்கள் விட்டுவிட உத்தேசிப்பதாகத் தெரியவில்லை.

தங்கள் நாட்டின் ஆட்சியைத் தங்கள் நாட்டாரே நடத்தவேண்டுமென்று பெர்ஷியா தேசத்திலுள்ள ஜனத்தலைவர்கள் நீண்டகாலமாக எண்ணங்கொண்டவர்களா யிருக்கிறார்கள். அந்நாட்டில் சில ஐரோப்பிய அரசாங்கத்தார்கள் ஜனங்களுக்கு விரோதமாகப் பலகாரியங்கள் செய்து வருகிறார்கள். அவர்கள் அவ்வாறு செய்துவராவிடில், பெர்ஷியா நாட்டில் ஜன ஆட்சி பல வருடங்களுக்கு முன்பே ஏற்பட்டிருக்கும்.

துருக்கிதேசத்தாரைப்பற்றிச் சற்று யோசிப்போம். அவர்கள் 1914-18ம் வருடத்திய யுத்தம்முடிந்து, சில ஐரோப்பிய அரசாங்கத்தார்களின் சாவகாசத்தை விலக்கியபின் கூடிய சீக்கிரத்தில் தங்கள் நாட்டில் மன்னர் ஆட்சியை ஏற்படுத்தாமல் ஜன ஆட்சியை ஏற்படுத்தினர்.

ருஷ்யா தேசத்து ஜனங்களைப்பற்றிச் சற்று இப்போது கவனிப்போம். அவர்கள், தங்கள் நாட்டில் அரசு புரிந்துகொண்டு வந்த மன்னரை விலக்கியதும் என்ன செய்தனர்? இன்னொரு மன்னரை நியமித்தார்களா? இல்லை, அவர்கள் ஜன ஆட்சியையே ஏற்படுத்தினர்.

இந்தியர்களைப்பற்றி யோசிப்போம். அவர்கள் இப்போது, தங்கள் நாட்டில் இங்கிலாந்து அரசாங்கத்தார் ஆட்சி செய்வதை விலக்க எத்தனஞ் செய்வதனால், அவர்கள், தங்கள் நாட்டாரில் ஒருவரை மன்னராக நியமித்து அந்த மன்னர் அதிகாரத்திற்கு உட்பட்ட ஆட்சியையாவது அல்லது தங்கள் நாட்டு ஜனங்களின் ஒரு சார்பாரின் கொடுமையான ஆட்சியையாவது ஏற்படுத்த உத்தேசிப்பதாக ஏதாவது அறிகுறிகள் தோன்றுகின்றனவா? இல்லை. இந்தியாவில் இங்கிலாந்து அரசாங்கத்தாரின் ஆட்சிக்கு உட்பட்ட பாகத்திலுள்ள ஜனங்கள் எல்லோரும் தங்கள் நாட்டில் ஜனங்களுக்கு அனுகூலம் ஏற்படுவதற்கு ஜனங்களால் நடத்தப்படக்கூடிய ஜன ஆட்சியே ஏற்பட வேண்டுமென்று எண்ணங் கொண்டவர்களா யிருக்கிறார்கள். அதாவது: அமெரிக்கா தேசத்திலுள்ள இராஜ்யங்களிலும் கனடா தேசத்திலுள்ள மாகாணங்களிலுமிருக்கும் ஜனங்களைப்போல இந்தியாவிலுள்ள மாகாணங்களிலும், இந்திய மன்னர் இராஜ்யங்களிலுமுள்ள ஜனங்கள் தத்தம் இராஜ்யத்திலும் மாகாணத்திலும் ஆட்சிபுரிந்து அவர்கள் எல்லோரும் ஒன்றுபட்ட ஒரு பெருத்த தேசத்தாரா யிருக்கவேண்டுமென்னும் எண்ணங் கொண்டவர்களா யிருக்கிறார்கள். விவகாரம் இம்மாதிரியா யிருக்கையில், ஆசியாவிலுள்ள ஜனங்கள், தங்கள் நாடுகளில் தாங்களே ஆட்சிசெய்ய விரும்பவில்லையென்றும், அவ்வாறு ஆட்சிசெய்ய அவர்கள் தகுதியுடையவர்களல்லவென்றும், ஆசியாவிலுள்ள ஒரு தேசத்தின் ஜனங்கள், தங்கள் நாட்டின் அரசாட்சியை நடத்துவதற்குத் தகுதியில்லாதவர்களா யிருப்பதனால் இந்தியர்களும் தங்கள் நாட்டின் அரசாட்சியை நடத்துவதற்குத் தகுதியில்லாதவர்களா யிருக்கிறார்களென்றும் கருதப்படுவது தவறென்று நன்றாக விளங்குகிறது. சரியான தகவல் என்னவெனில், உலகில் முதன் முதலில் அரசாட்சி விஷயமாக அதிகாரம் வகித்திருந்து அரசாட்சி புரிந்தவர்கள் ஐரோப்பியர்களல்லவென்றும், அவ்வாறு ஆட்சி புரிந்தவர்கள் ஆசியாக்காரர்களென்றும் தெரியவருகிறது. பூர்வீகசரித்திரங்களை வாசிக்கையில், ஆதியில் இந்திய ஜனங்கள், தங்கள் நாட்டில் ஆட்சி புரிந்துவந்ததைக் கண்டு, அமெரிக்கா தேசத்து ஜனங்களும் ஐரோப்பாவில் சில தேசங்களின் ஜனங்களும் தங்கள் நாடுகளில் ஆட்சிபுரிய முற்பட்டார்களென்று விளங்குகிறது. இந்தியாவில்

புத்தர் அவதரித்திருந்த காலத்தில், அதாவது சுமார் 2500-வருடங்களுக்கு முன் இந்தியாவில் ஜன ஆட்சி நடைபெற்றது. ஆசிரியர் (புரபசர்) ரைஸ் டேவிட்ஸ் அவர்கள் 'புத்தமத இந்தியர்கள்' என்று பெயரிட்டு வெளிப்படுத்திய புத்தகத்தில், வட இந்தியாவில் ஜன ஆட்சி நடைபெற்ற பத்து இராஜ்யங்களின் பெயர்களைக் குறிப்பிட்டிருக்கிறார். அந்த இராஜ்யங்கள், மேற்கே பஞ்சாபிலிருந்து கிழக்கே பீரார் வரையிலும், வடக்கே நேபாளத்திலிருந்து மத்திய மாகாணத்தின் தென் எல்லைப்புறம் வரையிலுமிருந்தன. ஆதியில் இந்தியாவில் ஜனஆட்சி குறைந்தபட்சம் ஆயிரம் வருடங்கள் வரையில் நடைபெற்றது. அவ்வளவு வருடங்கள் வரையில் அத்தகைய ஆட்சி வேறே எந்த நாட்டிலாவது நடைபெற்றதாகத் தெரியவில்லை.

இந்தியர்கள் ஆதியில் தங்கள் நாட்டின் அரசாட்சியை நடத்தியதன்றி, தங்கள் நாட்டின் அரசாட்சியைத் தாங்களே நடத்த வேண்டுமென்றும், தாங்கள் வேறே ஒரு தேசத்து அரசாங்கத்தாருக்கு அடங்கினவர்களா யிருக்கக் கூடாதென்றும் அதிக வைராக்கியங் கொண்டவர்களா யிருந்தார்கள். அவர்கள் ஆதியில் இந்த வைராக்கியத்தைப் பல வழிகளில் காட்டி யிருக்கிறார்கள். ஆதிகாலத்திய ஆரியர்கள், சுமார் 3500-வருடங்களுக்கு முன்னர், அரசாங்கத்தார், அதாவது, மந்திரிகள் ஜனங்களால் நியமிக்கப் பட்டவர்களா யிருக்க வேண்டுமென்னும் கருத்து கொண்டவர்களா யிருந்ததாக வேதப் புராணங்களில் காணப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் உதித்து சுமார் 1500-வருடங்கள் வரையில் வாழ்ந்துவந்த புத்தர்கள், ஜனங்களுக்குரிய விவகாரங்களை, அதாவது, அரசாங்கக் காரியங்களை ஜனங்களே கவனிக்க வேண்டுமென்னும் கருத்து வாய்ந்தவர்களா யிருந்தார்கள். அவர்கள் இந்திய நாட்டிலிருந்து மறைந்த பிறகும் ஜன ஆட்சிக்குரிய காரியங்களை ஜனங்கள் செய்துவந்தார்கள்.

வேறே ஒரு நாட்டில் வசிக்கும் முகமதியர்களைவிட பன்மடங்கு அதிகமான முகமதியர்கள் இந்தியாவில் வசிக்கிறார்கள். அவர்கள், புத்தர்கள் கருத்து கொண்டிருந்தது போலவே, அரசாங்க விவகாரங்களை ஜனங்களே கவனிக்க வேண்டுமென்னும் கருத்துகொண்டவர்களா யிருக்கிறார்கள். அவர்களையும் கிறிஸ்தவர்களையும் ஜன ஆட்சி விஷயமாக ஒப்பிட்டுப் பார்க்கையில் அவர்கள், அவ்விஷயத்தில் பிந்தியவர்களைவிட அதிக பற்று கொண்டவர்களா யிருக்கிறார்கள்.

இந்துக்கள் பல ஜாதியர்களாகப் பிரிந்திருந்த போதிலும் அவர்கள், தத்தம் ஜாதியார் விஷயத்தில் அபிமானமும் பற்றும் கொண்டவர்களா யிருக்கிறார்கள்.

இந்திய ஜனங்கள், தங்களுக்குரிய காரியங்களைத் தங்களிஷ்டப்படி நடத்திக்கொள்ள வேண்டுமென்னும் வைராக்கியம் அந்த ஜனங்களுக்கு ஏற்படும்படியாகவும், அவர்களுக்கு எந்நாளும் அந்த வைராக்கியமிருக்கும்படியாகவும் செய்தவர்கள் எங்கும் வியாபகமா யிருந்த கிராம வாசிகளாவர். அவர்கள், சுமார் 3000-வருடகாலமாக ஜனங்களைச் சுய ஆட்சிக்குரிய விவகாரங்களில் திறமையுடையவர்களா யிருக்கச் செய்துவந்தார்கள். அவர்கள் அவ்வாறு செய்தபடியால்தான், இந்திய ஜனங்கள் அரசாங்கச் சட்டபடி நடக்கிறார்கள்; நிம்மதியான வாழ்க்கையை விரும்புகிறார்கள்.

இந்தியா, பெரும்பாலும் ஒரு விவசாய நாடாகும். அந்நாட்டு ஜனங்களில் 100-க்கு 80-பேர்களுக்குமேல் பயிர்செய்து ஜீவனஞ் செய்பவர்களாவர். அவர்கள், இந்தியாவிலுள்ள சுமார் 6,50,000 கிராமங்களில் வசிக்கிறார்கள். அவர்கள், இங்கிலாந்து தேசத்திலுள்ள நகரவாசிகளைப்போல் தங்களுக்குரிய காரியங்களைத் தாங்களே நடத்திக் கொள்ளுகிறார்கள். அவர்களைப் பற்றி சர்சார்லஸ் மெட்காப் பின்வருமாறு கூறியுள்ளார்:—



"இந்தியாவிலுள்ள கிராமவாசிகள், மற்றவர்களின் தயவை நாடாமல், தங்களுக்குவேண்டியவற்றைத் தாங்களே தேடிக்கொள்ளுகிறார்கள். வேறே ஒன்றும் நிலையாய் நிற்காமலிருக்கையில் அவர்கள் ஒரே நிலையா யிருக்கிறார்கள். ஒரு மன்னனுக்குப்பின் இன்னொரு மன்னனாக மன்னர்கள் ஒழிந்துவிடுகிறார்கள்; அரசாட்சி விஷயமாக ஒரு மாறுதலுக்குப்பின் இன்னொரு மாறுதலாக மாறுதல்கள் ஏற்படுகின்றன; ஆனால் கிராம வாசிகள் ஒரே நிலையில் நிற்கிறார்கள். அவர்கள் நாட்டு அரசாட்சி விஷயமாகப் பல மாறுதல்கள் ஏற்பட்டபோதிலும் அந்நாட்டு ஜனங்கள் நிலைத்திருக்கிறார்களென்றும், அவர்கள் சந்தோஷமாக வாழ்கிறார்களென்றும், தங்களிஷ்டப்படி பலகாரியங்கள் செய்துகொண்டு வருகிறார்களென்றும் நான் நினைக்கிறேன்."

ஆதி காலத்திலிருந்து இந்தக் கிராமவாசிகள், தங்கள் கிராம உத்தியோகஸ்தர்களை நியமித்து, கிராமத்தாருக்குரிய விவகாரங்களைக் கவனித்து வந்தனர்.

ஆதியில் ஐரோப்பாவில் இங்கிலாந்து பிரான்ஸ் முதலிய நாடுகளில் மன்னர்கள் அதிக கொடுமையாக ஆட்சி புரிந்து வந்ததுபோல் இந்தியாவிலும் மன்னர்கள் ஆட்சி புரிந்தது உண்மைதான். ஆனால், இங்கிலாந்து அரசாங்கத்தார் இந்திய நாட்டில் அரசாட்சிசெய்ய முற்பட்ட காலத்திற்கு முன் அந்நாட்டில் இந்திய மன்னர்கள் ஜனங்கள் சுதந்தர விஷயத்தில் அதிக அரிதாகத்தான் தலையிட்டார்கள். தங்களுக்குரிய விவகாரங்களைத் தாங்களே கவனிக்க வேண்டுமென்னும் வைராக்கியங் கொண்டிருந்து, அந்த வைராக்கியத்தை விடாமலிருந்த கிராம வாசிகளின் கிராம நிர்வாக விஷயத்தில் இந்திய மன்னர்களாவது அல்லது சக்ரவர்த்திகளாவது அதிக அரிதாகத்தான் பிரவேசித்தார்கள்.

இவ்வாறு, தங்களுக்குரிய விவகாரங்களைத் தாங்களே கவனிக்கும் விஷயமாக சுமார் 3000-வருடகாலமாகப் பழகிவந்த இந்தியர்கள் இன்று, தங்கள் நாட்டின் அரசாட்சியைத் தாங்களே நடத்தக்கூடுமென்று நினைப்பது தவறு?

ஆதியில் அமெரிக்கா ஜனங்கள் வேறொரு தேசத்து அரசாங்கத்தாருக்கு உட்பட்டிருந்த காலத்தில், தங்களுடைய நகர கூட்டத்தில் ஒன்றுகூடி யோசித்து, தங்களுக்குரிய விவகாரங்களைத் தாங்களே கவனித்து வந்ததனால் அவர்களுக்கு ஏற்பட்ட பழக்கத்தையும் அனுபவத்தையுங் கொண்டு அவர்கள் பிறகு தங்கள் நாட்டின் அரசாட்சியை நடத்துவதற்குத் தகுதியுடையவர்களா யிருந்தார்களென்று நமது அமெரிக்கா சரித்திரக்காரர்கள் கூறுகிறார்கள்.

அது உண்மையானால், இந்திய ஜனங்கள் அமெரிக்கா ஜனங்களைப் போல், தங்களுடைய கிராம நிர்வாகத்திற்குரிய அலுவல்களைத் தாங்களே கவனித்து, தங்கள் நாட்டின் அரசாட்சியை நடத்துவதற்குப் பயிற்சி பெற்றிருப்பதைப்பற்றி என்ன சொல்வது?

ஆதியில் அமெரிக்கா தேசத்தில் நகரவாசிகள் நகர கூட்டத்தில் தங்களுக்குரிய விவகாரங்களைப் பற்றி யோசிப்பதற்கு யாரிடமிருந்து கற்றுக்கொண்டனர்? அவர்கள் இங்கிலாந்து தேசத்தாரிடமிருந்தும், இங்கிலாந்து தேசத்தார் ஜெர்மனி தேசத்தாரிடமிருந்தும் கற்றுக்கொண்டதாக அமெரிக்கா சரித்திரக்காரர்கள் கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் ஜெர்மனி தேசத்

தாரைக் குறிப்பிட்டுவிட்டு நின்றுவிட முடியாது. அவர்கள் ஆதிபீடத்தைக் கண்டறிவதற்கு ஆசியாவிலும், இந்தியாவில் கிராமங்களிலும் நிகழ்ந்த விவகாரங்களை அறியவேண்டும். இந்த விஷயத்தில் இந்தியர்கள் அமெரிக்கா தேசத்தாருக்கு வழிகாட்டினவர்களா யிருக்கிறார்கள்.

மேலே கூறப்பட்டுள்ள விஷயங்களிலிருந்து ஆசியாவிலுள்ள ஜனங்களும் இந்திய ஜனங்களும் ஐரோப்பியர்களைப் போலத் தங்களுக்குரிய விவகாரங்களைத் தாங்களே கவனித்து வந்தார்களென்று ஏற்படவில்லையா? இந்த விஷயம் அதிக அவா உண்டாக்கும் விஷயமாகும். எந்தக் கண்டத்தில் முழுவதிலும் ஜன ஆட்சி முதலில் ஏற்படும்? ஐரோப்பாவிலா அல்லது ஆசியாவிலா?

M. பார்த்தசாரதி.

# அண்டத்தின் ஜாதகம்.

## எதிர்கால நிகழ்ச்சி.


1927-ம் வருடமுதல் 2001-ம் வருடம் வரை பூமியில் நடக்கப்போகிற காலவர்த்தமானம் பின்வருமாறு:—

1927-ம் வருடம் உலகமெங்கும் தண்ணீர் வறண்டு மழைக்குறைவால் கொடிய பஞ்சமும் உண்டாம்; பல நாட்டு மக்களில் பலர் பசிநோயால் துஞ்சுவர். 1928-ம் வருடம் வல்லரசுகளுக்குள் கொடிய மஹாயுத்தம் ஆரம்பமாகும். ஏப்ரல் மாச முதல் பூமியில் நல்ல மழை பொழியும். 1929-ம் வருடம் உலகில் பெரிய இராஜா இறந்துபோவார். 1930-ம் வருடம் பூமியின் சிலபாகங்களில் கனமழை வருஷித்து, ஜலப்பிரளயந்தோன்றி, அப்பாகங்கள் தண்ணீரில் மூழ்கிவிடும். 1931-ம் வருடம் கடலில் செல்லும் பல நீராவி மரக்கலங்கள் சண்டமாருதப் புயல்காற்றால் அபாயத்திற் குள்ளாகி மூழ்கிவிடும். 1932-ம் வருடமுதல் 1933-ம் வருஷம் வரை பர்மா பிரஞ்சு முதலிய மலை நாட்டுப் பிரதேசங்களில் மழைவளங்குன்றி, மாநிலம் எங்கும் பஞ்சம் உண்டாகும். 1934-ம் வருடமுதல் 1935-ம் வருடம்வரை தேசமெங்கும் உள்நாட்டு யுத்தங்கள் தோன்றும். 1936-ம் வருஷமுதல் 1938-ம் வருடம்வரை ஏஷ்யா, ஐரோப்பா முதலிய கண்டங்களிலுள்ள வல்லரசர்களுக்குள் கொடிய மஹா யுத்தமுண்டாய் எழுகோடி ஜனங்கள் மரணம் அடையநேரிடும். 1939-ம் வருடமுதல் 1942-ம் வருடம்வரை சர்வதேசங்களிலும் உள்நாட்டு யுத்தம் உண்டாகும். 1943-ம் வருடம் உலகில் மழைக்குறைவு உண்டாகி வேளாண்மை குறைந்து கொடிய பஞ்சம் உண்டாம். 1944-ம் வருடமுதல் 1945-ம் வருடம்வரை உலகில் தீண்டாமை என்ற துர்க்குணம் ஒழியும். 1946-ம் வருடமுதல் 1949-வருடம் வரை பெண்களின் சுதந்திரப் போர் ஒன்று ஏற்படும். ஹிந்துக்களுக்கும், மஹம்மதியர்களுக்கும் சமர்விளைந்து வெகுபேர் துஞ்சுவர். இத்துடன் மழைக்குறைவு உண்டாகிக் கொடிய பஞ்சம் பரவும். 1953-ம் வருஷமுதல் 1968-ம் வருடம்வரை சர்வதேச ஜனங்களும் ஒற்றுமையைக் கைவிடுவர். அதனால் உள்நாட்டு யுத்தங்கள் தோன்றும். ஜலப்பிரளயத்தாலும் சிலதேசத்தில் பலகோடி ஜனங்கள் மரணம் அடைவர். 1969-ம் வருஷம் ஜப்பான் தேசம் அந்நாட்டு ஜனங்களின் சுயஆட்சிக் குட்பட்டுவிடும். 1970ம்-வருஷம் முதல் 1980-ம் வருஷம்வரை இந்தியா போர்க்கோலமாகவேயிருந்து, மகம்மதியர் மரபினில் ஒரு பெரியார் தோன்றி இந்தியா மஹாஜனங்களை ஒற்றுமைப்படுத்த, அவர்கள் தேசத்தின் பிறப்புரிமையைப்



பெறுவார்கள். 1981-ம் வருடத்தில் ஜப்பான்தேசத்தில் சிலபாகம் பூகம்பம் உண்டாகி, சமுத்திரம் பரவிவிடும். 1982-ம் வருடம் மழைக்குறைவு தோன்றும்; பூமி எங்கும் ஏரிகள், கிணறுகள், கேணிகள் இவற்றில் தண்ணீர்ப் பஞ்சத்தால் நீர் வரட்சியுண்டாகும்; கொடிய பஞ்சமும் ஏற்படும். 1983-ம் வருடம் மழையின்றிக் கொடிய வெப்பத்தால் சகல விருக்ஷங்களுங் காய்ந்து போம். சர்வதேசமும் பஞ்சம் அடையும். 1984-ம் வருடமுதல் 1990-ம் வருடம்வரை பனிக்கட்டியால் மூடப்பட்ட தேசங்கள் ஜனங்கள் வசிக்கத் தகுந்த உயர்ந்தபூமியாகும்; சர்வதேச ஜனங்களும் அங்குப்போய் வசிப்பார்கள்; ஒற்றுமையுடனும் வாழ்வார்கள்; உலகம் பொன்னுடாகத் தோன்றும் 1991-ம் வருடமுதல் 1996-ம் வருடம்வரை குரங்குகளின் பாஷையை மனிதர் கற்றுக்கொள்வார்கள்; குரங்குகளுடன் பேசுவார்கள். அப்போது வானரங்களும் 100-ஆண்டுக்குப் பின்னர் கல்லூரிகளில் மனிதர்களைப்போலவே வஸ்திரமுதலியவை அணிந்து, கல்விபயிலும். சில வானரங்கள் விவசாயம் செய்யவும் வியாபாரம் செய்யவும் தலைப்படும். மனிதர்களும் வானரங்களும் சகோதரர்களாகி ஒற்றுமையாய் வாழ்வார்கள். 1997-ம் வருடம் முதல் 2001-ம் வருடம் வரை சர்வதேசமும் குபேரனுடாக விளங்கும்; இதுவன்றி அண்டத்திற் கப்பாலுள்ள மனிதர்களைப் பார்க்கவும், அவர்களுடன் பேசவும் மின்சாரக் கருவி ஒன்று உற்பத்தியாகும்; பின்னும் பல்லாயிரவருடங்களுக்கும் பலன் எழுதி வருகின்றேன். பூமியில் நன்மை உண்டாக எல்லாம்வல்ல இறைவனடிகளை இறைஞ்சுகின்றனம்.

M. K. V. சுப்புசாமி, சோதிடசாஸ்திரி.




# கிருஷ்ணஸிங் அல்லது துப்பறியும் சீடன்

(142-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆனந்தஸிங்:—அதன் இரகசியப்பெயர் இன்னதென்று தங்களைவிட வேறு யாருக்கேனும் தெரியுமா?

உலகநாதம் பிள்ளை:—என் புத்திரிக்குத் தெரியும்.

இதைக்கேட்டதே ஆனந்தஸிங் விசனத்தோடு உலகநாதம் பிள்ளையை நோக்கி, "தங்கள் புத்திரிக்கு அன்று அதில் பணம் இருந்தது என்று தெரியுமோ?" என்றான்.

உலகநாதம் பிள்ளை தாழ்ந்தகுரலாய் "ஆம்" என்றார்.

ஆனந்:—வேறு யாருக்கேனும் தெரியுமோ?

உலக:—இல்லை.

ஆனந்:—தாங்கள் இவ்வளவு பெருந்தொகையை வீட்டில் வைத்துக்கொண்டிருந்தது அதிசயமல்லவா?

உலக:—ஆம்.

ஆனந்:—அப்படியானால், தாங்கள் நேற்று அவ்வளவு பெரிய தொகையை வீட்டில் வைக்கவேண்டிய காரணமென்ன ?

உலக:—அய்யோ அய்யா! தங்களுக்குக் கருணையில்லையா? என்னுடைய இருதயத்தைக் கிழித்தெடுக்கவேண்டுமா? நான் கூறுகிறேன். என் புத்திரி நிரபராதி. பணத்தைப்பற்றி யெனக்கு அவசியமேயில்லை. எனக்கு வேண்டியது என்புத்திரியே.

ஆனந்தவலிங் அன்போடும் நம்பகத்தோடும் "தங்கள் புத்திரியையே நான் கண்டுபிடிக்கிறேன். அவள் தாங்கள் கூறுகிறமாதிரியாயிருந்தால்..." என்றதே.

உலகநாதர் "ஆம் ஆம். அவள் அப்படிப்பட்டவளே" என்றார்.

ஆனந்:—அப்படியாயின் அவள் யார்கையிலேயோ ஒரு ஆயுதம்போல் சிக்கிக் கொண்டிருக்கிறாள். தாங்கள் அதைப்பற்றிய விஷயங்களையெல்லாம் கூறும்படி நான் கேட்பது தங்கள் பணத்தைக் கண்டுபிடிக்கவல்ல. அதன்மூலமாய்த் தங்கள் புத்திரியைக் கண்டுபிடிப்பதற்காகவே. ஆகையால் அவ்வளவு பெரிய தொகையை யேன் அங்குவைத்தீர் கூறும்.

உலக:—நான் இன்றைக்கு ஒருவர்க்கு அவ்வளவு பெரிய தொகையைக் கொடுக்கவேண்டுமென்று என் புத்திரிக்குத் தெரியும். அவள் அவ்வளவு பெரிய தொகையைச் செலாவணி செய்கிறோம் என்று பார்த்ததில்லை. ஆகையால் அத்தொகையைத் தனக்குக் காட்டும்படி கேட்டாள். அந்தோ அவள் என் கண்களைக் கேட்டிருந்தாலும் நான் கொடுத்துவிட்டிருப்பேன். பணம் வந்ததே யவளுக்குக்காட்டி என் பெட்டியின் பூட்டின் இரகசியத்தையும் கூறினேன்.

ஆனந்:—சரி! நீர் நேற்றுமாலை பணத்தைப் பெட்டியில் வைத்தீர். உமது புத்திரியும் நேற்று மாலையே காணமற் போய்விட்டாள். இன்று காலை பார்த்தால் அது களவு போயிருக்கிறது. உமக்கும் உமது குமாரத்திக்கும் தவிர வேறு யாவருக்கும் பெட்டியைத்திறக்கும் மர்மம் தெரியாதல்லவா ?

உலக:—ஆம், ஒருவர்க்கும் தெரியாது.

ஆனந்.—சரிதான்; ஆனால் அவள் அந்த இரகசியத்தை வேறு யாருக்காவது கூறி யிருக்கலாமல்லவா ?

உலக:—இருக்கலாம்.

ஆனந்:—ஆனால் யாருக்குக் கூறியிருக்கலாம். அவள் மணம்புரியவிருக்கும் வாலிபன்மேல் அவளுக்கு மிக்க அன்போ ?

உலக:—அவன் என்னிடம் பொக்கிஷதாரனாய் இருக்கிறான். அவன் வாலிபத்திலிருந்து என்னிடமே யிருக்கிறான். அவனைக் கோடி பணத்திற்கு வேண்டுமாயினும் நான் நம்புவேன்.

ஆனந்:—ஆனால் அப்பணம் அங்கு இருக்கிறதென்று அவனுக்குத் தெரியுமென்று நினைக்கிறேன். நான் அவன்மேல் சந்தேகிப்பதாய் நினைக்க வேண்டாம். விஷயங்களை யறிந்துகொள்ளவே கேட்கிறேன். தங்கள் புத்திரி பூட்டின் இரகசியத்தைப்பற்றி யவனுக்குக் கூறியிருந்தால் அவனுக்கு ஒன்றும் தெரியாதென்று நம்புகிறீர்களல்லவா ?

உலக:—தெரியாதென்பது நிச்சயம்.

(தொடரும்) ஆரணி. குப்புசாமி முதலியார்.

---




ஒருவன், குழந்தைக்கு ஒரு சீப்பு வாழைப்பழம் வாங்கிக்கொண்டு போகும்போது ஓரிடத்தில் தன் புரோகிதரைக் கண்டான். கண்டதும் 'சுவாமி! வாழைப்பழம் சாப்பிடுங்களேன்' என்று பழச்சீப்பை அவர் கையில் கொடுத்தான். அவர் பழம் சாப்பிட மறுத்து விடுவாரென்பது அவனுடைய எண்ணம். புரோகிதர் ஒரு பழத்தை உரித்து வாயில் போட்டார். பழக்காரன் ஒரு பழத்தோடு அவர் நிறுத்திவிடுவாரென்று நினைத்தான். அவர் ஒவ்வொன்றாயெல்லாவற்றையும் விழுங்கிவிட்டார். அந்த மனிதனால் தடுத்துக்கூற முடியவில்லை. வேறே பழம் வாங்கக் காசுமில்லை. அதனால் அவன் 'இந்தப் பெருவாயன் கையில் தெரியாமல் பழத்தைக் கொடுத்துவிட்டோம்; அடே அப்பா! பதினைந்து பழங்களையும் இப்படி விழுங்கிவிட்டானே' என்று வயிற்றெரிச்சலோடு முணங்கிகொண்டே போய்விட்டான்.

* * *

புகைவண்டியில் முரட்டுச் சுபாவமுடைய ஒருதடியன், ஜனங்கள் போகும் வழியில் நீண்டபெட்டி யொன்றை வைத்து எவரும் போகவழியில்லாமல் அடைத்துவிட்டு அப்பெட்டியின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தான். இந்த மூடன் தன்னுடைய செய்கை ஜனங்களுக்கு மிகத்தொந்தரவா யிருக்குமென்று சிறிதும் நினைக்கவில்லை. இப்படி இவன் வெகு அகங்காரத்தோடு இருக்கும்போது, வண்டிக்குள்ளிருந்த ஒருவனுக்கு அடக்க முடியாத வாந்தி வந்துவிட்டது. அவன் மனிதர் இறங்கும் வழியிற்போய் நின்று வெளியில் வாந்தி யெடுத்து விடலாமென்று விரைந்தெழுந்து அந்த முரடனிடம் பெட்டியை நகர்த்திக் கொண்டு வழி விடும்படி கேட்டான்; அவன் முடியாதென்றான்; வாந்திக்காரன் பெட்டி மேலேறியாவது போய்விடுகிறேனென்று அதன் மேலேறப் போனான். தடியன், 'பெட்டியில் ஏறினால் காலை ஒடித்துவிடுவேன்' என்று உறுமினான். வாந்திக்காரன், "ஐயா! அவசரம்; தாங்கமுடியவில்லை; தயவுசெய்து வழிவிடுங்கள்" என்று அவனைக் கெஞ்சினான். தடியன், 'போ அப்புறம்' என்று பெருஞ்சத்தம் போட்டான்; அவ்வாறு சொல்லி வாய் மூடுவதற்குள் நோயாளி 'ஓ' என்றதும் அடக்க முடியாமல் அவன் தலையில் வாந்தி பண்ணிவிட்டான். தடியன் பட்டபாடு மிக்கவேடிக்கையா யிருந்தது. இத்தகைய மிருக சுபாவமுள்ள பல முரடர்கள் ரெயில் பிரயாணஞ் செய்து ஜனங்களுக்குத் துன்பத்தை உண்டாக்குகிறார்கள்.

* * *

ஒரு தனவந்தர், தம்முடைய வேலைக்காரனிடத்தில் ஒரு நகையைக் கொடுத்துப் பக்கத்து ஊரிலிருந்த தம்புத்திரியிடம் கொடுத்து வரும்படி கூறினார்; அவன் அவ்வூருக்குச் சென்று நடுவழியில் ஒரு சத்திரத்தில் படுத்து உறங்கினான். அவ்வாறு தூங்கும்போது அந்நகையைத் திருடன் அபகரித்துக் கொண்டு போய்விட்டான். அவன் விழித்துப்பார்த்து வருத்தத்துடன் தன் எஜமானிடம்போய் 'நகை களவு போய்விட்டது' என்றான். அவர், 'எங்கே களவு போயிற்று,' என்றுகேட்டார். வேலைக்காரன், 'நான் படுத்திருந்த இடத்தில்' என்றான்'. எஜமானர், 'எங்கே படுத்திருந்தாய்?' என்றுகேட்டார்; அவன், 'நகை களவுபோன இடத்தில்' என்றான். எஜமானர் 'இப்படிப்பட்ட புத்திசாலி கிடைப்பது அருமை' என்றார். செம்பியன்.

# பதினெண் பாஷை.

## இரகசியத்திற் கனுகூலமானது.

உயிரெழுத்துக்கள்— க—ங—ட—த—ம—ய— ண—ன
ர — ச—ஞ—வ—ப—ந—ல—ளழ—றர

இங்குக்காட்டிய இரண்டுவரிசை எழுத்துக்களையும் ஒன்றுக் கொன்றாக மாற்றிக்கொண்டு வார்த்தைகளை அமைத்தால் அவை ஒரு நூதன பாஷை மொழிகளாகவே தோன்றும். மேற்காட்டிய பதினெட்டுக் கூட்ட எழுத்துக்களால் இப்பாஷை அமைவதால் இது பதினெண் பாஷையென ஒரு நூதனப் பெயருடன் வழங்குகிறது. மாற்றப்படுவதால் மாற்றுத் தமிழ் எனவும் பெயர் பெறும்.

உயிரெழுத்துப் பன்னிரண்டுக்கும், அப்பன்னிரண்டு உயிரெழுத்துக்கள் ஏறிய ரகா வுயிர் மெய் பன்னிரண்டையும், மொழிக்கு முதலில் வரக்கூடிய ரகா வுயிர் மெய்களுக்கு அவற்றின்மே லேறிய உயிரெழுத்துக்களையும், ககா வுயிர் மெய் பன்னிரண்டுக்கும் சகா வுயிர் மெய் பன்னிரண்டையும், அப்படியே சகா வுயிர் மெய்களுக்குக் ககா வுயிர் மெய்களையும் மாற்றிக்கொள்வதோடு, இப்படியே, ங-ஞ. வுயிர் மெய்களையும், ட-வ. உயிர் மெய்களையும், த-ப. உயிர் மெய்களையும், ம-ந. உயிர் மெய்களையும், ய-ல. உயிர் மெய்களையும், ஒன்றிற்கொன்றாக மாற்றிக்கொள்ளவேண்டும்; ணகா வுயிர் மெய்களுக்கு, ளகா, ழகா வுயிர் மெய்களையும், ளகா, ழகா வுயிர் மெய்களுக்கு, ணகா வுயிர் மெய்களையும், னகா வுயிர் மெய்களுக்கு, றகா ரகா வுயிர் மெய்களையும், றகா ரக வுயிர் மெய்களுக்கு னகா வுயிர் மெய்களையும் ஒன்றுக்கொன்றாக மாற்றிக் கொள்ளவேண்டும். ஈற்றில் றகாத்தோடு ஜதையாகக் காட்டிய ரகாம் மொழியின் இடையிலும் கடையிலும் வரக்கூடியது. இப்படி வரும் ரகத்திற்குப் பதிலாக னகாத்தை மாற்றிக்கொள்ளவேண்டும். முதல் வரிசையில் உள்ள ககா முதல் னகாம் வரை எட்டெழுத்துக்களின் மெய் யெழுத்துக்களுக்கு, இரண்டாவது வரிசையிலுள்ள சகா முதலிய எழுத்துக்களின் மெய் யெழுத்துக்களையும், இரண்டாவது வரிசையிலுள்ள எழுத்துக்களின் மெய்களுக்கு முதல் வரிசையிலுள்ள எழுத்துக்களின் மெய்களையும் நேர் நேராக மாற்றிக் கொள்ளவேண்டும்.

இப்படி மாற்றுவதால் ஒரு வார்த்தைக்கு மற்றொன்றாக மாறி அமையும் வார்த்தைகளில் சிலவற்றை இதனடியில் மாதிரிக்காகக் காட்டுகிறோம்:—

கடவுள் —ஆனந்த போதினி—சுகமா—அழகு—வெள்ளை —என்ன சங்கதி.
சவடுண்—ராறம்ப தோபிறி —குசநா—ணசு—டெண்ணே -ரெற்ற கஞ்சபி.

சாமி—நல்லது—அய்யா—இருந்தான்—உரிமை — வேறு.
காநி—மய்யபு —ரல்லா —ரினும்பார் —ருனிமை—டேனு.

இவ்வாறு சகல தமிழ் வார்த்தைகளையும் அமைத்துக்கொண்டு இப்பாஷை தெரியாதவர் கூட்டத்திலிருந்து இரகசியம் பேசலாம்; சிநேகிதருக்கு இரகசியக் கடிதமெழுதலாம்; தந்தியிலும் எழுதலாம். இது தமிழர்களுக்கு மிக்க அனுகூலமானது. இந்த எழுத்துக்களை மாற்றும் வகையை ஐந்து நிமிஷத்தில் தெரிந்துகொள்ளலாம். இவ்வாறு அமைப்பதில் இன்னும் பலவகைகளுமுண்டு.



## மற்றொரு வகை.

க ங ச ஞ ட ண த ந ப
ம ய ர ல வ ழ ள ற ன

மேலிருக்கிற அக்ஷரங்களுக்குக் கீழுள்ள அக்ஷரங்களையும், கீழிருக்கிற அக்ஷரங்களுக்கு மேலிருக்கிற அக்ஷரங்களையும் மாற்றி வாக்கியங்களாக்கிக் கொள்ளலாம். ஆனால் இதில் உயிர் எழுத்துக்களை மாத்திரம் மாற்றாமலே சேர்த்துக்கொள்ளவேண்டும்.

இவ்வகையில் அமையும் வார்த்தைகளுக்கு மாதிரி:—

ஆனந்த போதினி
ஆபற்ள ஞேளிபி (பார் போர்னி)

---

## வர்த்தமானக் குறிப்புகள்.

**உலகத்தில் அதிக வயது கொண்டவர்:**—துருக்கி தேசத்துத் தலைநகராகிய கான்ஸ்டான்டிநோபிலில், ஸாரா ஆகா (Zara Aga) என்பவர் ஒருவர் இருக்கிறார். அவருக்கு இப்பொழுது 146-வது வயது முடிந்து அதற்குரிய நாள் வைபவம் கொண்டாடப்பட்டது. உலகிலுள்ள மனிதர்களுக்கெல்லாம் அவரே மிகவும் விருத்தாப்பியர். அவருக்கு 10-தடவை விவாகம் முடிந்திருக்கிறது. அவருக்கு இப்பொழுதிருக்கும் மனைவியோ அவரைக் காட்டிலும் 90-வயது குறைந்த வயதுடையவள். அவர் இப்பொழுது நீதிமன்றத்தில் ஒரு குமாஸ்தாவாக வேலைபார்த்து வருகிறார். அவருக்கு அடிக்கடி மோட்டார் சவாரி செய்வதில் மிகவும் பிரியம். அவருக்கு 25-குழந்தைகள் உண்டு. அவர்கள் உலகத்தில் வெவ்வேறான பாகங்களில் வசித்து வருகிறார்கள்.

* * *

**தூக்கமில்லாமையாகிய வியாதியை நிவர்த்திசெய்யும் தொட்டிலாட்டம்:**—வெஸ்ட் மின்ஸ்டர் (Westminster) என்னும் நகரில் இன்ஸ்டிட்யூஷன் ஆப் ஸிவில் இன்ஜினீர்ஸ் என்னும் கண்காட்சிச்சாலையில் ஒரு அபூர்வ படுக்கை வந்திருந்தது. ஸர் ஆல்ப்ரட் எர்ரோ என்னும் ஞானதத்துவ ஆராய்ச்சி நிபுணரானவரின் பிரத்தியேக வேண்டுகோளுக்கிணங்க நேஷனல் பிஸிகல் லேபரெடெரியார் இதைத் தயார்செய்து முடித்தார்கள். இதைப் பரீக்ஷித்துப் பார்ப்பதற்கான வழியும் (Experimental Tank) என்பதும் இதில் அடங்கியிருக்கிறது. இது நிமிஷத்திற்கு 80-தடவை அசைகிறது. $\frac{3}{8}$-அங்குலத்திலிருந்து $\frac{3}{4}$-அங்குலம் வரையிலும் அசைவு உண்டாகும்படி செய்வதற்கான சூத்திரம் இதில் அடங்கியிருக்கிறது. தூங்கப் போகிறவர்களுடைய சரீர மனோவல்லமைக்குத் தக்கபடி இப்படுக்கையைச் சரிப்படுத்திக் கொள்ளலாம். குழந்தையைத் தொட்டிலில் தாலாட்டித் தூங்கப்பண்ணுவதுபோல் தூக்கம் பிடிக்காத வியாதியஸ்தர்களை இப்படுக்கையால் ஏற்படும் ஏற்றத்தாழ்ச்சியான அசைவால் தூங்கச்செய்துவிடலாம்.

* * *

**நவீன செவிப்புலக் கருவி:**—நாடக சாலையில் முகங்களைப் பெரிதாகக் காண்பிக்கும் பொருட்டு ஆபரா கிளாஸ் (Opera Glass) என்னும் பூதக்கண்ணாடி உபயோகப்பட்டு வருவதுபோல், சப்தம் அருகி லிருப்பவர்க்குக் கேட்பதுபோல் தூரத்தில் இருப்பவர்க்கும் கேட்பதற்கு இயர் லார்னெட் (Ear Lorgnette) என்னும் கண்ணாடிக் கருவியொன்று இப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டு உபயோகத்தில் வந்திருக்கிறது.

# "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

பிரபவஹு கார்த்திகைமூ—கலியுகாதி 5029, சாலிவாகனம் 1850,
பசலி 1337—கோல்லமாண்டு 1103—ஹிஜரி 1346,
இங்கிலீஷ் 1927ஹு நவம்பர்மூ—டிசம்பர்மூ

| கார்த்திகை | நவம்பர்மூ | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | புத | அ43-28 | ஆயி11-15 | சித்60 | விருச்சிகாவி நா-3-15-வி, விஷ்ணுபதி புண்யகாலம் |
| 2 | 17 | வியா | நவ47-28 | மக15-48 | அ15-48சி | மாடுவாங்க, கதிரறுக்க |
| 3 | 18 | வெ | தச52-43 | பூர21-43 | சித்60 | ஆயுதம் பயிற்ற |
| 4 | 19 | சனி | ஏகா58-43 | உத்28-35 | மர60 | அனுஷாகார்-நா-21-13 |
| 5 | 20 | ஞா | துவா60 | அஸ்35-55 | அ35-55சி | வித்தியாரம்பம், உபநய |
| 6 | 21 | திங் | துவா5-8 | சித்43-33 | பி43-33அ | கரிநாள் [னம் |
| 7 | 22 | செவ் | திர11-35 | சுவா51-0 | சி51-0ம | மாசசிவராத்திரி |
| 8 | 23 | புத | ச●17-50 | விசா58-30 | சித்60 | போதாயன அமாவாசை |
| 9 | 24 | வியா | அ23-28 | அனு60 | சித்60 | அமாவாசை [பார்க்கவும் |
| 10 | 25 | வெ | பிர28-25 | அனு4-25 | சி4-25ம | சந்திரதெரிசனம் உற்றுப் |
| 11 | 26 | சனி | துதி32-28 | கேட்10-3 | சித்60 | வியாதியஸ்தர் குளிக்க |
| 12 | 27 | ஞா | திரி35-33 | மூல15-35 | சித்60 | விவாகம், பும்சவனம் |
| 13 | 28 | திங் | சது37-23 | பூரா18-23 | ம18-23சி | |
| 14 | 29 | செவ் | பஞ்38-0 | உத்20-48 | அ20-48சி | |
| 15 | 30 | புத | சஷ்37-15 | திரு21-55 | சி21-55பி | |
| 16 | 1 | வியா | சப்35-5 | அவி21-40 | சி21-40ம | |
| 17 | 2 | வெ | அ31-30 | சதை19-58 | சித்60 | |
| 18 | 3 | சனி | நவ26-35 | பூரட்17-3 | ம17-3சி | |
| 19 | 4 | ஞா | தச20-23 | உத்12-48 | அமி60 | |
| 20 | 5 | திங் | ஏகா13-15 | ரேவ7-38 | சித்60 | |
| 21 | 6 | செவ் | து5-33 திர57-30 | அஸ்1-45 பர55-28 | சித்60 | |
| 22 (டிசம்பர்மூ) | 7 | புத | சது49-28 | கி※49-13 | அ49-13சி | கிருத்திகை, அண்ணமலையார் தீபம் |
| 23 | 8 | வியா | ○41-38 | ரோ43-18 | மர60 | பௌர்ணமி, விஷ்ணு தீபம், சந்திரகிரஹணம், சந்திரபூஜை |
| 24 | 9 | வெ | பிர34-40 | மிரு38-33 | சித்60 | மார்க்க சிரபகுளம் |
| 25 | 10 | சனி | துதி 28-50 | திரு34-8 | சித்60 | வியாதியஸ்தர் குளிக்க |
| 26 | 11 | ஞா | திரி24-28 | புன31-35 | சித்60 | உபநயனம், நிஷேகம் |
| 27 | 12 | திங் | சது21-58 | பூசம்30-53 | சித்60 | கிரகப்பிரவேசம் |
| 28 | 13 | செவ் | பஞ்21-18 | ஆயி31-58 | சித60 | நவக்கிரகசாந்திசெய்ய |
| 29 | 14 | புத | சஷ்22-33 | மக35-3 | சி35-3அ | கதிரறுக்க மாடுவாங்க |
| 30 | 15 | வியா | சப்25-30 | பூர39-48 | சி39-48ம | மூலாகார்த்திகை நாழி [கை, 38-28 |

| | | | |
|---|---|---|---|
| குரு | | ராகு | |
| — | 13உவி-செவ் 17,, துலா-சு 19,, விரு-புத | | — |
| | ரா-ச கேது | செவ் புதன் | சுக் |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" POWER PRESS,
15, VENKATESA MAISTRY ST., MADRAS.

அவுட்டுச் சிரிப்பு, அடங்காச் சிரிப்பு, வெடி சிரிப்பு,
விக்கல் சிரிப்பு ஆகிய பக்காச் சிரிப்புகளை
யெல்லாம் அடக்கிக் கிளம்பும் இராஜகோபால்
பீரங்கிச் சிரிப்பை யுண்டாக்கும்

## சிரிப்புக் களஞ்சியக் கதைகள்.



தீரா விசனத்தில் சிக்கியிருப்பவர்கள், பேரானந்தமடையும்படி இந்த அதிர்வேட்டுச் சிரிப்புக் கதைகளெல்லாம் ஒன்றாகத்திரட்டி விற்பனைக்குத் தயாராக வைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றைப் படிப்பவர்கள் தூக்கத்திலும் சிரிப்பார்கள். "இந்தக் கதைகளைக் கேட்டுச் சிரிக்காமலிருந்தால் நீங்கள் ஐந்து ரூபாய் எனக்குத் தரவேண்டும்" என்று ஒருவரோடு பந்தயங் கட்டிக்கொண்டு அவர் இவற்றைப் படிக்கும்போது சிரிக்காமலிருக்கப் பிரயாசைப்படுகிறவர்கள் ஐந்து நிமிஷத்தில் அவுட்டுச் சிரிப்புச் சிரித்துத் தோற்றுப் போவார்கள்.

அக்கதைகளாவன:—

| | ரூ. அ. ப. |
|---|---|
| கலியாணச்சந்தடியில் தாலிகட்ட மறந்த கதை | 0—5—0 |
| 30-கதைகளடங்கிய விநோத கதைத் திரட்டு | 0—5—0 |
| அகட விகட விலாச விநோதக் கதை | 0-10—0 |
| விகடவல்லி 0—6—0 மலையாளபகவதி | 1—0—0 |
| மலையை விழுங்கிய மகாதேவன் கதை | 0—6—0 |

வி-பி யில் இவற்றையெல்லாம் ஒரேதடவையில் சேர்த்து வாங்குவோர்க்குத் தபால் சார்ஜ் தள்ளுபடி.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## ஸ்ரீராமர் அஸ்வமேதயாகம்.

பெரிய எழுத்து ஐதீகப்படத்துடன்.

இது, இராமாயணம் உத்தரகாண்டத்திலுள்ளது; இதில் இராமாயண
கதை முழுவதும் சுருக்கமாகக் கூறப்பட்டிருப்பதோடு, இராவண சம்மாரம்
முடிந்தபின் நடந்த கதைகளெல்லாம் மிக விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன;
குபேரன்கதை, அசுரர் உற்பத்தி, மாலியவான் வரலாறு, இராவணன் முதலி
யவர் உற்பத்தி, இராவணன் கலியாணம், அவனுடைய திக்கு விஜயம், அனு
மார் வரலாறு, வாலி சுக்கிரீவர் வரலாறு, இராமர் சீதையை வனத்திற்
கனுப்புதல், சீதைவால்மீகர் ஆச்சிரமம் சேர்ந்து லவ குசலவர்களைப் பெறு
தல், இராமர் அஸ்வமேதயாகம் செய்தல், லவ குசலவர்கள் குதிரையைப்
பிடித்துக் கட்டல், எல்லோரையும் ஜெயங்கொள்ளல், இராமர் சீதையையும்
தம் புத்திரரையுங் காணுதல், சீதை பூமியில் மறைதல், இராமர் முதலியவர்
நன் பிள்ளைகளுக்குப் பட்டங்கட்டி ஜோதிக்கெழுந்தருளல் முதலிய அநேக
விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. இதன் விலை ரூ. 2.
ஆனந்தபோதினிச் சந்தாநேயர்களுக்கு 15-11-27 வரையில் விலை ரூ. 1-4-0

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

# ஸ்ரீமத் கம்பராமாயண

## வசன சங்கிரகம் (மூன்றும் பதிப்பு)

(சப்தகாண்டங்கள் அடங்கியது.)

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் ஆர்ட்பேப்பரில் போட்டு உள்ளே சேர்க்கப்பட்டிருப்பதோடு, மேல் காலிகோ பைண்டு முன் பக்கத்திலும் ஷை படம் மிக அழகாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

மிக்க திருத்தங்களோடு உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. விலை ரூபா 2.



☞ இதன் முதல் இரண்டு பதிப்புக்களும் மிக விரைவில் செலவாகி விட்டபடியால் இம்மூன்றும் பதிப்பு இப்போது வெளிவந்துள்ளது. இப்பதிப்பிலும் சொற்பக் காப்பிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆதலின் இப்பதிப்பு புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக்கொள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக் கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதையென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாம் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைகூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்குமி கடாக்ஷமுண்டாகும்.

இன்னும் இந்த இராமாயணத்தைப் பக்தியுடன் படித்து முடிக்குமிடங்களில் கலியாணம் முதலிய மங்களகாரியங்கள் நிறைவேறும்; புத்திர பாக்கிய முண்டாகும்; பசு, பால், தானியம் முதலியன விருத்தியாகும்; பில்லி, சூனியம், தீராதநோய், பூதபைசாச உபத்திரவங்கள் முதலியவை நீங்கும்; பகை நீங்கும்; விஷஜெந்துக்கள் அணுகமாட்டா; பஞ்சம் நீங்கும்; நல்ல மழை பெய்யும்; துக்கமான சம்பவங்கள் நீங்கி மிக்க ஆனந்தமுண்டாகும். இவையெல்லாம் உண்டாவது நிச்சயம். இராமாயணம் படித்த பற்பல இடங்களில் இப்பயன்கள் உண்டாகியிருக்கின்றன. இவற்றை ஒவ்வொருவரும் அனுபவத்திலும் உணர்ந்துகொள்ளலாம்.

இத்தகைய மகாமகிமைவாய்ந்த இராமாயணம் பெரும்பான்மையும் கம்பர் இராமாயணச் செய்யுட்களின் போக்கைத் தழுவியே தெள்ளிய நடையில் எழுதப் பெற்றிருக்கின்றது. இராமாயண பாராயணஞ்செய்ய விரும்புவோரும், சாதாரணமாக இராமர் கதையைப் படித்துணர விரும்புவோரும், வித்தியார்த்திகளாகிய மாணவர்கள், மாணவிகள், மற்றைய ஆண்மக்கள், பெண்மக்கள் முதலிய எல்லோரும் இதனை எளிதில் படித்துணரலாம்.

## மலையை விழுங்கிய மகாதேவன் கதை

படிக்கப் படிக்கச் சிரிப்பையுண்டாக்குவது. அளவற்ற ஆனந்தந்தருவது. அறிவை வளர்ப்பது. சகலரும் வாசிக்கத்தகுந்தது. விலை அணா 6.

"ஆனந்தபோதினி" ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

சம்பூர்ண மகாபாரதம் அல்லது

## பாண்டவ சரித்திரம். [டிராமா]

பஞ்ச பாண்டவர்களின் சரித்திரங்களையும், துரியோதனாதியர்களுடைய வஞ்சகச்செயல்களையும், இன்னும் பல அரிய நீதிகளையும் விளக்கிக் காட்டக்கூடிய திவ்ய நாடகம் இது. சி. வெங்கடாசலமுதலியாரவர்களின் ஆலந்தூர் ஒரிஜனல் இந்து டிராமாடிக் கம்பெனியிலுள்ள முக்கிய ஆக்டர்களாகிய மனமோகன ரஞ்சித எம். அரங்கசாமி நாயுடு முதலிய பலசிறந்த நடிகர்களால் பாடப்படும் உயர்ந்த வர்ணமெட்டுகளோடு கூடிய பாடல்களும், வசனங்களும் பொருந்தியது. படிப்போர், கேட்போர் மனத்தை உருக்கிவிடக்கூடியது. நாடக ஆக்டர்களுக்குக் கண்போன்றது. புதிதாக நாடகம் பயில்வோருக்கு மிகத் துணைபுரிவது. இதன் விலை அணா 12.

ஆனந்தபோதினி சந்தாநேயர்களுக்கு 15-11-27 வரையில் விலை அணா 8.

"ஆனந்தபோதினி" ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

---

உண்ணும் உணவிற்கு ஜீரணாதாரமாயுள்ளது எது!

முதல்தரமான—A Quality

## பெருங்காயம்.

அநேகர் உணவை, இனிமையும்படுத்தி ஜீரணிக்கவும் செய்யும் நல்ல பெருங்காயம் கிடைப்பது அரிதாயிருக்கின்றதென்றும், அதில் உயர்ந்ததை தயாரித்துப் பலருக்கும் உபயோகமாகும்படி வியாபாரஞ் செய்யவேண்டுமென்றும் எங்களைக் கேட்டுக்கொண்டபடியால், இப்போது மேலான பெருங்காயம் விற்பனைக்குச் சித்தப்படுத்தி வைத்திருக்கிறோம். இந்தப் பெருங்காயம் உயர்ந்ததாயும், வியாதிகளைக் கண்டிக்கக்கூடியதாயும், விலை சரசமாயும் நம்மிடத்தில் கிடைக்கும்.

வேண்டுவோர்கள் தெரிவித்து வரவழைத்துக்கொள்ளலாம்.

1-இராத்தல் அல்லது 1-பவுண்ட் ரூ. 2.<br>
½-இராத்தல் ரூபா 1-1-0. } தபாற்கூலி வேறு.

## மலச்சிக்கல் நீங்கக்கூடிய திராட்சைப்பழ லேகியம்.

எல்லா வியாதிகளுக்கும் மலச்சிக்கலே காரணம் என்பது சுருதி யுக்தி அனுபவங்களால் தெரிந்துகொண்ட விஷயம். தினந்தோறும் மலம் தாராளமாய்க் கழிந்துவிட்டால் வாத பித்த சிலேஷ்மங்கள் தத்தம் நிலையில் நிற்கும்.

சில தினங்களில் நீங்கள் மிக ஆரோக்கியமாய் இருப்பீர்கள். அதற்கு காரணம் என்னவென்று யோசித்திருப்பீர்களானால் மலம் தாராளமாய்க் கழிந்ததனாலேயென்று தெரிந்துகொண்டிருப்பீர்கள். ஆகையால் நோயுள்ளவர்களும் நோய் இல்லாதவர்களும் இந்த விஷயத்தைக் கவனிக்க வேண்டியது அவசியம்.

நமது திராட்சைப்பழ லேகியமானது மலத்தைத் தாராளமாய்க்கழித்து சகல நோய்களையும் கண்டித்து தேகத்தை ஆரோக்யமாய் வைத்திருக்கும்.

முழுவதும் பச்சிலை, புஷ்பம், பழம், தேன் இவைகளைக்கொண்டு பரிசுத்தமாகத் தயார் செய்யப்பட்டது. குமட்டல் வாந்தி கரகரப்பு முதலிய கெட்ட செய்கைகள் ஒன்றும் கிடையாது. வாளம் முதலிய பேதியாகும் மருந்துகள் கண்டிப்பாய்ச் சேர்க்கப்படவில்லை யென்பதற்கு உத்தரவாதம் செய்கிறோம். சாப்பிட மிக இனிப்பாய் இருக்கும்.

டப்பி 1-க்கு ரூ. 1—4—0 4-டப்பி ரூ. 4—8—0

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# மர்மங்கள் வெளியாய்விட்டன !

### எதன் மர்மங்கள்?

## மணவாழ்க்கையின் மர்மங்கள்.

ஏழைகளிடம் பணம் பறிக்கும் பொருட்டுப் பற்பலவிதமாய் ஏமாற்றி எழுதப்படும் பழிப்புக்கிடமான நூல்போலன்று இது. தகுந்த ஆங்கில, ஆயுர்வேத, யூனானி மேற்கோள்களைக்கொண்டு, பார்க்கப் பார்க்கக் கண்ணைப்பறிக்கும் பற்பல அழகிய உருவப்படங்களுடன் மேலோரின் குடும்பவாழ்க்கையின் சாஸ்திரோக்தம்போல் எழுதப்பட்டிருக்கும் குடும்ப ரகஸ்ய இன்ப நூலாகும். இதைக் கண்ணால் காண்பதே பாக்கியம்; கையி லெடுப்பதே போக்கியம். மிக அழுத்தமான காகிதத்தில் அதிக அழகாக அச்சிட்டுப் பளபளப்புடன் கோர்த்தியாக பைண்டு செய்யப்பட்டிருக்கும் கனதியான கிரந்தமாகும். இது வரை முதற்பதிப்பும் இரண்டாம் பதிப்பின் ஏராளமான பிரதிகளும் விலையாய்விட்டன. எஞ்சி நிற்பவை கொஞ்சமே! கையிலெடுத்தவர் ஒருபோதும் கீழே வைக்க மனந்துணியார். இன்றே எழுதுங்கள்! பிந்திவருவருக்குப் பிரதி கிடைப்பது அரிதாய்விடும். முதன்முதல் வெளியிடப்பட்ட "கொக்கோகக் கோலம்" என்னும் நூலின் திருத்திய விரிநூலாகிய இம் "மணவாழ்க்கையின் மர்மங்கள்" விலை ரூபா 2—4—0 தான். வி. பி. சார்ஜ் வேறு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இல்வாழ்க்கையின் இரகசியங்கள் | 2 | 0 | 0 | சரீர மர்மசாஸ்திரம் | 1 | 0 | 0 |
| கர்ப்ப சாஸ்திரம் | 1 | 8 | 0 | மதனாதி ரஹஸ்யம் | 1 | 0 | 0 |
| சதிபதிகளின் மர்மம் | 1 | 0 | 0 | ரதிமதனசிருங்காரரஹஸ்யம் | 1 | 0 | 0 |
| ஸ்திரீபுருஷ ரகசியம் | 1 | 8 | 0 | கொக்கோகம் | 1 | 0 | 0 |
| ரதி சாஸ்திரம் | 1 | 4 | 0 | மானிட ரகசிய சாஸ்திரம் | 1 | 0 | 0 |
| | | | | மனோவசிய சாஸ்திரம் | 1 | 8 | 0 |

### வடுவூர். கே. துரைசாமி ஐயங்கார் எழுதியவை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பூர்ண சந்திரோதயம் 1,2,3,4 ரூ | 7 | 8 | சௌந்தர கோகிலம் 2 பாகம் ரூ. | 3 | 12 |
| மாயாவிநோதபரதேசி 1, 2 | 5 | 0 | வஸந்த மல்லிகா | 1 | 8 |
| மதனகல்யாணி 1,2,3 | 4 | 8 | வித்யாஸாகரர் | 1 | 4 |
| கும்பகோணம் வக்கீல் 1,2 | 3 | 0 | வசந்தகோகிலம் | 1 | 0 |
| மேனகா 1,2 | 3 | 0 | திவான் லொடபடசிங் பகதூர் | 0 | 12 |
| விலாஸவதி 1,2 | 8 | 0 | திலோத்தமா | 0 | 12 |
| கனகாம்புஜம் 1, 2 பாகம் | 2 | 12 | மங்கையர்பகட்டு | 0 | 12 |
| பாலாமணி | 2 | 8 | மாணிக்கவாசகர் | 0 | 8 |

விலாசம்:—ஆரியன் புத்தகசாலை, 19, தாண்டவராய முதலி தெருவு, திருவல்லிக்கேணி, சென்னை.

---

# தேவை! ஏஜண்டுகள் தேவை!!

பிரகாசத்துடன் கூடியதும் உண்மையானதுமான இலங்கை ரவைக் கற்களை (Genuine Ceylon Diamonds) விற்பனை செய்ய டிராவலிங் ஏஜண்டுகள் தேவை. அவர்களுக்கு மாத மொன்றுக்கு நூறு ரூபா சம்பளம் கொடுக்கப்படும். அவர்களிடத்தில் பிரயாணகாலத்தில் நூறு கற்கள் ஒப்படைக்கப்படுமாகையால் அவர்கள் அதற்கென நூறு ரூபாய் கட்டக்கூடியவர்கள்தான் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

தி ஜெம்மிங் ஸின்டிகேட்,
அம்பலங்கோடா, ஸிலோன்.

THE GEMMING SYNDICATE, AMBALANGODA, *Ceylon.*

# சத்தியவான் சாவித்திரி. [டிராமா]

இது, சாவித்திரியென்னும் மகாபதிவிரதை, தன் கற்பின் மகிமையால் எமன் கவர்ந்து சென்ற தன் நாயகன் உயிரையும் மீட்டுக் கண் கெட்டிருந்த மாமியார் மாமனாரின் கண் தெரிய வரம்பெற்று, பகைவர் கைப்பட்ட தங்கள் இராஜ்ஜியத்தையும் பெற்ற உத்தம சரித்திரத்தை நன்குவிளக்கிக் காட்டும் நாடகமாகும்; ஆலந்தூர் ஒரிஜனல் இந்து டிராமாடிக் கம்பெனியாரால் பாடப்படும் பற்பல அற்புத வர்ணமெட்டுப் பாடல்களும் சம்பாஷணைகளும் அடங்கியது. நாடகக்காரர்களுக்கு மிகுதியும் உபயோகப்படுவது; மற்ற பெண் மககள், ஆண் மக்கள் ஆகிய எல்லோருமே வாங்கிவாசிக்கத் தக்கது. ஜனங்களுக்கு நல்லறிவைப் புகட்டுவதில் முதன்மைபெற்றது. சாவித்திரி நாடகத்தில் ஆக்டராக விரும்புவோர் இப்புத்தகமொன்று வாங்கிக் கொண்டால் அதி வெளிதில் எந்த ஆக்டும் செய்வார்கள். இதன் விலை அணா 6.

ஆனந்தபோதினி சந்தாநேயர்களுக்கு 15-11-27 வரையில் விலை அணா 4.

# ஞானசவுந்தரி சரித்திரம். [டிராமா]

இது, மாற்றாந்தாயின் கொடுமைகளையும், பதிவிரதையின் இலக்ஷணங்களையும், தெய்வபக்தியுடையவர்கள், எத்தகைய ஆபத்தினின்றும் நீங்கிக் கடவுளால் காப்பாற்றப்படுவார்கள் என்பதையும் விளக்கிக்காட்டும் மிக்க உருக்கமான நாடகமென்பது உலகறிந்த விஷயம்; ஆலந்தூர் நாடகக் கம்பெனியாரால் பாடப்பட்டு வந்த நூதன வர்ணமெட்டுக்களில் அமைந்த பாடல்களெல்லாம் இதில் அடங்கியிருக்கின்றன. அவை, படிப்போர் மனதையும், கேட்போர் நெஞ்சத்தையும் உருக்கிவிடத் தக்கவை. இது, பொதுவாகத் தமிழ் தெரிந்த எல்லோருக்கும், சிறப்பாகக் கிறிஸ்தவர்களுக்கும், நாடகக்காரர்களுக்கும் உபயோகமானது. இதனைப் படிப்பார்க்கும், கேட்பாருக்கும் உயர்ந்த பல நீதிகள் புலப்படும். இதனை வாங்கிப் படிக்கும் நாடகக்காரர்கள் வேறு ஆசிரியர்களின் உதவியின்றியே இந்நாடகத்தை ஆடத்தொடங்கி விடலாம். இது நல்ல கிளேஸ் கடிதத்தில் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 6.

ஆனந்தபோதினி சந்தாநேயர்களுக்கு 15-11-27 வரையில் விலை அணா 4.

# ஹிப்னடிஸம் மெஸ்மெரிஸ மெனும் (வாயுவேக) மனோவசிய சாஸ்திரம்.

இதை வாசித்து இதில் சொல்லப்படும் விதிகளை அனுசரிப்பதால், இறந்த காலத்தில் நடந்தவைகளையும், பின்னே நடக்கப்போகின்றவைகளையும் உணரலாம். இறந்த நமது முன்னோர்களுடன் பேசலாம். பிறர் கண்களுக்குத் தோற்றாமல் மறைந்துகொள்ளலாம். பிறருக்கு நித்திரை வருவிக்கலாம். நோய்களை நீக்கலாம். ஞானதிருஷ்டிபெறலாம். விரலைக்காட்டிப் பிறரைத் தூங்கவைத்து அத்தூக்கத்தில் விநோதங்களை உண்டாக்கலாம். கீல்வாயுவுக்குச் சிகிச்சை செய்யலாம். அபினிப் பழக்கத்தை நிறுத்தலாம். பிராணாயாமம் செய்யலாம். நீட்டிய கையை முடக்காமலும் முடக்கிய கையை நீட்டாமலுமிருக்கும்படி செய்யலாம். மிருகங்களை வசியம் செய்யலாம். அனேகரை ஒரேமுறையில் தூங்கவைக்கலாம். தீக்குழி பாயலாம். தூரத்திலிருப்பவர்களை வரவழைக்கலாம். ஆஞ்சநேயர்வசியம் செய்யலாம். பிறர்மன வசியஞ் செய்யலாம். பிறர் துர்க்குணங்களைப் போக்கலாம். பொதுஜனவசியம் செய்யலாம். யோகசித்தி பெறலாம். பலவகை ஜெயம் பெறலாம். இன்னும் இதைப் போன்ற அனேக அதியற்புத காரியங்களை யெல்லாம் செய்யலாம். மானிடர்க்கு இவ்வளவு பயன்தரக்கூடிய புத்தகம் கிடைப்பது அரிதாகும். ரூபா 1-8.

---


ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்,

ஐந்தரை முழ நீளம் இரண்டரை முழ அகலம்.

நாகரீகமும் அழகும் வாய்ந்த இந்த நவீன பட்டுக்குட்டைகள் வேண்டிய வர்கள் இச்சமயத்தில் நாளைப் போக்காமல் இன்றைக்கே எழுதுங்கள். ஸ்டாக்கிலிருப்பவை செலவழிந்து விட்டபின் 10 ரூபாய் கொடுத்தாலும் இப்படிப்பட்ட குட்டைகள் கிடைக்கமாட்டாவென்பது உண்மை! உண்மை!! மிகவும் நேர்த்தியான பளபளப்போடு கூடிய பட்டினால் செய்யப்பட்ட இக்குட்டைகளை சிரசில் சுற்றிக்கொள்ளலாம். கமிஸ், சட்டை, கோட் முதலிய சொக்காய்களின் மேல்போடும் துப்பட்டாக்களாகவும், ஸ்திரீகள் தாவணியாகவும். சிறு பெண்பிள்ளைகள் தாவணியாகவும் அங்கவஸ்திரமாகவும் உபயோகிக்கலாம். இவற்றில் பச்சை, வெள்ளை, சிவப்பு வெண்சிவப்பு, ரோஸ், ஊதா, நீலம், மஞ்சள், மேகவர்ணம் முதலிய பல நிறங்கள் பொருந்தியவை உண்டு. வேண்டுவோர் இன்ன குட்டை வேண்டுமென்று கடிதம் எழுதி அனுப்பவும். விலை 1-க்கு ரூ. 2-8-0



## பிளாக் பார்ட் பௌண்டன் பேனா.

விலை  ரூ. 3—8—0

இது பெயர்பெற்ற ஸ்வான் பேனா செய்யும் மேபிடான் கம்பெனியாரால் செய்யப்பட்ட நம்பிக்கையுள்ள உயர்ந்த மாதிரி பிளாக் பார்ட் பேனா.

**விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.**

---

## G. W. M. REYNOLDS'

### BOLD TYPE EDITIONS.

| No. | Title | Vols. | Rs. | A. |
|---|---|---|---|---|
| 1. | Mysteries of the Court of London | 17 vols. | 17 | 0 |
| 2. | Joseph Wilmot | 8 ,, | 5 | 0 |
| 3. | Ellen Percy | 8 ,, | 5 | 0 |
| 4. | Mary Price | 8 ,, | 5 | 0 |
| 5. | Rye House Plot | 4 ,, | 3 | 0 |
| 6. | Young Duchess | 4 ,, | 3 | 0 |
| 7. | Rosa Lambert | 4 ,, | 3 | 0 |
| 8. | Loves of the Harem | 4 ,, | 3 | 0 |
| 9. | Margaret | 4 ,, | 3 | 0 |
| 10. | Massacre of Glencoe | 4 ,, | 3 | 0 |
| 11. | Virgin's Kiss | 4 ,, | 3 | 0 |
| 12. | Canonbury House | 3 ,, | 2 | 4 |
| 13. | Mysteries of Old London | 3 ,, | 2 | 4 |
| 14. | Pope Joan | 3 ,, | 1 | 12 |
| 15. | Soldier's Wife | 2 ,, | 1 | 8 |

| No. | Title | Vols. | Rs. | As. |
|---|---|---|---|---|
| 16. | May Middleton | 2 vols. | 1 | 8 |
| 17. | Faust | 2 ,, | 1 | 8 |
| 18. | Leila | 2 ,, | 1 | 8 |
| 19. | Robert Macaire | 2 ,, | 1 | 4 |
| 20. | Mary Stuart | 2 ,, | 1 | 4 |
| 21. | Seamstress | | 1 | 0 |
| 22. | Alfred | | 1 | 0 |
| 23. | Grace Darling | | 0 | 12 |
| 24. | Young Fisherman | | 0 | 10 |
| 25. | Agnes | 9 ,, | 6 | 0 |
| 26. | Kenneth | 4 ,, | 3 | 0 |
| 27. | Omar | 4 ,, | 3 | 0 |
| 28. | Coral Island | 4 ,, | 3 | 0 |
| 29. | Wagner | 3 ,, | 1 | 12 |
| 30. | Master Timothy's Book Case | 3 ,, | 1 | 12 |
| 31. | Parricide | | 1 | 12 |
| 32. | Stories Told by a Gendarme | | 0 | 12 |
| 33. | Mysteries of Paris by *EUGENE SUE* | | 1 | 0 |

**SUPERIOR WATCH CO., P. B. No. 167, MADRAS.**

---

## நோய்க் கிடங்கொடேல்

நீங்கள் ஏன் தலைவலிகளுக்கு, ஜலதோஷம், பாரிசவாயு, கீல்வாயு முதலான பலவித நோய்களுக்கு உட்பட்டு அவஸ்தைப்பட வேண்டும்? சூரியனைக்கண்ட பனிபோல் நோய் இருக்கிற இடம் தெரியாமல் இலகுவில் சொஸ்தப்படுத்துவது நிகாற்றதான

# Amrutanjan

## அமிருதாஞ்சன்

### ஸர்வ நோய்களுக்கு ஸித்தௌஷதம்




அமிருதாஞ்சனம் அபூர்வமான மூலிகைகளிலிருந்து செய்யப்படுகிறது. தோலைப்பற்றிய சொறி சிரங்குகளுக்கும், வெட்டுக்காயம், இருமல் முதலிய உபத்திரவங்களுக்கும் கைகண்ட மருந்து.

விலை அணா 10

### படைத் தைலம்.

இது எல்லாவிதமான படைகளையும் போக்கும். விலை டப்பி 1-க்கு அணா 6.

### மோஹினி தைலம்.

ஸ்த்ரீ புருஷர் உபயோகிப்பதற்கு பிரசித்தமானது. 5 துலாம் எண்ணெய் சீசா 1-க்கு அணா 12.

### தந்த சூரணம்.

பல்துலக்க இது நல்ல தூள். பல் வியாதி, ஈறு வலி முதலிய நோய்கள் நீங்கும். விலை டப்பி ஒன்றுக்கு அணா 2.

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

## அமிருதாஞ்சன் டிப்போ,

நெ. 6, தம்புசெட்டி தெரு, மதராஸ்.

விளக்கிக் காட்டும் தோடகமென்னும்

# வேதசார சமுத்தாரணம்.

வேத உபநிஷத்துக்களாலும், யோகசாதனஞ்செய்து முத்தியடைந்த முனிபுங்கவர்களாலும், பகவத்கீதை, கைவல்யம், ஞானவாசிட்டம் முதலிய அரிய பெரிய நூல்களாலும் விரித்துக் கூறப்படும் வேதாந்த இரகசியங்களெல்லாம் இதில் சாமனியரும் எளிதில் உணர்ந்துகொள்ளும் விதமாகவும், சுருக்கமாகவும், தெளிவாகவும், கூறப்பட்டிருக்கின்றன. ஜீவாத்மாவின் தன்மை, பரமாத்மாவின் தன்மை, மனம் முதலிய அந்தக்கரணங்களின் இயற்கைகள், ஜீவாத்மா, அந்தக்கரணங்களோடும், தேகத்தோடும் சம்பந்தப்பட்டிருக்கும்விதம், நீங்கும்விதம், மனவோட்டத்தைத் தடுக்கும் மார்க்கங்கள், யோகசாதனம் செய்யும்விதம், ஜீவனும் பிர்ம்மமும் ஐக்கியமாகும்விதம் முதலிய வேதாந்த அர்தரங்கப் பொருள்களெல்லாம் சந்தேகமின்றி வெகு தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன. எண்ணிறந்த புத்தகங்களைப் படித்துத் தெளிவின்றி மயங்குவதைக்காட்டிலும் இந்த ஒரு புத்தகத்தைப் படிப்பதால் வேதாந்த விஷயங்கள் யாவும் விளங்கிவிடும் அவற்றைத் தெரிந்துகொள்ள ஞானகுரு வேண்டிய அவசியமில்லை. ஆசிரியர் அனுக்கிரகத்தால் திடிரென்று ஞான; வொளி பெற்றவரும், ஸ்ரீ. சங்கரபூஜ்ய பகவத்பாத ஆசாரிய சுவாமிகளின் முக்கிய சீடர்களுள் ஒருவரும், அஸ்தாமலகரென்னும் நாமம் பெற்றவருமாகிய ஸ்ரீ. தோடகாசிரியரவர்களால் ஆதியில் இது தேவவாணியிற் செய்யப்பட்டது; பின்னர் இதை, ஸ்ரீ திருக்களர் ஆண்டவரென்னும் ஸ்ரீ வீரசேகர ஞானதேசிக பாதசேகர நியாயசந்திர வேதாந்த பாஸ்கர மஹா மண்டலேஸ்வர ஸ்ரீ சுப்பைய ஞானதேசிகேந்திர சுவாமிகள் செந்தமிழில் செய்யுள் ரூபமாக இயற்றியருளினர். இதற்கு இப்போது, ஸ்ரீ. சிதம்பரம், பொன்னம்பலஞான தேசிகர் மடாலயம் ஸ்ரீ. சிதம்பர ஞானதேசிகர் பாதசேகராகிய ஸ்ரீ. சுப்பைய சுவாமிகள் மிகத் தெளிவான உரை இயற்றியிருக்கின்றார்கள், இவ்வுரை வசனம்போல் மிகவும் விளக்கமாயிருக்கும். இந்த மூலமும் உரையுமே இந்நூலில் அடங்கி யிருக்கின்றன. இதன் விலை அணு 8.

**ஆனந்தபோதினி சந்தாநேயர்களுக்கு 15-11-27 வரையில் விலை அணு 6.**

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபாற்பெட்டி நெ. 167, மதராஸ்.**

---

# ஓர் தொழிலை கற்றாலென்ன?

"சோப் தொழில்" 9-படங்களுடன் ரூ. 2—0—0

"தீக்குச்சி தொழில்" 10-படங்களுடன் ரூ. 2—0—0

"600 தொழில் முறைகள்" சர்பத்து, ரோம சம்ஹாரி, நரைமயிர் கருக்குந் தைலம், பற்பொடி, தேள் கடி மருந்து, பன்னீர், இங்கி, இரகசிய இங்கி, சாக்பீஸ், வெள்ளி கிலிட், செயற்கை தங்கம், ரசம் பூசுதல் முதலிய முறைகள் அடங்கியது. 4-பாகங்கள் 14 படங்களுடன் விலை ரூ. 4-0-0



"அபூர்வ மருந்துகள்" இப்புத்தகம் மாத்திரைகள், பஸ்பங்கள், லேகியங்கள், ரசங்கள், அஞ்சனங்கள் என்று பத்திரிகைகள், கேட்லாக்குகள் முதலியவைமூலம் விற்கக் கூடிய கைகண்ட மருந்துகளைப்பற்றி கூறுகிறது. 10-படங்களுடன் விலை ரூ. 2-8-0.

**கைத்தொழில் புத்தகங்களின் கேட்லாக் இனும்!**

**ஆர்ட் புக்ஸ் கம்பெனி, 41/2 பிராட்வே, மதறாஸ்.**

---

# சிங்கபலத்தைத் தருவதெது?




**முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும், தேகபலத்தைத் தரும் ஔடதம்வேறொன்றுமில்லை.**

**விளம்பரம்.**

**இதைக் கண்ணுறும் கனவான்களே!**

**இந்த லேகிய [illegible] ரங்கள் [illegible] மானவையல்ல. அ[illegible] மான பலத்தைத் தரக் கூடிய சக்தி அ[illegible] துள்ளவை. [illegible] யாய் இவற்றை [illegible] வாங்கிச் சாப்பிட்[illegible] ஓரே தடவையிலேயே இவற்றின் [illegible] குணம் நன்கு விளங் கும்.**

## நாராயண சஞ்சீவித் தைலம்.

இத்தைலம் முழுவதும் பச்சிலைகளாலும், பசம்பால் முதலிய சிரேஷ்டமான வஸ்துக்களாலும் ஆயுர்வேத முறைப்படி மிகப் பரிசுத்தமாக தயார் செய்யப்பட்டது. இத்தைலத்தில் ஸ்நானம் செய்வதினால் தலைவலி, ஒற்றைத் தலைவலி, மண்டையிடி, மண்டைக்குத்தல், கண் எரிச்சல், கண்களில் நீர் வடிதல், சாலேஸ்வரம், காதுநோய், தலைப்பாரம், அதிக வெய்யிலினால் உண்டாகும் சிரரோகங்கள், சரீரதாபம், மூளைக் கொதிப்பு முதலியவைகள் ஆச்சரியப்படும் விதமாய்த்தீரும். தொடர்ச்சியாய்ச் செய்து வரும் இதன் ஸ்நானங்களினால் நரைத்தமயிர் கருத்துவிடும். மூளையைக் குளிரப்பண்ணி அறிவையும் திடச் சித்தத்தையும் உற்சாகத்தையும் உண்டுபண்ணுவதில் இது நிகரற்றது. சாராய சத்து முதலிய ஆங்கில வாசனைகள் இதில் சேர்க்கப்படவில்லை. சுத்தமான பச்சிலை கிழங்கு புல் முதலிய இந்தியவாசனைகளே சேர்க்கப்பட்டிருக்கின்றன. தினம், இதனைத் தலையில் தடவி வாரிவருவதினால் மயிர் கருப்புப்பட்டைபோல் பளபளப்பாகக் கருத்து ஆலம்விழுதுபோல் நீண்டு வளரும்.



இன்னும் இது, உஷ்ணத்தைத் தணித்து அபாரமான ஞாபக சக்தியை உண்டுபண்ணி முகவசீகரத்தை உண்டாக்கும். அதிக கஷ்டப்பட்டு வேலை செய்தவர்களும் வெகுதூரம் வழி நடந்தவர்களும் படுக்கும்போது இதில் சிறிது தைலத்தை உள்ளங்கை உள்ளங்கால்களில் தேய்த்துக்கொண்டால் கஷ்டங்கள் எல்லாம் நீங்கிக் காலையில் எழுந்திருக்கும்போது திரேகம் வெகு ஆரோக்கியமாய் இருக்கும். 5 பலம் டின் 1-க்கு ரூபா 1. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

## ஜி. கியூர் வெள்ளை என்னும்

### கிள்ள நோயை 3 தினத்தில் குணப்படுத்தும் மருந்து.

ஆடவர், பல மாதரிடத்தும், வேசியரிடத்தும், பிணியாளரோடும் சம்பந்தப் படுவதினாலும், ஓயாத சிற்றின்ப வனுபோகத்தில் பிரவேசிப்பதாலும் மூலத்தில் அக்கினிகொண்டு, தாது கெட்டு, பிரமேகங்கள், நீரடைப்பு, சதையடைப்பு, வெள்ளை, வெட்டை, கிரந்தி, சூலை, அரையாப்பு, பவுத்திர முதலியவைகள் அவர்க்கு உண்டாகின்றன. அவைகளில் முக்கியமாகிய இரத்தப் பிரமியம், நீர்க்கடுப்பு, நீர்த்தாரை யெரிவு, வெள்ளை, வெட்டை இவைகளுக்கு இதுவே மிகவும் அனுபோகமான மருந்து என்பது உண்மை. இதில் பேதி முதலிய கெட்ட குணங்கள் இல்லை. பத்தியமில்லை. இதை உபயோகிக்கும் விபரப் பத்திரிகை மருந்துடன் அனுப்பப்படும். புட்டி 1-க்கு ரூபா 1.

## கண்நோய் மருந்து.

இது கண் நோய், கண்குத்தல், கூசல், நீர் வடிதல், மங்கல், அந்திமாலை, பீளைகட்டல், சதை வளர்ந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை புருவம் இவைகளில் வலி, கண் புகைச்சல் இவைகளைக் குணப்படுத்தும். மாணாக்கர்களுக்கும், ஆழ்ந்த பதிவையோடு வேலை செய்பவர்களுக்கும் இது மிகச் சிறந்த ஔஷதம். இதை உபயோகிப்பவர் கண்ணாடி போடவேண்டியதில்லை. புட்டி 1-க்கு அணா 8.



விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## கஸ்தூரி மாத்திரை.



சரீரமானது யாதொரு அபாயத்தையும் அடையாதிருக்க விரும்புவோர் பிரதிதினமும் ஆகாரத்திற்குப்பின் தாம்பூலத்துடனாவது தனியாக வாவது இதைச் சாப்பிட்டு வந்தால் இது நந்த நோய்களைத் தடுத்தும், அஜீரணம் பித்தவாய்வு, ஜலதோஷம் இவைகளைக் கண்டித்தும், ஜீரண சக்தியை உண்டாக்கி வாயிலுள்ள அசுத்த நாற்றத்தைப் போக்கி வாய்ப்புண் முதலியவைகளைத் தடுத்தும் சுகமுறச் செய்யும். கர்ப்ப ஸ்திரீகள் இதனை உபயோகித்தால் பிரசவகாலத்தில் உண்டாகும் ஜன்னி முதலிய ரோகங்களினின்றும் தப்பித்துக்கொள்ளுவார்கள்.

குழந்தைகள் முதல் கிழவர்கள் வரையில் எப்பருவத் தோர்க்கும் உண்டாகும் சளை, இருமல், சுரம், தலைப்பாரம், நெஞ்சில் கொருகொருப்பு, ஜலதோஷம் முதலியவைகளுக்கு வயதுக்குத் தக்கபடி இதில் ஒன்று முதல் 4-மாத்திரைகள் கொடுக்கச் சுகமுண்டாகும். இது சர்வகுடும்பங்களிலும் இருக்கவேண்டிய முக்கிய ஔஷதம். இதன் விலை புட்டி 1-க்கு அணா 12.

## காப் கியூர் என்னும் க்ஷய அரி.



கப இருமல், இரைப்பு, அல்லது மந்தகாசம், க்ஷயம், சளி இருமல், கக்குவாய் இருமல், பெருத்த இருமல், தொண்டை நோய், சுவாசகாசம், கடினமான ஜலதோஷம், அபாயமான ஈளை இருமல், தொண்டையெரிச்சல், தொண்டைக் கரகரப்பு, இருமலினால் தூக்கம் பிடியாமை, குளிர்ச்சியான வஸ்துவைச் சாப்பிடுகிறதினாலும் பனியில் நனைவதினாலும் உண்டாகும் சாதாரண இருமல் முதலான வியாதிகளை நாலு தினத்தில் இது கண்டித்துக் கோழையை வெளியில் தள்ளி நன்றாய் அவ்வியாதிகொண்டிருந்தவரை தூங்கச்செய்யும். புட்டி 1க்கு விலை ரூபா 1.

## சர்வமேக நிவாரணத் தைலம்.

இந்தப் பிரசித்திபெற்ற இராஜசஞ்சீவி திராவகத்தை, காலை மாலை இரண்டுவேளைகளிலும் 10 நாட்கள்வரை உட்கொண்டால் வெகு நாட்களாகத் தேகத்தில் வசிய மேகரோகங்கள், மேகவாய்வு, தனுர்வாதம், முழங்கால்வாதம், குதிக்கால்வாதம், நாள்மான தடிப்புகள், மேகரோகத்தால் உண்டான வெடிப்பு இரணங்கள், குழிப் புண்கள், புரையோடுகிற புண்கள், திமிர் வாய்வு, கைகால் விரல்களில் மேகநீர் தங்கிய நோய்கள், கிரந்தி முதலிய கிரந்திப் புண்கள், துடைவாழை படைதள், ககக்கணு நோய், சகல மூலங்கள் முதலிய ரோகங்கள், நெருப்பிலிட்ட பஞ்சுபோல்போகும். இது அநேக ஜனங்களின் துன்பத்தை நீக்கிச் சௌக்கியத்தை உண்டுபண்ணி அதிக அனுபவத்திற்கு வந்தது. கடின பத்தியமின்றி,பால்,நெய், கறி முதலியவைகளுடன் சாப்பிடக்கூடியதும், பேதி,இளைப்பு,ஆயாசம் முதலியவைகளை உண்டாக்காமல் சுகமாக்கி வியாதிகளைக் கண்டித்துச் சுகப்படுத்தக்கூடியதுமாகிய உண்மையான மருந்து. இதன் விலை ரூபா 1-8-0.




விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# சோடாவாட்டர் பவுடர்.

வயிற்று நோயிருப்பவர்களுக்கும் ஜீரணசக்தி யில்லாதிருப்பவர்களுக்கும் இது நல்லது. ஒரு ஆழாக்கு ஜலத்தில் 3-சிட்டிகை சோடவாட்டர் பவுடர் போட்டால் பொசபொசவென்று பொங்கும். அதை உடனே சாப்பிடவும். ஏப்பம் வரும். உடனே வயிற்றுநோவு நின்றுவிடும். புட்டி 1-க்கு அணா 6.




## யூகலிப்டஸ் ஆயில்.

(சுத்தமான நீலகிரித் தைலம்.)

வைத்தியத்தில் கைதேர்ந்த ஒரு அநுபோக வைத்தியரால் செய்யப்பட்ட இந்தத் தைலம் வாந்திபேதி, பிளேக்வியாதி, தேள் முதலிய விஷ ஜந்துக்களின் கடி, கத்தி வகையறு, வெட்டுக்காயங்கள், நரம்புச் சுளுக்குகள், தீப் புண்கள், வெந்நீர்பட்டு வெந்த புண்கள், பிளவைகள், புரைபோன இரணங்கள், இன்புளுவென்ஸா, மலேரியா முதலிய சகலவித சுரங்கள், இருமல், கக்குவாய் இருமல், வாய்வுபிடிப்பு, குடைச்சல், வாய்வினால் உண்டாகும் கொடூரமான பல்வலி, தலைவலி, ஒற்றைத் தலைவலி, கண் எரிச்சல், கண் கட்டி. முதலிய நோய்களுக்குக் கைகண்ட ஔஷதம்.

1 அவுன்ஸ் புட்டி 1-க்கு அணா 4.
1 „ 1-டஜன் (12) க்கு ரூ. 2—8—0

## நரைமயிர் கருக்குந் தைலம்.

தற்காலத்தில் பலவிதமாகச் செய்து விற்கப்பட்டு வருகிற கப்புகள் மயிரைச் செம்பட்டையாகவும் பசுமை நிறமாகவும் சாம்பல் வர்ணமாகவும் ஆக்கி விகாரப்படுத்தி விடுகின்றன. நமது தைலமோ நரைத்த மயிருக்குப் பூசிய 3 நிமிஷத்திற்குள்ளாக நரைப்பதற்குமுன்பு இருந்த கருமை நிறத்தையும் பளபளப்பையும் உண்டுபண்ணும். மேலே கூறியுள்ள விகார குணங்கள் இதில் உண்டாகமாட்டா. இதைப் பூசியபிறகு முக லட்சணமும் வசீகரமு முண்டாகிறபடியால் வயோதிகரும் வாலிபரைப்போல் தோற்றப்படுவார்கள். இது உண்மை. இதைப்போன்ற சிறந்த தைலம் வேறெங்கும் கிடையாது. வேறு எந்த விதமான கெட்ட குணங்களும் இதில் இல்லை. இந்த அருமையான தைலத்திற்குக் கிடைத்திருக்கும் கனவான்களுடைய சர்டிபிகேட்டுகளைக கணக்கிடல முடியாது. இதை உபயோகிக்கும் விதம் பார்சலோடு தெரிவிக்கப்படும். விலை ரூபா 1.





## கூந்தல் வளரும் துளி.

இதை நல்லெண்ணெய் அல்லது தேங்காயெண்ணெயில் கலந்து பிரதிதினம் மயிருக்குப் பூசிவந்தால் கூந்தலானது ஆலம் விழுது போல் உண்மையாய் வளரும். அதில் பேன் சேராது; சுண்டு உண்டாகாது; மயிர் உதிராது; வழுக்கைவிழுந்த இடத்திலும் மயிர் முளைக்கும்.

புட்டி 1-க்கு விலை அணா 12.

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி, நெ. 167, மதராஸ்.

# சிவப்பிரகாச பல் பொடி.



இந்தச் சிவப்பிரகாச பல் பொடி மற்ற இதர பல் பொடிகளைப் போலிராமல், அதிக சுகந்தமாகவும் பல் வலி, பல்லில் சொத்தை ஈறு வளர்ந்திருத்தல், வாய்ரணம், வாய்நாற்றம் பல்லாட்டம் முதலிய வியாதிகளை நீக்குவது மல்லாமல், பல் நன்றாய்த் துலங்கும்படி செய்யும். வாயில் சதா கமகம வென்னும் மணத்தை உண்டாக்கிக்கொண் டிருக்கும். ஒரு மாதத்திற்கு உபயோகிக்கக் கூடிய பல்பொடி டப்பி 1-க்கு விலை அணா 2.


6-டப்பிகள் விலை அணா 10.

## நாக்குப் பூச்சியை நாசமாக்கும் பில்லை.

இந்த பில்லைகள் ஒரு வருடத்துக் குழந்தைகட்கு அரை பில்லையும், மற்றவர்கட்கு 1 அல்லது 2 பில்லைகளும் கொடுத்தால் வயிற்றிலுள்ள சிறுகிருமிகள் யாவற்றும் பந்து பந்தாய் வந்துவிடும். 8-பில்லைகள் விலை அணா 6.

## அயத்தங்கத் திராவகம்.

மித்திரர்களே! இந்த அபூர்வ மருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாகக் கண்டிக்கக்கூடியது. இதை அநேக ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவது வேறு எந்தக் காரணத்தினாலாவது இளைத்துப்போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிர்த்திசெய்வதில் இது நிகரற்ற மருந்தாகும். ஆங்கிலேய முறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து. சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல் நோய்கண்டு அவஸ்தைப் படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டே வேளையில் ஆச்சரியமான சுகத்தையடைவார்கள். இதனால் உண்டாகக்கூடிய அநேக குணங்களில் முக்யமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.



இது, நரைத்த மயிரைக் கறுப்பாக்கும், உஷ்ணத்தினாலாவது, புழுவெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும்; இதனால் நீர் வியாதிகள் தீரும். கண்ணெரிச்சல், கைகால் காந்தல் இவை நீங்கும். இன்னும் இது முகவசீகரத்தை உண்டாக்கும். தேக அசதியை யோட்டும். ஜீரண சக்தியையும், நல்ல பசியையும் உண்டாக்கும். மனதை அதிக உற்சாகப்படுத்தும், நரம்புகளுக்கு அதிக வலுவைத் தரும். தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சரப்பிக்கும். க்ஷயரோகத்தை க்ஷணத்தில் தீர்க்கும். வாத பித்த சிலேத்துமங்களாலுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும். சப்த தாதுக்களுக்கும் நல்ல பலத்தைத் தரும். மூலச்சூடு மூலவாய்வு மலச்சிக்கல் ஆகியவை நீங்கும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 15 நாள் சாப்பிட்டால் இது இணையில்லாத ஆனந்தத்தைத் தரும். மனிதர் தாம் இழந்துபோன தேகதிடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது. ஒருவன் 40 நாள் மருந்தை உட்கொள்ளும்பக்ஷத்தில் வியாதி என்பதே அம்மனிதனின் நிழலைக்கூட அணுகாது அவனுடைய தேகம் வஜ்ஜிரமேயாகும். இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது. 20-நாள் மருந்து ரூ. 1. 40-நாள் மருந்து ரூபா 1-12-0.

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

# சீதபேதி (டிசென்டரி) பவுடர்.



இரத்தபேதி, சீதபேதி, சீதமும் இரத்தமுங் கலந்தபேதி, மலத்துடன் இரத்தம் வருதல், மூலக்கடுப்பு அடிவயிற்றுநோய் முதலான வியாதிகள் குழந்தைகள் முதல் பெரியோர்வரையில் யாருக்கிருந்தாலும் 4-வேளையில் இது அவற்றைத் தப்பாமல் கண்டிக்கும்.

ஒரு புட்டியின் விலை அணா 8.



## கர்ணபிந்து.

காதில் சீழ் வடிதல், காது குத்தல், காது கேளாதிருத்தல், காதில் நமைச்சல் முதலிய வியாதிகளுக்கு இந்த மருந்தில் 2-துளி காலை மாலைகளில் காதில் விட்டால், காதிலுள்ள நோய்களெல்லாம் நீங்கிவிடும்.

புட்டி 1-க்கு அணா 4.

வி. பி. தபாற்கூலி பிரத்தியேகம்.

## சர்வபடை சம்மாரன்.



சரீரத்தின் இடுக்கான இடங்களாகிய தொடையின் இடுக்கு, அக்குள், இடுப்பு முதலிய இடங்களில் சிறிது சிறிதாகப் படர்ந்து இரவில் ஓயாத நமைச்சலைத் தந்து நித்திரையைப் பங்கப்படுத்திச் சரீரத்துக்கு அதிக கஷ்டத்தை உண்டு பண்ணும் படைகள், ஒரே தடவையில் இந்தச் சர்வபடை சம்மாரன் என்னும் தைலத்தை உபயோகித்த மாத்திரத்தில் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும்.

புட்டி 1-க்கு அணா 4.

## ஓட்டோ லீலா.

எப்போதும் நீங்காத மனோல்லாசத்தை உண்டாக்குவதில் இந்த வாசனைத் திரவியம் மிகவும் சிறந்தது. எல்லோருடைய மனதையும் பிரமிக்கச்செய்து பலர்க்கும் ஆனந்தத்தையும் இன்பத்தையும் தந்து இதற்கு நிகரான சுகந்த மணமுடைய செண்ட் வேறொன்றுமில்லையென்று ஒவ்வொருவரும் எண்ணும்படி செய்யவல்லது. இதில் ஆல்கஹால் சாராயம் முதலியவைகளின் சம்பந்தமே கிடையாது. இந்த நீங்காத வாசனைத் திரவத்தை உங்களுடைய கைக்குட்டையிலாவது சொக்காய்களின் புறங்களிலாவது தடவிக்கொண்டால் சிறந்த பல புஷ்ப ஜாதிகளின் வாசனை கமழும், ஒரு நந்தவனத்தின் மத்தியில் நீங்கள் இருந்தால், அங்கு நின்றும் உண்டாகும் சுகந்த மணத்தை எவ்வாறு அனுபவித்துச் சுகிப்பீர்களோ அதனினும் பதின்மடங்கு சுகந்தத்தை இந்த அத்தரை உபயோகிப்பதனால் அனுபவிப்பீர்களென்பது திண்ணம்.




கிரயம் புட்டி 1-க்கு அணா 10. டை பெரிய புட்டி 1-க்கு ரூபா 1.

## மயிர் போக்கும் சூரணம்.

இதில் கொஞ்ச மெடுத்துத் தண்ணீரில் குழைத்து உரோமமுள்ள விடத்தில்பூசி ஐந்து நிமிஷத்திற்குப் பிறகு ஒரு கடுதாசி கார்டினாலாவது, ஓலை நறுக்கினாலாவது வழித்தால் மேற்படி மருந்து தடவிய விடத்திலுள்ள உரோம முழுவதும் இலகுவாய் நீங்கி மழமழப்பாகிவிடும். வேக்காடு எரிச்சல் முதலாகிய உபத்திரவங்கள் உண்டாகா. புட்டி 1-க்கு அணா 8.

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# எமது சொந்தப் பிரசுரங்கள்.

### இரத்தினபுரி இரகசியம் 2 பாகம் — 4 0 0

இதில் மிக்க ஆச்சரியமுள்ளனவும், நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருட்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்படுகின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணரவேண்டிய இலௌகிக ஆசார விஷயங்களைப்பற்றிய நீதிகள் ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றன.

### அமராவதி 2 பாகம் — 4 0 0

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையானநடக்கையும், ஊக்கமுமுடையவனாயிருந்தால் அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துகளிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்றாய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அசம்பாவிதமெனத்தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியையளிக்கும்.

### மஞ்சள் அறையின் மர்மம் — 1 8 0

இதுகாறும் அனேகம் துப்பறியும் நாவல்களையும், இதர துப்பறியும் நாவல்களையும் வாசித்திருப்போர் இதனைப் படிப்பதால் இத்தகைய மிக்க ஆச்சரியமும் சாமர்த்தியமுமான துப்பறியும்நாவல் இதுகாறும் எழுதப்படவில்லையென்று எளிதில் உணர்வார்கள். இதில் குற்றம் செய்தவனுடைய சாமர்த்தியச் செயல்களும் குற்றத்தைக் கண்டுபிடிப்பவனுடைய சாமர்த்தியச் செயல்களும் ஒன்றுக்கொன்று இணையற்றனவாகவே யிருக்கும். குற்றம்நடந்த இடத்தின் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

### கமலசேகரன் — 1 12 0

இது, ஓர் சுத்தவீரனுடைய அதிசயக்கதை. இக்கதாநாயகன் உயர்குலத்தில் பிறந்தவனே யெனினும் தன் சிறிய தந்தையின் மோசச்செயலால் அனாதைபோல் அன்னியரால் வளர்க்கப்படுவதும், பிறகு தன் தந்தையர்களின் ஆவேசங்கள் இவனெதிரிற்றோன்றி இவனுக்கு வேண்டிய சமயங்களிலெல்லாம் உதவிசெய்வதும் இக்கதையில் மிக்க ஆச்சரியமாகவிருக்கும்.

### குணசுந்தரன் — 0 12 0

கீழ்மக்கள் சகவாசத்தால் தீமையே உண்டாகுமென்பது இதனால் நிரூபிக்கப்படுகின்றது. இதில் கதாநாயகன் தன் நண்பனுக்குச் செய்யும் உதவிகளுக்குப் பதில் அவன் செய்யும் தந்திரமான தீங்குகள் ஆச்சரியத்தைக்கொடுக்கும்.

### தினகரசுந்தரி — 1 0 0

இதில், இக்கதாநாயகி ஆண்வேடந்தரித்துத் தன் கணவனுகிய செல்வச்சிமானுடைய் கோரச் செயலைக் கண்டுபிடிப்பது மிக்க வியப்பாயிருக்கும். அதிதுஷ்டரான கள்ளரிடம் சிக்கிக்கொண்டு அவர்களைச் சாமர்த்தியமாய் ஏமாற்றிவிட்டுத் தப்பித்துக்கொண்டு வந்துவிடுவது மிக்க வியப்பாயிருக்கும்.

### நிமித்தியகுறி சாஸ்திரம் — 0 4 0

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

### ஆனந்தவிங் — 2 0 0

இலண்டன் சாமர்த்தியத் திருடர்கள் என்ற நாவலை வாசித்த நண்பர்களனைவரும் அதன் இனிமையை நன்குணர்ந்தே யிருப்பீர்கள். அதைப் போலவே இதில் பல துப்பறியும் கதைகள் அடங்கியிருக்கின்றன.

### கர்ணன் சரிதை — 0 12 0

'கார்த்திகைக்குப் பின் மழையில்லை, கர்ணனுக்குப் பின் கொடையில்லை' என்னும் பழமொழி இதனை வலியுறுத்தும். கர்ணன் தருமன் முதலானவரை எளிதில் வதைக்கும் ஆற்றலிருந்தும் அவன் தன தாய்க்கருளிய வாக்கினை யுன்னி அவர்களுக்கு யாதொரு தீங்கும் செய்யாதொழிந்தனன். இதனால் அவன் வாய்மையும் வீரமும் வெள்ளிடை மலைபோல் விளங்கும். இம்மட்டோ! பாண்டவர் தன்னுடன் பிறந்தாரென்றறிந்த பின்பும், அவர்களைச் சாராது துரியோதனன் தனக்குச் செய்த பேருதவியை வியந்து அவன் பொருட்டுப் பாண்டவருடன் போராடி உயிர் துறந்தான். ஆகா! அவன் எத்துணைச் செய்நன்றி யறிதலுள்ளவன்.

### அங்கதன் — 0 4 0

இச்சரித்திரம் இதிகாச ரத்னமாகிய இராமாயணத்தின்கண் இருப்பது அறிவமிர்ந்த மகவின் சுகுணங்களை இனிதெடுத்துக் காட்டவல்லது. இதில், அங்கதன் தூதுபோகுந் திறமும், எதிரியின் நயவஞ்சகப் பேச்சுக்கிணங்காமல் வந்தகாரியத்திற் றிடமனதோடிருந்து, அவனது துர்ப்பலங்களை நிர்ப்பயமாய் எடுத்துரைக்குஞ் சாதுரியமும் படிப்பவர்க்குங் கேட்பவருக்கும் உற்சாகத்தையும் மனக்களிப்பையும் தரும்.

### சம்பந்தமூர்த்தி — 0 7 0

இப்புத்தகம் சகோதர நேசத்தைப்பற்றிப் பேசும் அருமையான நாவல். இதில், சம்பந்தமூர்த்தியென்னும் மூத்தவன் தன் அன்னையிடம் காட்டும் அன்பும், தன்மீது வீண்பழி சுமத்திய தன் தம்பியிடம் காட்டும்விசுவாசமும், கடைசியில் தன் அன்னையின் மனத்திருப்திக்காகத் தன் தம்பி செய்த கொலைக்குற்றத்தைத் தான் ஏற்றுக்கொண்டு அவனை விடுவிக்கும் உதாரகுணமும் படிப்பவர்களுக்குப் பெரும் வியப்பை யுண்டாக்கும்.

### வீரத்தன்மையுள்ள ஹிந்து மாது சிரோமணிகள் — 0 10 0

இது, எட்டு மாதுசிரோமணிகளின் வீரச்செயலை விளக்குவது. இதில் அவர்கள் கற்போடு சுத்தவீரரான ஆடவரும் அஞ்சி பிரமிக்கத்தக்க வீரத்தன்மை காட்டுவதும், அவர்களின் புத்தி சாதுரியமும், பிராணனைத் துரும்பாய் மதிக்கும் தைரியமும் உற்சாகத்தை உண்டுபண்ணும்.

### ஸ்ரீ ராமாயண ஓடம் — 0 3 0

இந்த ஸ்ரீராமாயண ஓடம் எளிய நடையில்பாடி அச்சிடப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்தை யாவரும் வாங்கிப்படித்து எளிதில் ஆறுகாண்டங்களின் சரித்திரங்களையும் நன்குணர்ந்து சந்தோஷிக்கலாம்.

### பகவத்கீதா சங்கிரகம் — 0 2 6

இது, பகவத்கீதை யென்னும் அரியநூலின் இரத்னச் சுருக்கம், தெளிவான தமிழில் எழுதப்பட்டுள்ளது.

### கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்த கதை — 0 5 0



### பவளத்தீவு 2-பாகம் — 3 0 0

இக்கதையில் ஒரு செல்வச் சீமான் பேராசையால் செய்யும் குற்றத்திற்காக அவன் சந்ததியார் கொடிய சாபத்தை யனுபவிப்பது யாவர்க்கும் மேலான படிப்பினையைக் கற்பிக்கும். இதில் வரும் ஒவ்வொரு ஆசாமியின் சரித்திரமும் அவரவர் தத்தமது நடக்கைகளுக்குத் தக்க பலனை முடிவில் அடைவதும் ஒவ்வொரு நேர்த்தியான நீதியைப் போதிக்கும். இக்கதை ஆரம்பமுதல் முடிவுவரை வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்து கொண்டு மிக்க களிப்பை யளிக்கும்.

### அற்புத நவநீத ரம்பை — 1 0 0

இதில், கதாநாயகி பருவகாலமடைந்து மணமின்றிச் சகல வித்தைகளிலும் புத்தி மீறின தன் தமையனை யழைத்துக்கொண்டு புரவியின்மீதேறி வனத்திற் சென்று வேட்டையாடி யிரவில் கானில் அவனுடன் துயில் செய்து பொழுதுவிடிந்தவுடன் விழித்தெழுந்து தமையனைக் காணாது பதறி அருகிலிருந்த வனங்களிற் புகுந்து அலைந்து தியங்குவது சோகரசமாயிருக்கும். பின்பு கேசரிமார்க்கம் பறந்து தனது தமையனை யெடுத்தேகிய பஞ்சமுக இராட்சதனை சம்மாரஞ்செய்வது பயங்கரமாயிருக்கும்.

### சண்டோபாக்கியானம் — 0 6 0

இது புதிதாகச் செந்தமிழ் நடையில் எழுதப்பட்ட ஓர் உண்மைச் சிவபக்தனுடைய புண்ணிய சரிதை. பிரமோத்தர காண்டத்திலிருக்குங் கிளைக்கதைகளுள் ஒன்றாகும். சிவ ஸ்தோத்திரப் பாடல்களும், சோபமும் பக்தியும் நிறைந்த செய்யுட்களும், நீதிச் செய்யுட்களும் சேர்க்கப்பட்டு எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

### பீஷ்மவிஜயம் — 0 10 0

பீஷ்மர், ஒப்புயர்வற்றவீரர், ஸத்திய ஸந்தர், பிதுர்பக்தி வாய்ந்தவர், மகா நீதிமான், இராஜதந்திர நிபுணர், கடவுட்பக்தி வாய்ந்த யோகி—இத்தகைய மகானுடைய குணங்களெல்லாம் இச்சரித்திரத்தில் வெகு அழகாகச் சிறந்த நடையில் விளக்கியுள்ளன.

### தசாவதார மகிமை — 0 6 0

உலகத்தில் தருமங்குறைந்து, அதருமம் தலை யெடுக்கும்போது, சாது ஜனங்களை ரக்ஷிக்கவும், அசாதுக்களை சிக்ஷிக்கவும் நான் அவதாரஞ் செய்கிறேன் என்று பகவான் கீதையில் கூறியபடி, தாம் எடுத்தருளிய அவதாரங்கள் பலவற்றிலும் சிறந்துள்ள "தசாவதாரங்களின் மகிமை"யை செந்தமிழ் நடையில் விளக்கமாக எழுதி, அச்சிடப்பட்டிருக்கிறது.

### கோமளவல்லி — 0 8 0

இதில், கோமளவல்லி அம்மாளுக்கும் சத்தியவல்லி அம்மாளுக்கும் நடந்த சக்களத்திப் போராட்டம் லீலாவதிக்கும் சுலோசனைவுக்கும் ஏற்பட்ட அக்காதங்கை சக்களத்திப் போராட்டத்திற்கு அதிகமாகவிருக்கும். கோமளவல்லியால் துரத்தப்பட்ட உத்தமி சத்தியவல்லி காளியம்மன் ஆலயத்திலிருந்த ராக்ஷசன் பிராணனை யடியாடு வாங்குவதும் இன்னும் அனேக சாமர்த்தியங்களும் விளங்கும்.

### ஞானரத்தினம் — 0 4 0

இது, வேதாந்தஞானத்தைப்பற்றிய சில சிந்தனைக்கட்டுரைகள் அடங்கியநூல்.

### கனகரத்தினம் — 0 8 0

இஃதோரினிய நாவல். இதற்கொப்பான நாவல் இதுவரையில் வெளிவந்திராதென்பது திண்ணம். இதில் சோகரசம் இத்தன்மைத்தென நன்கு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது.

**இந்திராபாய்** 2 8 0

இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்காம் என்ற கள்வன் கல்வி, சாத்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமார்த்தியம் முதலியயாவும் உடையவனாதலின், அவன் தன்கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட, தன்சுய உருவத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலைகளவுகள் அதிசயமானவைகளே. இந்திராபாயி பன்முறைகளில் அவனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணபத்துகளிலிருந்து தப்புவதும், அவளைக் காப்பாற்றவும், முஷ்டிக்காரத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணராவ் செய்யும் சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்குப் பிரமையை யுண்டாக்கும்.

**தபால் கொள்ளைக்காரர்கள்** 0 14 0

இந்நாவலில் கல்வியும், சூக்குமபுத்தியும் அதோடு செல்வமுமுடையவன் உள்ளுக்குள்ளாகவேயிருந்து தபாலில்வரும் விலையுயர்ந்த பொருள்களைக் களவாடுவது அதியாச்சரியமாக விருக்கும். துப்பறிபவன் பன்முறை பிராணபத்தில் சிக்கி, அக் களவு நடக்கும் இரகசியவழியையும், கொலையைப்பற்றிய உளவையும் அறிந்து, கடைசியில் அக்கள்ளக்கூட்டத்தைப் பிடிப்பது அதிசயத்தை யுண்டாக்கும்.

**லோகநாயகி** 1 0 0

பண ஆசை எத்தகைய பெரும்பாதகத்தையும் செய்யத் தூண்டும் கொடிய பேய் என்பதும், அக்கிரமஸ்தரும், நம்பினவர்களுக்குத் துரோகம் செய்யும் பாதகரும் முடிவில் ஆண்டவனால் எப்படியும் தண்டிக்கப்படுவார்கள் என்பதும், நீதியும் சத்தியமுமுடையோர் முதலில் கஷ்டத்தை யனுபவித்தாலும் முடிவில் பூரண நன்மையை யடைவார்கள் என்பதும், இக்கதையில் நன்கு நிரூபிக்கப்பட்டு வியப்பையும் உற்சாகத்தையும் அளிக்கும்.

**மதனாம்பாள் 2-பாகம்** 3 0 0

இதில், காளிங்கனாகிய லோகநாதன் என்னும் ஓர் நயவஞ்சகன், சகோதரத் துரோகியாய் அவனை அடுத்துக் கெடுத்தலும், பட்டாபிராமன் என்னும் ஓர் உத்தமனைக் காதலித்திருந்த மதனாம்பாள் என்னும் உத்தமியைத் தான் மணஞ்செய்துகொள்ள விரும்பி, வேலாயுதன் என்பவனைத் தன் மோசச் செய்கைகளுக்குத் துணைக்கருவியாகக்கொண்டு பல வஞ்சனைகளைச் செய்து, மதனாம்பாளை ஆதரித்துவந்த பாங்கிக்காரர் மனைவியாகிய விமலாபாயைப் பயமுறுத்தி, மதனாம்பாளைத் தன் விருப்பத்திற் கிணங்கச்செய்வதும், பாங்கியில் மகாமாயக் களவு நடத்தி அக்குற்றத்தை நிரபராதியாகிய பட்டாபிராமன்மேல் சுமத்துவதும் படிப்போர்க்கு ஆச்சரியத்தை விளைவிக்கும்.

**மதிசூதனன்** 0 10 0

இஃதோர் இனிய செந்தமிழ் நாவல். இதில், படிக்கப் படிக்கப் பரமானந்தத்தைத் தரும் விகடங்கள் குரு சிஷ்ய தர்க்கபாவனையாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதில் கதாநாயகனுடைய சாமர்த்தியங்களெல்லாம் மிகவும் வேடிக்கையாக இருக்கும்.

**ஜீவகன்** 1 0 0

இது, பஞ்சகாவியங்களில் முதன்மைபெற்றதாகிய சீவகசிந்தாமணிக் கதையாம். எல்லாச் சரித்திரங்களிலும் ஜீவகன் சரித்திரம் பெயர் பெற்றதென்பதைக் கற்றோர் யாவருமுணர்வர், ஆயினும், சிந்தாமணி பழைய செய்யுட் காவியமாகவும், கடின வுரையோடு கூடியதாகவு மிருப்பதால் அதிலுள்ள இனிய கதையை யாவரும் படித்துணர்தல் அரிதாயிருந்து வந்தது. அக்குறை நீங்கவே இக்கதை எழுதப்பட்டிருக்கிறது.



**சுவாணம்பாள** 0 12 0

இதில், துப்பறிபவன் கதவிற்பட்டிருந்த ஒரு பெருவிரற்குறியின் அடையாளத்தைக்கொண்டு குற்றவாளியைக் கண்டுபிடிப்பதில் அவனுடைய சூக்ஷ்ம அறிவும் சாமர்த்தியமும் நன்கு விளங்கும்.

**பூங்கோதை** 0 10 0

இதில், பூங்கோதையின் கற்புள்ள நடைக்கையும், பிதாபக்தியும் எல்லாப் பெண்களுக்கும் நற்புத்திபுகட்டும். அக்கிரமஸ்தரைக் கடவுள் எப்படியும் தண்டிக்கிறார் என்பதும், உத்தமர்க்கு ஆச்சரியமான விதமாய் நல்ல க்ஷேமத்தை யளிக்கிறார் என்பதும் இக்கதையால் நன்கு நிரூபிக்கப் படுகின்றன.

**மின்சாரமாயவன்** 1 8 0

இதில், எலக்டிரிக் கண்ணன் பெரியண்ணன், ஸார்ஜெண்ட் கமலநாதன் இவர்களுடையபெருமை, சுந்தரபூபதி பிரபுவின் பணப்பெட்டிகள் களவாடப்படல், எலக்டிரிக்கண்ணன் பிச்சாண்டிபுரம் பிரயாணம்போவது, கமலநாதன் அதிக சாமர்த்தியசாலியாயிருந்தும் எலக்டிரிக் கண்ணனுக்கு ஐக்கியப்படல், ஜெயதேவியும் அவள் அத்தையும் இரத்னபுரியில் உலாவுதல், முதலியன வேடிக்கையான ஆச்சரியமாயிருக்கும்.

**விளையாட்டுச்சாமான் அல்லது விபரீதக்கொலை** 1 6 0

இக் கதையில் மூன்று அதிசயக் கொலைகள் நடக்கின்றன. குற்றத்தைச் செய்த ஆசாமிகள் மிக்க தந்திர சாமர்த்தியத்தோடு தங்கள் குற்றங்களைச் செய்கிறார்கள். அதனால் ஒரு நிரபராதி கைதுசெய்யப்படுகிறான். கடைசியில் துப்பறிபவனுடைய தைரியமும், துணிகரமும், புத்திசாலித்தனமுமான முயற்சிகளால் மிக்க சாமார்த்தியவான்களான குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்படுவதும், நிரபராதி விடுவிக்கப்படுவதும் மிக்க அதிசயத்தை விளைவிக்கும்.

**பத்மாவனி** 0 14 0

இதில் கூறப்பட்ட கள்ளர்களுடைய சாமர்த்தியங்களும், ஒரு பெண்பிள்ளை தன் சாமர்த்தியத்தாலும் தைரியத்தாலும் அக்கள்வர் எண்ணங்களை நிறைவேற வொட்டாமல் செய்வதும், அவர்களின் குற்றங்களைக் கண்டுபிடிக்க ருசுவுகள் கண்டுபிடிப்பதும், ஒரு நிரபராதிமேல் வந்த அபாண்டமான குற்றத்தை ருசுப்படுத்தி அவளைச் சிறைமீட்பதும் படிக்கப் படிக்கச் சந்தோஷத்தை விளைவிக்கும்.

**மதனபூஷணம்** 1 0 0

இதில் குற்றவாளி உயிரோடிருப்பவளை இறந்துவிட்டவளாகவும், இறந்துபோனவளை உயிரோடிருப்பவளாகவும், படித்தோர் நம்பும்படிசெய்வது மிக்க வியப்பை யுண்டாக்கும். அத்தகைய கள்ளனுடைய குற்றங்களைக் கண்டுபிடிக்கும் துப்பறிபவன் சாமர்த்தியத்தையும் படித்துப் பார்ப்பது மிக்க அவசியமானது.

**மலையாள பகவதி** 1 0 0

இது, அடங்கா நகைப்பை யுண்டாக்கும் ஓர் அற்புத தமிழ்க்கதை. பேய், பிசாசு, பில்லி, சூனியம் முதலியவற்றின் விநோதங்களும், மாந்திரீகம், பேயாட்டு, கோடாங்கிக்கூத்து முதலிய ஜெகஜாலமாயா விநோதங்களும், அண்டப்புளுகர், வண்டிப்புளுகர், வாக்கின்புளுகர், முதலிய சண்டப்பிரசண்டயுக் சண்டமாருதக் கோடையிடிப் பெரும்புலித் திகுர்ப்புளுகராகிய பூசாரிகளின் மோசக் கூத்துக்களும், அவுட்டுச்சிரிப்பை யுண்டாக்கத்தக்க பல அற்புத விநோதங்களும், இதில் விரிவாகக் காணப்படும்.

## ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சருடைய சரித்திரமும், உபதேசங்களும் — 1 12 0

இதில், இம்மகானுடைய அற்புத சரித்திரம், ஈசுவரபக்தி, ஈசுவரனுக்கும் ஜீவனுக்கும் உள்ள சம்பந்தம், குருவின் தன்மை, மதத்தினியல்பு, முமூட்சுக்களின் பேதங்கள், ஈசுவரப்பிரீதி, சாதுசங்கம், வைராக்கியம், ஞானத்திற்கிடையூறுகள், பெண்ணாசை பொன்னாசை, அகங்காரம், ஆகாரம், நிஷ்டை, ஈசுவரகிருபை, சுயாநுபூதி நிலைமை, முத்தியின் தன்மை, கோட்பாடுகள், சித்தர் லக்ஷணம், சந்நியாசியின் லட்சியங்கள், மனிதர் வகுப்பு, கிருகஸ்தர்க்குரிய போதனை, சித்திகள், கர்மநியதி முதலிய அநேக அரிய விஷயங்களும், இன்னும் பல சிறந்த உபதேசங்களும் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. இப்புத்தகத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சருடைய ஆப்டோன் படமும், சுவாமி விவேகாநந்தருடைய படமும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

## கைவல்ய நவநீத வசனம் — 1 8 0

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும்பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருளைத் தழுவிப் பல மகான்கள் பல நூல்களை இயற்றியிருக்கின்றனர். அவற்றுள் ஸ்ரீமத் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இது, எவரும் எளிதில் வாசித்துணரும்படி எம்மால் வசனமாக எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதனால் முத்திமார்க்கத்தை எவரும் நன்குணரலாம்.

## குசேலோபாக்கியான வசனம் — 1 0 0

இதில், குசேலர் மேல்கடலடைந்தது, வடமதுரைச் சிறப்பு, கடைவீதியின்சிறப்பு, அவந்திக்கடுத்த மலையுச்சியிலுள்ள பிராமணச் சேரியின் சிறப்பு, குசேலர் திருமணம், குசேலர் துவாரகைசேர்தல், ஸ்ரீ கண்ணனுடைய அந்தப்புரத்தின் சிறப்பு, கிருஷ்ணன் குசேலர் கொண்டுபோன அவலை வாங்கி உண்ணுதல், ஒருபிடி அவலுக்கு மேல் உண்ணலாகாதென்று உருக்குமணி கிருஷ்ணனைத் தடுத்தல், குசேலர் செல்வம் பெற்றுத் தமது நகரமடைந்தது, குசேலரை அவர் மனைவி உபசரித்துக் கொண்டாடுதல், குசேலர் விஷ்ணு தோத்திரஞ் செய்தல் முதலியன விளக்கமாக எழுதப்பெற்றிருக்கின்றன.

## மெய்க்காதலி — 0 8 0

இஃதோர் இனிய செந்தமிழ் நாவல். இதில் நட்பின் தன்மையும், தீச்செயலால் வருங் கேடுகளும், குணமுள்ள ஸ்திரீகள் கற்பைக்காப்பதும் இன்னும் பல விஷயங்களும் கூறப்பட்டிருக்கின்றன. கதாநாயகி தன் மணப்பந்தலிலிருந்து கள்ளிருளில் வெளிச்சென்று போய்க்கொண்டிருக்கும்போது அவள் புத்தி சாதுர்யத்தினால் ஒரு துர்த்தனை மாற்றித் தன் கற்பைக் காத்துக்கொள்ளுதலும், அவளுக்குக் கலியாணமாகின்றதும் மிகவும் வியப்பாயிருக்கும்.

## கற்கோட்டை — 2 0 0

இந்த நாவல் ஆரம்பத்திலேயே வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்து கொள்வதோடு முடியுமட்டும் அக்கவர்ச்சி நீங்காது. இது சரித்திர சம்பந்தமான நாவல் எனலாம். சில ஸ்திரீகளின் அற்புத நடக்கைகளும், துணிகரமான தீரச்செயல்களும், தம் காதலரிடத்தில் மெய்க்காதல்கொண்ட உத்தம ஸ்திரீகள் தம் காதலர் பொருட்டாய், எவ்வளவு வரையில் ஆடவருக்குச் சமமாய் நடந்துகொள்ளச் சக்தியுடையவர்களா யிருக்கிறார்களென்பதை நன்கு விளக்கும். நீதியைப் புகட்டும் ஓர் உயர்ந்த நூல். இதில் நூலாசிரியர் திருவுருவப்படமும் அமைக்கப்பட்டிருக்கிறது.



## நளினசுந்தரி — 0 10 0

இது, தேசாபிமானமும், ஜனாபிமானமும், மதாபிமானமும் நிறைந்து விளங்கும் இனியதோர் நாவல். இதில் வீரத்தன்மையும், விஸ்வாச குணமும் மிகுந்த வீரணத்தேவனது நடவடிக்கைகள் படிப்போர் மனதைப் பரவசப்படுத்தும். யானைக்காரனாகிய மகமத்கானுடைய ராட்சதயுத்தம் அதி விநோதமாயும் ஆச்சரியமாயு மிருக்கும்.

## சதானந்தர் — 1 4 0

ஒரு புருஷன் ஆய்ந்தோய்ந்து பாராது தன் மனைவியின்மீது வீண் சந்தேகங்கொள்ளுதலினால் அக்குடும்பம் எவ்வாறு சீர்கெட்டுத் துன்புறுமென்பதும், ஒரு குடும்பம் சண்டைச் சச்சரவின்றி, நித்திய சமாதானமாய் இனிது வாழ்வதற்கு அக்குடும்பத்தின் தலைவி எத்தகைய சாமர்த்தியமும், அன்பு பொறை யாதிய நற்குணங்களும், பெருந்தகைமையும் படைத்தவளா யிருக்க வேண்டுமென்பதும் இதில் நன்கு விளக்கிக்காட்டப்பட்டிருக்கின்றன.

## மனோன்மணி — 0 8 0

இஃதோரினிய கதை; இதில் மனோன்மணி அம்மாள் ஆண்வேடம் பூண்டு தன் மணாளனை மந்திரிகளுடன் தேடுவதும் அவளை ஆண் என்று மதித்துச் சில ராஜகுமாரத்திகள் ஒருவருக்கொருவர் சண்டையுடன் அந்த மனோன்மணி மேல் விழுவதும் மிக ஆச்சரியமா யிருக்கும்.

## துயராளன் கதை — 0 12 0

மோகவேணியின் விருத்தாந்தம், கம்மாளர்கள் கூட்டம், துயராளன் கள்ளரிடம் சிக்குதல், மோகவேணி பண்டாரத்தைக் காண்பது, கல்யாணி துயராளனுக்குப் புத்திகூறல், விஸ்வகுலநேயன் துயராளனைக் கடலில் தள்ளுவது, பத்திராசலன் தைரியச் செயல்கள், நால்வர் பிரயாணப்படலம், துயராளன் கப்பலில் வேலைக்கு அமர்தல், மோகவேணி கள்ளனிடம் துயராளனைத் தன் கணவர் இவர்தானென்று காண்பித்தது, துயராளன் விவாகத்திற்குப் பந்தல் சோடிக்கச்செய்வது, மோகவேணி தனது பிதாவைக் கண்டு பாதம் பணிதல் முதலிய அநேக விஷயங்கள் இதில் அடங்கியிருக்கின்றன.

## கீர்த்தி சிங்கன் — 0 8 0

இது கண்டிராஜன் கதை. இது நீதிகளடங்கிய சரித்திரம். பல பழமொழிகளுடனும் மேற்கோள்களுடனும் கூடியது.

## கண்ணன் பக்திரஸக் கீர்த்தனங்கள் — 0 3 0

## தேவசுந்தரி — 1 4 0

இஃதோர் மகாபதிவிரதையின் அரிய சரித்திரமாகும். இதில் தேவசுந்தரி, தனக்கு நேரிட்ட இக்கட்டைச் சகித்துக்கொண்டு தீயவழிகளி லிறங்கிய தன் புருஷனை ஆதரித்துக் கற்பின் தன்மையை விளக்கினது மிக்க வியப்பாயிருக்கும். இவள் கணவனுக்கு வரும் அநேக ஆபத்துகளை வெகு சாமர்த்தியமாய் நீக்கி அவனை நல்லவழியில் கொண்டுவந்த பிறகு இவள் மேன்மேலும் விருத்தி யடைந்தது புகழத்தக்கது.

## வீரநாதன் — 0 12 0

தேவராஜு, அவன் மனைவி இவர்களி[illegible]ற்போன குழந்தை சிக்கினது, மலைமேல் நடக்கு[illegible]கன்னி இவர்களின் செய்கை, இரண்டாவது கலி[illegible]முடிவு, மலைநாட்டு[illegible]லை விநோதம் முதலிய அற்புத விஷயங்கள் [illegible]ல் அடங்கியுள்ளன.

## ஜெகதல ஜெகஜ்ஜோதி — 0 [illegible] 0

**மாதவி மாதவன் அல்லது ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக்களவு 2 பாகம்** 2 0 0

இந்நாவல், இன்பரசம் பொருந்தியது; படிக்கப்படிக்கப்போவா கொடுக்கக்கூடியது. தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது.

அரிச்சந்திரன் சரிதை 0 8 0

'சத்தியமே ஜயம்' என்பதோர் பழமொழி. இதனை இந்த அரிச்சந்திரன் சரிதை நன்கு வலியுறுத்தும். அம்மன்னவன் தன் வாய்மையை நிலைநிறுத்தத் தன் நாடு நகரமனைத்தையு மிழந்ததும், தன் மனைவியையும், மகனையும் விற்றதும், அவனும் ஓர் புலையனுக் கடிமையாயினதும், விசுவாமித்திர முனிவரியற்றிய கொடுமைக ளெல்லாவற்றையும் மிக்க பொறுமையோடு ஏற்றுக்கொண்டதும் இதில் விளக்கப்பட்டிருக்கின்றன.

பூலோக லக்ஷ்மி கதை 0 10 0

பூலோக லக்ஷ்மியைக் கற்பழிக்கும் பொருட்டாக அரசனும் மந்திரியும் மோசஞ் செய்வதும், அன்னவர்களை வஞ்சித்து உபாயவல்லியம்மாள் அவளை ஓட்டிவிடுவதும், இன்னும் அநேக ஆச்சரியசெய்கைகளும் இதில் அடங்கியது.

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| விகடவல்லி | 0 | 6 | தக்கன் | 0 | 6 |
| காமசேனரசிகா | 0 | 8 | மங்களேசுவரன் | 0 | 8 |
| அகட விகட விலாச விநோதக்கதை | 0 | 10 | சிசுபாலன் | 0 | 8 |
| கண்டிராஜா நாடகம் | 0 | 12 | சீமந்தனி | 0 | 8 |
| விநோத கதைத்திரட்டு | 0 | 5 | அருணாசலபுராணம் | 1 | 8 |
| மருமக்கள் துயரம் | 0 | 2 | மணவாளன் | 0 | 3 |
| ஸ்திரீ புருஷ ஜாதகத் திறவுகோல் | 0 | 8 | பரசுராமன் | 0 | 3 |
| இந்துலீகா | 0 | 8 | சத்தியவசனி | 0 | 4 |
| வீணாகானன் | 0 | 8 | கருணாகரரும் சத்திய சீலரும் | 0 | 8 |
| கமலமதி | 0 | 8 | நாலுமந்திரி கதை | 0 | 4 |
| நீலக்கொடி | 0 | 5 | செய்யுட்பாடத்திரட்டு | 0 | 4 |
| தோடகம் | 0 | 8 | கண்ணபிரான் | 0 | 4 |
| கிருஷ்ணன் தூது | 0 | 8 | விமலன் | 0 | 4 |
| நரிவிருத்தம் மூலமும் உரையும் | 0 | 4 | பூர்ணவல்லி | 0 | 6 |
| ஸ்ரீபால[illegible] | [illegible] | 10 | மேனாமினுக்கி | 0 | 8 |
| உதய[illegible] | [illegible] | [illegible] | வைணவக் கொத்து | 0 | 8 |
| தசக்[illegible]ன் | 0 | [illegible] | தத்வஸங்க்ரஹ ராமாயணம் (அச்சில்) | | |
| போ[illegible]ரித்திரம் | 0 | 5 | ஸ்ரீ கிருஷ்ணசைதன்யர் சரித்திரம் (அச்சில்) | | |

187484

ஆனந்த[illegible]கினி ஆபீஸ், [illegible]பேட்டி நெ. 167, மதராஸ்.